
# சிசிலிய ராகங்கள்

2016



மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி
தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.
2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் ஜோசப்வாஸின் படிப்பினைகள்

- ஆன்ம வாஞ்சையோடு ஆன்ம தாகம் கொண்ட மக்களுக்கு உற்சாகம் ஊட்டி அவர்கள் தாகத்தின் நிறைவை அனுபவிக்க வாஞ்சையோடு உழைத்தவர்.
- பக்தி முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவராகவும் ஏழைகள்பால் மிகுந்த அன்பு கொண்டவராகவும் விளங்கினார்.
- ஏனையோர் அறியா வண்ணம் தான தர்மம் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார்.
- ஞான வாசிப்பும் குடும்ப செபமும் கொண்டவராக ஏனையோரையும் அவ்வாறான பக்தி முயற்சிகளில் ஈடுபடத் தூண்டியவர்.
- தாழ்ச்சி கீழ்ப்படிதல் உண்மைகளின்படி வாழ்ந்தவரும் அல்லாமல் இறைவன்பால் ஒன்றிணைந்து இருக்க ஆர்வம் கொண்டவர்.
- ஆசைகள், பற்று, உறவுகள் அனைத்தையும் இறைவனுக்காக தியாகம் செய்பவர்.
- இறந்த ஆன்மாக்களுக்குக்காக உதவி செய்யவும் பலிப் பூசைகளை ஒப்புக் கொடுப்பதிலும் முன்னிற்பவர்.
- தியான மனநிலையில் அனைத்தையும் மேற்கொள்பவர்.
- குறிக்கோளை அடைவதற்காக ஏழ்மையின் வடிவில் தன்னை மாற்றிக் கொண்டவர்.
- எந்த பதவிக்கும் ஆசைப்படாதவர்.
- பிறரின் குரல் இறைவனின் குரலாக கருதிச் செயற்பட்டவர்.

  யாரிடமும் தன்னை பெரிதாக வெளிக்காட்டாதவர்.
- கடின உழைப்பு மறைபரப்பு அருட்சாதனங்களை வழங்குவதில் முன்னிற்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசிலிய ராகங்கள்

மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி

தேசிய பாடசாலை

மட்டக்களப்பு.

**2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bt/St.Cecilia's Girls' College


| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | சிசிலிய ராகங்கள் |
| பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | : | 1876 |
| வெளியீடு | : | மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி |
| விலாசம் | : | 2ம் குறுக்குத்தெரு, மட்டக்களப்பு. |
| பாடசாலை அடையாள இலக்கம் | : | 1501023 |
| பாடசாலைத் தொகை மதிப்பீட்டு இலக்கம் | : | 14118 |
| மின்னஞ்சல் | : | ceciliabco@yahoo.com |
| இணையம் | : | http://www.ceciliabco.sch.lk |
| தொலைபேசி & தொலைநகல் | : | 065-2222588 |
| வெளியீடு | : | 2017 |
| பக்கங்கள் | : | (xi) + 117 |
| பிரதிகள் | : | 1000 |
| ISSN | : | 2279-1078 |
| அச்சுப்பதிப்பு | : | ஷெரோணி பிரிண்டர்ஸ், கூழாவடி, மட்டக்களப்பு. 065-2228660 |

| | | |
|---|---|---|
| Title of the Magazine | : | Cecilian Melodies |
| St.Cecilia's College Originally Started | : | 1876 |
| Published by | : | Bt/Bt/St.Cecilia's Girls' College |
| Address | : | 2nd Cross, Street, Batticaloa. |
| School ID No. | : | 1501023 |
| School Census No. | : | 14118 |
| E-mail | : | cecilia bco@yahoo.com |
| Web | : | http:\www.ceciliabco.sch.lk |
| Tel & Fax | : | 065-2222588 |
| Published | : | 2017 |
| Pages | : | (xi) + 118 |
| Copies | : | 1000 |
| ISSN | : | 2279-1078 |
| Printers | : | Sheroni Printers, Koolavady, Batticaloa. 065-2228660 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானமறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

புனித சிசிலியா மகளிர் வித்தியாலயம்
என்றும் வாழிய வாழியவே
எனப் புதல்வியர் நாம் அதன் பெருமை
பாடிப் புகழ்ந்திடுவோம்
இந்தப் புவியினிலே மேன்மை அடைந்திட
வாழ்த்திப் போற்றிடுவோம்.

மட்டுமா நகரின் மத்தியிலே
மாபெரும் கல்வியின் ஆலயமாம்
மகளிர் கல்வியின் நலன் ஒன்றே
மாபெரும் சேவையின் குறிக்கோளாம்
பல்கலையோடு நற்பண்புகளும்
பயிற்றிடும் பாங்கான நிறுவனமாம்
கௌரவம் பெறுவதல்ல பிறருக்கு
கௌரவம் அளிப்பது எம்கொள்கை
கருஞ்சிவப்பும் மஞ்சளும் எமது கொடி
அதைப் பணிந்து வணங்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Motto

**மேன்மை அல்ல சீர்மை**

**Not Honours But Honour**

## தூர நோக்கு *Vision*

**ஆன்மீக உறுதியோடு முழு ஆளுமை வளர்ச்சியை நோக்கிய உயர்அறிவுத் தேடல்**

## பணி நோக்கு *Mission*

முழு ஆளுமை வளர்ச்சிக்கான எத்தனங்களை ஆன்மீகப் பற்றுறுதியுடனும் பெண்ணிய நோக்கிலும் முன்னெடுக்கும் தொடர் தேடலின் ஊடாக, ஆளுமையும் ஆற்றலும் தூரநோக்குமுடைய மகளிரை உருவாக்குவதன் மூலம் எம் நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் பாரிய பங்களிப்பை நல்கும் கல்வியகமாக இக்கல்லூரி விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் குழுவினர்

அருட்சகோதரி அருள் மரியா (அதிபர்)
அருட்சகோதரி மரிய விஜித்தா
திரு.ம.சுந்தரலிங்கம்

**இதழாசிரியர்**

திரு.வே.கதிர்காமத்தம்பி

திருமதி.ப.ஜெயசீலன்
திருமதி.அ.வரதராஜ்
திருமதி.எஸ்.ரெனாறன்ஸ்
திருமதி.த.தனரூபன்
செல்வி.க.தர்ஷினி
திரு.க.அரியநாயகம்
திரு.சி.இளங்கீரன்
திரு.அ.ஜெயதீபன்

**மாணவிகள்**

செல்வி.எஸ்.பர்மிஷா
செல்வி.ப.பிரகாஷினி
செல்வி.எஸ்.ரக்ஷனா
செல்வி.ப.பாத்திமா பாரா
செல்வி.அ.சஜீவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Development Officers



**SEATED LEFT TO RIGHT**

(1) Mr.M.Suntharalingam
(2) Rev.Sr.Arul Mariya
(3) Rev.Sr.Vijitha

**STANDING FROM LEFT TO RIGHT**

(1) Mrs.L.Raveenthar (2) Mrs.W.A.Malkanthi
(3) Mrs.S.Vijayakumar (4) Miss.S.Dhevahi
(5) Mrs.M.Suventhiran

# Non Academic Staff



**SEATED FROM LEFT TO RIGHT**

(1) Mr.T.Nilojan (2) Mrs.M.Sethuram
(3) Mr.A.Varatharasan

**STANDING FROM LEFT TO RIGHT**

(1) Mrs.K.Srikamushthira (2) Mrs.P.Piriyakala
(3) Mrs.P.Lingeshwaran (4) Mrs.I.Sivaganesan
(5) Miss.S.Niroshini (6) Mrs.T.Sivasathan
(7) Miss.K.Niroshini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு



**SEATED LEFT TO RIGHT**

(1) Mr.V.Kathirkamathampy
(2) Mr.M.Suntharalingam
(3) Rev.Sr.Arul Mariya
(4) Rev.Sr.M.Vijitha
(5) Mrs.B.Jeyaseelan
(6) Mrs.A.Varatharajh

**STANDING FROM LEFT TO RIGHT**

(01) Miss.A.Sajeeva
(02) Miss.F.Fathima Farah
(03) Miss.S.Rakshana
(04) Mr.A.Jeyatheepan
(05) Mr.S.Elankeeran
(06) Mr.K.Ariyanayakam
(07) Mrs.T.Thanarupan
(08) Miss.K.Tharshini
(09) Miss.P.Pragashini
(10) Miss.S.Parmisha
(11) Mrs.S.Tenarentsz

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Management Committee



FROM LEFT TO RIGHT

(01) Mr.S.Elankeeran (02) Mr.I.M.Iruthayam (03) Mrs.M.R.Manoharan (04) Mr.M.Suntharalingam
(05) Rev.Sr.Arul Maria (06) Rev.Sr.Vijitha (07) Mr.S.Sivanesarajah (08) Rev.Sr.R.Kavitha
(09) Mrs.A.Nallathampy (10) Mrs.C.V.Neru (11) Mrs.A.Varatharaj



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAME LIST OF TEACHERS

| | | | |
|---|---|---|---|
| 1 | Sr. Arulmaria (A.C) | 37 | Mrs. B. Jehanathan |
| 2 | Sr. M. Vijitha (A.C) | 38 | Mrs. V. Pulendran |
| 3 | Mr. M. Sundaralingam | 39 | Mrs. P.J. Manimaran |
| 4 | Mrs. B. Jeyaseelan | 40 | Mrs. P. Sritharan |
| 5 | Mrs. A. Varatharaj | 41 | Mrs. K. Uthayasooriyan |
| 6 | Mrs. K. Premkumar | 42 | Mr. J Gajendren |
| 7 | Mrs. P. Christopher | 43 | Mr. M. Mahendran |
| 8 | Mrs. A. Ganesh | 44 | Mr. D. Dharshayan |
| 9 | Mr. I. M. Iruthayam | 45 | Mrs. S. Tenarensz |
| 10 | Mrs. A. Nallathamby | 46 | Mrs. P. Lesley |
| 11 | Mr. K. Rathakrishnan | 47 | Mrs. N. Baskar |
| 12 | Mrs. A. Ragavan | 48 | Mrs. T. Arun |
| 13 | Mrs. P.T.L. Edward | 49 | Mrs. S.P.E. Tharshan |
| 14 | Mrs. C. Gajendran | 50 | Mr. Arul Jeyanthan |
| 15 | Mrs. T. Iruthayanathan | 51 | Mr. S. Elankeeran |
| 16 | Mrs. K. Puvanendren | 52 | Mrs. M. Outshoorn |
| 17 | Mr. S. Sivanesarajah | 53 | Mrs. P. Kirupakaran |
| 18 | Mrs. D.N. Jeyaraja | 54 | Mrs. D.Y. Navaretnasingam |
| 19 | Mrs. S. Sritharan | 55 | Mrs. M. Shanthakumar |
| 20 | Mrs. T. Yogarajah | 56 | Mr. M. Vijayatharshan |
| 21 | Mrs. S .Guruparan | 57 | Miss. K. Tharshini |
| 22 | Mrs. J.M. James | 58 | Mrs. D. Sasitharan |
| 23 | Mrs. S. Chandrakumaran | 59 | Mrs. J. Janagan |
| 24 | Mrs. S. Jeyakanthan | 60 | Miss. T. Thiviyan Dias |
| 25 | Mrs. V. Jeevaratnam | 61 | Miss. P. Anojah |
| 26 | Mrs. Y.C. Jeyakumar | 62 | Miss. N. Sivalingam |
| 27 | Mrs. R. Manoharan | 63 | Mrs. D. Maheswaran |
| 28 | Mrs. K. Pradeepan | 64 | Mr. N. Pathmanathan |
| 29 | Mrs. K. Sothilingam | 65 | Mrs. T. Thanaruban |
| 30 | Mrs. C.V. Neruh | 66 | Mrs. Y. Thavendrarajah |
| 31 | Mrs. N. Peradeepan | 67 | Sr. M.R. Kavitha |
| 32 | Mr. V. Kathirkamathamby | 68 | Mrs. N. Chandrakumaran |
| 33 | Mr. A. Jeyatheepan | 69 | Miss. R. Viji |
| 34 | Mrs. T. Thayaparan | 70 | Miss. S. Vigneswaran |
| 35 | Mrs. T. Uthayakumar | 71 | Mrs. H. Richi Krishanth |
| 36 | Mrs. V. Pushparajah | 72 | Mrs. V. Partheepan |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 73 | Miss. P. Suwasini | 91 | Miss. P. Janani |
| 74 | Mrs. P. Uthayaruban | 92 | Miss. M. Sharuja |
| 75 | Mrs. T. Kanaharajah | 93 | Mr. S. Mohanaraj |
| 76 | Mr. A. Roy Ravinath | 94 | Mrs. V. Chinnaiya |
| 77 | Mrs. M. Prabaharan | 95 | Mrs. A.I. Frank |
| 78 | Mrs. H.M. Nazar | 96 | Mr. K. Ariyanayakam |
| 79 | Mrs. R. Ravinthiramoorthy | 97 | Mrs. J. Thavaraja |
| 80 | Mrs. V. Pulendran | 98 | Mrs. J.S. Jeyaseelan |
| 81 | Mrs. K. Kulendran | 99 | Mrs. S. Uthayakumar |
| 82 | Mrs. Y. Thamotharam | 100 | Miss. S. Mary Mathy |
| 83 | Mrs. S. Mathiyalagan | 101 | Miss. P. Saraniya |
| 84 | Mrs. M. Ithayaraj | 102 | Miss. A. Ruwani |
| 85 | Mr. B. Christopaul | 103 | Miss. B.B.C.Anushalini |
| 86 | Miss. T. Gayalini | 104 | Miss. R. Divya |
| 87 | Mrs. G. Rajikaran | 105 | Sr. Gracelyn (A.C) |
| 88 | Mrs. A.R. Thineshkumar | 106 | S. Aswinee |
| 89 | Miss. S. Revathy | 107 | Mrs. S. Kirupakaran |
| 90 | Mrs. M. Prasanthan | | |

## ***Development Officers***

1. Mrs. M. Suventhiran
2. Mrs. L. Raveenthar
3. Mrs. S. Vijayakumar
4. Miss. S. Devahi
5. Mrs.W.A.Mallika

## ***Non Academic Staff***

1. Miss. K. Samushtra
2. Mrs. Inthurani Vasantharajaha
3. Mrs. Supiramaniyam Niroshini
4. Mrs. Palasatkunaraj Priyakala
5. Mr. Thilagarajah Nilogan
6. Mr. Ali Agbar Ismail
7. Mr. Kanthasamy Velnayagam
8. Mr. Arumugam Varatharasan
9. Mrs. Inthumathy Sivaganesan
10. Mr. Muthaiya Sethuram
11. Mrs. P. Lingeswaran
12. Mrs. G. Tharshini


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2016 இல் தரம் 01 மொட்டுக்களுக்கான வரவேற்பு நிகழ்வு



## தரம் 01 மாணவர்களின் கல்விக் கண்காட்சியின் போது...



## ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வும், பெற்றோர் தின விழாவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School Development Committee



Seated from left :

Mr.Anthony Andrew, Mr.K.Arulanantham, Mr.M.Uthayakumar, Mr.M.Sundaralingam (Deputy Principal), Mr.W.J.Jeyaraj (General Secretary), Revd.Sr.Arul Maria (Principal), Mrs.P.Christopher (Hony Treasuer), Revd.Sr.M.Vijitha (Deputy Principal), Dr.(Mrs).S.M.Rajendram, Dr.(Mrs).A.N.A.Antony, Mrs.A.Varatharaj

Standing from Left :


Mrs.B.Jeyaseelan, Eng.(Mrs).Aruna Nancy, Eng.M.V.Basharan, Mr.S.Jeyakumar, Eng.A.D.Kamalanathan, Mr.V.Sivagnanam, Mr.A.Sugumar, Mr.K.Mohanadas, Mr.S.Sivanesarajah, Mr.I.M.Iruthayam, Mr.V.Pratheepan, Mrs.A.Nallathamby, Ms.S.Neeraja

# பழைய மாணவர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச் செய்தி




மனிதனை மனிதனாக அடையாளப்படுத்துவது அவனது சிறப்புப் பண்புகளாகும். அத்தகைய பண்புகளைப் பெறும் ஊடகமாக விளங்குவது கல்வி. கல்வியில் சாதனை படைக்கக்கூடிய ஊற்று பாடசாலை. அத்தகைய பாடசாலைகளில் கிழக்கு மாகாணத்தில் உயர்நிலையில் நிற்கும் தேசிய பாடசாலைகளில் ஒன்றான எமது சிசிலியா பெண்கள் கல்லூரியின் வருடாந்த சஞ்சிகையான சிசிலிய ராகத்தை இம்முறையும் மீட்பதற்கு தடைகள் இன்றி வழிசமைத்த இறைவனுக்கு முதல் நன்றிகள்.

2016ம் ஆண்டில் பெற்ற எமது பாடசாலையின் சாதனைகள், செயற்பாடுகள், மாணவர்களால் வெளிக்கொணரப்பட்ட அறிவூற்றுக்கள் வாழ்க்கைக்குத் தேவையான விளக்கங்கள் இன்றைய காலகட்டத்தில் பாடசாலை வளர்ச்சிக்கும் அதனை முன்னெடுக்குமுகமாகத் தெரிவிக்கப்படும் ஆசிரிய ஆக்கங்களும் அடங்கிய சிசிலிய ராகத்தைப் படிக்கும் பாடசாலை மாணவர்களும் பாடசாலைச் சமூகமும் ஏனையோரும் திருப்தியடைவர் என்ற நம்பிக்கை எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.


இம்மலருக்கு வாசனையையும் அழகையும் ஊட்டும் முகமாக பல ஆக்கங்கள் தந்து உதவியோருக்கும், இவ்வாண்டுக்கான சிறப்புமலராக மலரச் செய்த இதழாசிரியர் திரு.வே.கதிர்காமத்தம்பி அவர்களுக்கும், உப அதிபர்கள், ஏனைய மலர்க்குழு அங்கத்தவர்கள், அட்டைப்படம் அமைத்தோர் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Arul Maria

அருட்சகோதரி **அருள் மரியா** AC
அதிபர்
புனித சிசிலியா பெண்கள் கல்லூரி,
தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



இப்பிரதேசத்தில் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) வருடந்தோறும் வெளியிடும் 'சிசிலிய ராகங்கள்' சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடை-கின்றேன். மாணவர்களின் திறமையையும், அவர்களது ஆற்றல்கள் படைப்புக்கள் அனைத்தையும் இச்சஞ்சிகை வெளிக்காட்டி நிற்கின்றது. சாதனைகள் பல படைத்துவரும் புனித சிசிலியா பெண்கள் கல்லூரி சஞ்சிகை வெளியீட்டிலும் சாதனை கண்டுள்ளது. குறிப்பாக மாணவர்களது ஆக்கங்களும் ஆசிரியர்களது ஆக்கங்களும் சஞ்சிகைக்கு பெருமை சேர்க்கின்றது.

சஞ்சிகை வெளியிடுவது என்பது பெரும் காரியம். இக்கல்லூரியின் மலர்க்குழு சிறந்த முறையில் முனைப்புடன் ஈடுபட்டு இச்சஞ்சிகையை வெளியீடு செய்துள்ளது. வருடந் தோறும் கிடைக்கப்பெற்ற பாராட்டுக்கள், மாணவர்களின் அடைவு மட்டங்கள் என்பன வற்றைத் தொகுத்து ஒரே பார்வையில் பார்க்கக் கூடியதாக இச் சஞ்சிகை பேருதவியாக அமைந்துள்ளது. மேலும், பல புனித துறவிகளால் உருவாக்கப்பட்டு நிருவகிக்கப்படும் இப்பாடசாலையில் புனிதம் மேலோங்க வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் அனைவரும் இச்சஞ்சிகை வெளியீட்டிற்கு அக்கறையோடு உழைத்தமை போன்று அனைத்து செயற்பாடுக-ளிலும் உண்மையாக உழைத்து கல்விச் சமூகத்திற்கு இப்பாடசாலை வழிகாட்டி-யாக அமைய வேண்டும் என்ற வேண்டுகோளுடன் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.பாஸ்கரன்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

புது இசையூட்டி புதுப்பொலிவுடன் புது மணம் பரப்பும் எமது கல்லூரியின் 'சிசிலிய ராகம்' இவ்வருடமும் பல புத்தாக்கங்களை சுமந்து வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மாறிவரும் உலகின் மாற்றங்க -ளுக்கு ஏற்ப எமது கல்லூரியின் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் சிந்தனையில் உதித்த பல்வேறு சுய ஆக்கங்களைச் சுமந்து கொண்டு சிசிலிய ராகங்கள் மலர்வதைக் கண்டு பெருமிதம் கொள்கின்றேன். சிசிலிய ராகங்கள் சுமந்துவரும் ஒவ்வொரு புத்தாக்க சிந்தனையும் கற்கும் சமூகத்திற்கு உரமூட்டி கற்றல் வளம் மிகுந்த சமூகத்தினை உருவாக்கும் என்பதில் நம்பிக்கை கொள்கின்றேன்.காலத்தின் தேவைக்கு ஏற்ப மலர்ந்து இசை பரப்பும் சிசிலிய ராகத்திற்கு ஊக்கத்தோடு ஆக்கங்கள் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் மலர்க் குழுவினருக்கும் அழகுற அச்சுப்பதித்த பதிப்பகத்தினருக்கும் உளம் கனிந்த நன்றிகள்.

அன்புடன்,

**திரு.வே.கதிர்காமத்தம்பி**

இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசிலிய ராகத்தின் உள்ளே....


அம்மா (கவிதை)........................................ 01
பொது அறிவு........................................ 01
எழிலான சிட்டு (கவிதை)........................................ 02
திருக்குறள் ........................................ 02
நான் யாருமற்ற காட்டில்.... (சிறுகதை)........................................ 03
பாடம் பயில்வோம் (பாடல்)........................................ 05
சுவாமி விபுலாநந்த அடிகள்........................................ 05
இனிய உறவே (சிறுகதை)........................................ 06
குயிலும் மின்மினிப் பூச்சியும் (கவிதை) ........................................ 09
ஆசை (கவிதை) ........................................ 09
புவி வெப்பமடைதல் ........................................ 10
அன்னை தெரேசா ........................................ 12
பண்டுகாபயன் ........................................ 13
அறிவுத் துளிகள் ........................................ 13
பள்ளிப் பாலர் (கவிதை) ........................................ 14
சூரியன் (கவிதை) ........................................ 14
My Country ........................................ 15
இரு கேள்வி ஒரு பதில் ........................................ 16
சிந்திக்க சில சிந்தனைகள் ........................................ 16
பொது அறிவு ........................................ 17
பொது அறிவு ........................................ 17
Contribution of Education ........................................ 18
ஜோக்ஸ் ........................................ 20
பழமொழிகள் ........................................ 21
விடுகதைகள் ........................................ 21
உணவை வீணடிப்பது........................................ 22
வானவில் (கவிதை) ........................................ 24
Why I Love Books ........................................ 25
Oliver Twist ........................................ 25
To Fight Deadly Dengue Fever........................................ 26
Save the Earth ........................................ 27
மாணவனின் தனித்துவ ஆளுமை........................................ 28
உலகின் முதலாவது அதிசயம் ........................................ 29
உன்னை அறிந்தால்........................................ 30
சாற்றுவார் யாருமில்லை (கவிதை)........................................ 31
Most People want to be ........................................ 32
விடுகதைகள்........................................ 33
அம்மா நீ ! (கவிதை)........................................ 33





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தாய் மொழி.......... 34
பாடம் புகட்டும் பழமொழிகள்.......... 35
කොවිචිය .......... 39
மரணம் (கவிதை) .......... 39
The Olympic Games .......... 40
கல்வி (கவிதை) .......... 40
சில நிமிடம் சிந்திக்க.......... 41
சிந்தனைத் துளிகள் .......... 41
World's longer river .......... 42
இளைஞனே எழுந்துகொள் ! (கவிதை) .......... 43
நாத்தை நடவுங்கடி (கவிதை) .......... 43
இதய நோய்களுக்கு பகைவனாக.......... 44
மற்றவர்களிடம் பேசுவது எப்படி?.......... 45
News Papers .......... 46
வாழ்க்கையில் முன்னேற.......... 47
பொது அறிவு .......... 47
கல்வியறிவு .......... 48
A Healthy Mind .......... 49
பள்ளிப்பருவ நிலை (கவிதை) .......... 49
Midnight Sun .......... 50
சூழல் காப்போம் .......... 51
கருணையின் அன்னை.......... 52
இலங்கையில் இந்துமத வரலாறு.......... 53
எமது ஆசான்கள் (கவிதை) .......... 57
வரலாற்றுப் பதிவுகள் .......... 57
ஹிஜாபின் முக்கியத்துவமும்.......... 58
18 நல்ல செயல்கள் .......... 60
மூன்றெழுத்து (கவிதை) .......... 60
The Influenc of Social Network .......... 61
கனவுகள் (சிறுகதை) .......... 64
Importance of Value Education .......... 66
தேடி வந்த நோபல் பரிசு.......... 69
ஆமைத் தீவுகள் .......... 69
முட்டாள் கழுதை (சிறுகதை) .......... 70
Importance of Discipline .......... 71
நாட்டிய சாஸ்திரத்தில் பிரம்ம உலகு.......... 72
நீங்காத நினைவுகள் (கவிதை) .......... 73
பனீர் தயாரிப்பு .......... 74
சத்திய மறை காத்த சத்திய வீரர்.......... 76
பிரதான தொழிற்சாலைகளும் .......... 81



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඉද්දරයේ ඉතිහාසය ........ 82
The Hungry ........ 83
தேன் துளிகள்........ 83
வாழ்வை வளமாக்க........ 84
கடவுள் இருக்கிறாரா?........ 87
பெற்றோரின் பெருமைகள் ........ 88
சிறப்பான பாடசாலைக் கலாசாரமும்........ 89
Six Ethics of life ........ 93
சிந்திக்க சில துளிகள் ........ 94
தெரிந்து கொள்ளுங்கள்........ 95
எனக்குத் தெரிந்தது ........ 95
உங்கள் சிந்தனைக்கு ........ 96
கேள்வி பதில் ........ 96
6 இருந்து 60 வரை ........ 97
சங்கீத மும்மூர்த்திகள் அறிமுகம்........ 98
The Sri Lanka Competitions for the Performing Arts - 2016........ 103
மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட இலக்கிய விழா........ 105
G.C.E.(A/L) - 2016 ........ 106
தமிழ்மொழித் தினப் போட்டி ........ 107
2015 இல் நடைபெற்ற முத்தமிழ் விழா போட்டி முடிவுகள் ........ 108
Science Quiz Competition - 2016 ........ 109
Senior Poetic Drama - 2016 Provincial Level 1st ........ 109
Athletic Sports Meet - 2016 ........ 110
Games - 2016 ........ 110
Sri Lanka Association for the Advanement of Science ........ 111
Junior Drama ........ 111
Maths Quiz 2016 ........ 111
Vincent De-Paul Bible Quiz ........ 111
மனைப்பொருளியல் விஞ்ஞான அளவை அளத்தல் போட்டி - 2016 ........ 112
விவசாய விநாடி வினாப் போட்டி - 2016 ........ 112
சிங்கள தினப் போட்டி - 2016 ........ 112
Disaster Management Competition - 2016 ........ 112
All Island Competition Best School " Science Copies, Nature's........ 112
Australian National Chemistry Quiz - 2016 ........ 112
National Green Award - 2016 ........ 113
National Productitity - 2016........ 113
Kudos to all the Achievers of The G.C.E.(O/L) - 2015........ 113
Energy Conservation Quiz - 2016........ 114
2016 இல் நடைபெற்ற நிகழ்வுகள் ........ 115
நன்றி பகர்கிறேன்........ 117



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வலி கண்டு ஓடும் உலகில்
வலி கொள்ளக் காத்திருக்கும் உயிர்
உணவின்றி இருந்தாலும்
உதிரம் கொண்டு உணவளிப்பாள் அம்மா
உணவின்றிப் போனாலும்
உயிர் காத்தே தான் மடிவாள் அம்மா
அகராதி பல கோடி போனாலும்
அர்த்தம் காண முடியாத அன்பின்
இருப்பு அம்மா
கடவுள் இருக்கிறார் என்றால்
அது அன்னையின் வடிவில் தான்



**அக்ஷிகா அன்டனிராஜ்** – தரம் 6$^{S}$

## பொது அறிவு

(1) இலங்கையின் தேசிய மரம் எது?
**நாகமரம்**

(2) உலகின் முதலாவது பெண் பிரதமர் யார்?
**கௌரவ ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா**

(3) விண்வெளிக்கு முதன் முதல் சென்ற உயிரினம்?
**லைக்கா என்ற நாய்**

(4) அதிக நாட்கள் நீரில்லாமல் வாழும் உயிரினம்?
**ஒட்டகம்**

(5) பூனை மிக விரும்பி உண்ணும் செடி எது?
**குப்பைமேனி**

(6) நாய் மிக விரும்பி உண்ணும் புல் எது?
**பாலறுகு**

(7) யானைகளைப் பழக்கி அடக்கும் கருவி எது?
**அங்குசம்**

(8) இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்கியவர்?
**திரு. ஹென்றி ஸ்டில் ஒல்கொட்**

(9) இலங்கையின் முதல் ஜனாதிபதி?
**சேர். வில்லியம் கொபல்லாவ**



**R.S. இவோன் அக்ஷனா** – தரம் 5$^{C}$




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழிலான சிட்டு

சிட்டு சிட்டு சிட்டு
சின்னச் சின்ன சிட்டு
வண்ண வண்ணச் சிட்டு
தேன் பருகும் சிட்டு

சின்னஞ் சிறிய மனதில்
துள்ளித் திரியும் சிட்டு
வண்ண வண்ணச் சிட்டு
கொஞ்சித் திரியும் சிட்டு

சின்னஞ் சிறிய சிறகை
அடித்துப் பறக்கும் சிட்டு
குட்டிக் குட்டி உணவை
அழகாய் உண்ணும் சிட்டு

குழந்தையின் எண்ணத்தை
கொண்டுள்ள சிட்டு
வண்ண வண்ணப் பூப்போல
சிரிக்கும் சிறிய சிட்டு

ஒளி வீசும் தாரகை போல்
பாட்டுப் படிக்கும் சிட்டு
எழில் நிறைந்த உலகில்
எழிலான சிட்டு



ஜெ. ஜீன் ஜெனிறா – தரம் 6S



# திருக்குறள்

திருக்குறளின் முதலாம் பாகம் இல்லறம் தொட்டு துறவறம் பற்றிய சிறப்பைக் கூறுகின்றது. முதலாம் பாகத்தில் 38 அத்தியாயங்கள் இருக்கின்றன. அரச நெறி, இராஜதந்திரம், போர்த்தந்திரம் உள்ளடங்கலாக உலக விவகாரங்கள் பற்றிக் குறளின் இரண்டாம் பாகம் கூறுகின்றது. இதில் 70 அத்தியாயங்கள் உள்ளன. குறளின் மூன்றாம் பாகத்தில் ஆண் - பெண் இல்லற உறவுகள் பற்றிக் கூறும் 25 அத்தியாயங்கள் காணப்படுகின்றன. மேற்கூறிய இரண்டாம் பாகக்குறட்பாக்கள் அரசர்களுக்கும் படைத்துறையினருக்கும் மாத்திரம் உரியதன்று. உலகியல் வாழ்வில் ஈடுபடும் பொது மக்கள் உள்ளடங்கலான அனைவருக்கும் பொருத்தமான கருத்துக்கள் அவற்றில் செறிந்துள்ளன. ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்போரும் வரலாற்று ஆசிரியர்களும் இரண்டாம் பாகக் குறட்பாக்களை இன்றும் துருவி ஆராய்ந்து வருகின்றனர். இத்தனை சிறப்புக்கள் வாய்ந்த குறள் நூலின் உண்மையான பெயரும் அதன் ஆசிரியர் திருவள்ளுவரின் உண்மையான பெயரும் இன்றுவரை தெரிய வரவில்லை. சிறியது, சுருக்கமானது, குறுகலானது என்பது குறளின் பொருளெனக் கொள்ளலாம்.



வி. தணியேலா – தரம் 6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனிதன் என்பவன் அனுபவிக்கப் பிறந்தவன். அவன் துன்ப துயரங்களை மட்டுமல்லாது நல்லதையும் கெட்டதையும் அனுபவிக்க வேண்டும் என்பார்கள். அந்த வகையில் நான் இயற்கை எழில் கொஞ்சும் என் தாய்த் திருநாட்டின் இயற்கையை இரசிக்க வேண்டுமெனும் ஆசையில் என் தோழிகள் சிலருடன் எமது நகரத்திற்குத் தொலைவில் உள்ள இயற்கை அழகை இரசித்துக்கொண்டு சென்ற போது நான் தனிமையாக்கப்படுகின்றேன் என்பதை அறியாமலே அந்த காட்டிற்குள் தனிமையாக்கப்பட்டேன். அப்பொழுது காலை பத்து மணியிருக்கும் எங்கு பார்த்தாலும் மரங்களும் கொடிகளும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு ஒரு திரட்சியாகவே இருந்தது.

“அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” என்பது இதுதான் போலும் என்று சிந்தித்தவாறே எங்கே செல்வது என்று தெரியாமல் காட்டினுள் நின்று சத்தமிடுவதற்கு பயம் கொண்டவளாக சூரியனுடைய கதிர் வருகின்ற திசையை நோக்கி நடக்கத் தொடங்கினேன். எனது பாதையைப் பின் தொடர்ந்து யாரோ வருவது போன்று உணர்வு எனக்குத் தோன்றியது. திரும்பிப் பார்க்க வேண்டுமென்று எனது உள்ளுணர்வு கூறினாலும் என்னால் பார்க்க முடியவில்லை. காரணம், நான் அந்தளவிற்குப் பயந்து கொண்டிருந்தேன். அவ்வாறு சென்று கொண்டிருக்கையில் அந்த காட்டிலிருந்து அமைதியைக் குழப்பியவாறு பல்வேறு ஒலிகள் அங்கு எழுந்தன. அந்த ஒலிகளை இதுநாள் வரை கேட்டிராத நான் செய்வதறியாது தவியாய் தவித்துக்கொண்டு செல்கையில், மிருகங்களின் ஒலிகளான சிங்கத்தின் கர்ஜனையும், புலியின் உறுமலினையும், காட்டெருமையின் கதறலையும், குரங்குகளின் கத்தும் சத்தத்தையும் கேட்டுக் கொண்டு வாழ்வின் விளிம்பில் நிற்பதாகவே உணர்ந்தேன்.

இவற்றுக்கிடையில் கிளிகளின் பேச்சும் குயில்களின் பாட்டும் மயில்களின் அகவலும் என்னை மகிழ்வித்தது. அந்த நிமிடம் என்னை மறந்து நான் வந்த பாதையைத் திரும்பிப் பார்த்ததும் எனது தோழிகள் என்னைப் பற்றி பேசிக்கொண்டு என்னைத் தேடுவதைக் கண்டேன். அவர்கள் என்னை கண்டுகொள்ளவில்லை. அதைக் கண்ட நான் என்னை அறியாமல் சத்தமிட்டேன். அவர்களும் என்னைக் கண்டதும் ஆரத் தழுவிக்கொண்டனர். அந்த வேளையில் காட்டின் நிசப்தம் ஒருகணம் கலைந்து போனதை உணரக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் காட்டில் எங்கு செல்வதென்று தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றபோது ஒரு காட்டெருமை எங்களை நோக்கி வருவதைக் கண்டோம். என்ன செய்வ-தென்று தெரியாமல் ஒருவர் பின் ஒருவராக ஓடிக்கொண்டு வருவதைக் கண்ட மான்கள் அவற்றை நாம் துரத்துவதாக நினைத்துக் கொண்டு அவை ஓட, அவற்றைக்கண்டு பல்வேறுபட்ட மிருகங்களும் ஓட, காடு ஒருகணம் விளையாட்டு மைதானமாகவே மாறியது.

நாங்கள் அனைவரும் ஓடிச் சென்று காட்டாறு ஓடிய மணற்பரப்பு ஒன்றில் உட்கார்ந்து கொண்டோம். அப்போதுதான் சூரியனுடைய ஒளி எங்கள்மீது பட்டது.வெயிலைக் கொண்டே நேரம் பன்னிரண்டு மணி என்பதை உணர்ந்-தோம். உச்சிவெயில் காலில் பட்டது. அப்போது எங்களுக்கு கடும் பசியும் தாகமுமாகவும் இருந்தது. தண்ணீரைத் தேடி ஆற்று வழியை நோக்கி நடந்தோம். தண்ணீரைக் காணவில்லை. நடந்து செல்லும் போது ஆற்று வழியே பல்தரப்பட்ட மிருகங்களின் கால் தடங்களைக் கண்டோம். குறைந்திருந்த பயம் அவற்றைக் காணக்காண கொஞ்சம் கொஞ்சமாகத் தாகத்தையும் மிஞ்சிக்கொண்டு செல்வதை உணர்ந்து வாய்விட்டு அழ முடியாமல் ஒருவர் பின் ஒருவராக கைகோர்த்-துக்கொண்டு நடக்கத் தொடங்கினோம். கடும் வெயில், சுடும் மணல் எல்லாம் எங்களை நடக்கவிடாமல் தடுத்தாலும் எங்களுக்குள் இருந்த பயம் நடக்கச் சொல்வது போல நாங்கள் நடந்துகொண்டிருக்கையில் ஆற்றின் ஒரு கரையில் மனிதர்களின் குரல் கேட்டது.

அதைக் கேட்டதும், எங்கள் அனை-வருக்கும் இறைவனுடைய திருவருள் கிடைத்தது என்றே உணர்ந்தோம். எங்கள் ஒவ்வொருவருடைய முகத்திலும் இனம் புரியாத மகிழ்ச்சி அந்த திசையை நோக்கிச் சென்றோம்.



அது ஒரு வயல்வெளி ஆகும். அங்கே அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குடிசைகள். அதி-லொரு குடிசைக்குச் சென்று பயத்தினால் பசியை மறந்திருந்த நாங்கள் பரிதாபமாக "ஐயா! ஐயா!" என்று அழைத்தோம். ஒருவர் வெளியே வந்தார். அவரைக் கண்டதும் பயமாக இருந்தாலும் பயப்படாமல் "குடிப்-பதற்கு தண்ணீர் வேண்டும்" என்று கேட்-டோம். அவர் சிறு குடம் ஒன்றைக் காட்டி அதிலிருந்து குடிக்கச் சொன்னார். தேவா-மிர்தம் கிடைத்த உணர்வோடு தண்ணீரைப் பருகிக்கொண்டே நாம் செல்ல வேண்டிய இடத்தையும் அங்கு செல்வதற்கான வழி-யையும் கேட்டோம். "அங்கு செல்ல வேண்டு மென்றால் நடந்து செல்வது கடினம். வாக-னத்தில் சென்றால் தான் இன்றே வீட்டை அடைவீர்கள்" என்று கூறி எங்களை அழைத்துக்கொண்டு ஒரு சிறு வீதி வழியே சென்று ஒரு உழவு இயந்திரத்தில் ஏற்றி விட்டார். அவருக்கு நன்றி கூறிவிட்டு கிரா மத்தில் இருந்து நகரத்திற்கு வந்து சேர்ந்தோம்.




ப.அபிராமி – தரம் 8C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்



ஆமை அண்ணன் நடையைப் பாரும்
ஆடி மெல்ல வருகின்றார்
தாமே வீட்டை முதுகில் தூக்கி
தனியே சுமந்து வருகின்றார்

சின்ன வண்ணச் சிறுமி
சிறகை ஆட்டிப் பறக்கின்றாள்
வண்ணப் பூவைக்கண்டு – சுற்றி
வட்டம் இட்டுப் பறக்கின்றாள்

துள்ளி வெள்ளைத் தம்பி முயலார்
சுற்றிப் பாய்ந்து மகிழ்கின்றான்
வெள்ளைப் பஞ்சு மேனி கொண்ட
வீரன் என்று வருகின்றான்

பாலர் நாங்கள் இவற்றைப் பார்த்து
பாடம் என்று பயிலுவோம்
காலம் என்றால் சூழற்காட்சி
கண்டு பாடம் பயிலுவோம்



**த.டினோஷிகா** – தரம் 8E

# சுவாமி விபுலாநந்த அடிகள்



இலங்கையின் மட்டக்களப்பிலுள்ள காரைதீவு எனும் ஊரில் சாமித்தம்பியாருக்கும், கண்ணம்மையாருக்கும் மகனாக 1892.03.27ந் திகதி பிறந்தார். இவருக்கு 'மயில்வாகனன்' என்று பெயர் இட்டனர். இவர் தமது ஆரம்பக்கல்வியை கல்முனை மெதடிஸ் ஆங்கிலப் பாடசாலையிலும், மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார். இக்கல்லூரியிலேயே ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

1924 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் பௌர்ணமி அன்று இராம கிருஷ்ண மடத்தில் சேர்ந்து விபுலாநந்தர் அடிகளார் ஆனார். அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசியராக விளங்கி அப்பணியில் தொடராமல், தமிழிசை ஆய்வில் ஈடுபட்டு உழைத்து 'யாழ் நூல்' என்ற அரிய இசைத் தமிழ் நூலை 1947 இல் தந்து இம் மண்ணுலகை விட்டுப் பிரிந்தார். சிவானந்த வித்தியாலயத்தில் இவரது நினைவுச் சின்னமாக சமாதி உள்ளது.



**ஏஞ்சல் றுக்ஷானா** – தரம் 6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனிய உறவே...

காவ்யா வீடு திரும்பாததையிட்டு அலைபாயும் தன் எண்ணங்களுக்கு மத்தியில் பரீட்சைக்கு படித்துக்கொண்டிருந்தாள் சௌந்தர்யா. சௌந்தர்யா குடும்பத்திற்கு ஒரே பிள்ளை. வசதிகளுக்குக் குறைவில்லாமல் வளர்ந்தவள். உள்நாட்டில் உயர் கல்விக்குச் செல்லும் வாய்ப்பு எட்டாது போகவே இங்கிலாந்திலுள்ள ஐடியல் கல்லூரிக்கு தன் பெறுபேறுகளின் அடிப்படையில் அனுமதி பெற்றுக் கொண்டு இப்போது இலண்டனில் தங்கிப்படிக்கின்றாள். இவளுடன் ஒன்றாகப் படித்தவர்களே காவ்யாவும், விஷ்மதியும் ஆவார்.

விஷ்மதி ஓரளவு வசதியானவள். பெற்றோரின் கட்டாயத்தின் அடிப்படையில் தான் அவள் இலண்டனிற்கு படிக்க வந்தாள். ஆனால் காவ்யாவின் குடும்ப சூழலோ வேறு. சிறுவயதினிலே அவளின் தந்தை அவர்களை பிரிந்துவிட தாயே தந்தையும் தாயுமாக அவர்களைக் கவனித்தாள். காவ்யாவிற்கு மூன்று சகோதரிகள். தாயோ ஆடைகளை சுயமாகத் தைத்து விற்கும் சிறு கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தார். அதன் மூலம் பெற்ற சொற்ப வருவாய் மூலம் அவர்களின் நாளாந்த பசி ஆறியது. எனினும் படிப்புச் செலவுகளுக்கு அது கைகொடுக்கவில்லை. இருந்தும் முயற்சித்து அவர்களைப் படிக்க வைத்தார்.

காவ்யா எதையும் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. தன் மனம் போன போக்கில் வாழ்ந்தவளுக்கு அதிஷ்டவசமாக கல்விப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்தன. அதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைந்த தாய்க்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. காவ்யா தன் மேற்படிப்புக்களை வெளிநாட்டில் தான் தொடருவேன் என ஒற்றைக்காலில் நின்றாள். பாவம் எங்கே போவார் அந்த தாய். ஊரெல்லாம் கடன்பட்டு தன் மகளின் ஆசையை நிறைவேற்றி வைத்தார். சிறந்த கல்லூரியில் படிக்க வாய்ப்புக் கிடைக்கவே வெளிநாட்டிற்கு பயணமானாள் காவ்யா. தாயோ ஆயிரம் கனவுகளை சுமந்தவளாக அவளை வழியனுப்பி வைத்தார்.

நண்பிகள் மூவரும் ஒரே கல்லூரியில் படிக்க வாய்ப்புக் கிடைத்ததால் வாடகைக்கு வீடு எடுத்து ஒன்றாகத் தங்கினர். படிப்போடு பகுதி நேரமாக வேலை செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌந்தர்யாவிற்கு பணம் ஒரு பிரச்சினையாக இல்லாமல் இருந்ததனால் அவள் பகுதிநேர வேலைக்குச் செல்லாது தன் முழுக் கவனத்தையும் படிப்பில் செலுத்தினாள். விஸ்மதிக்கு கூட பகுதி நேர வேலை அவசியமற்றதாக இருந்தது. எனினும் தனது பொழுதுபோக்கிற்காக அவள் வேலை செய்தாள். ஆனால் காவ்யாவின் நிலையோ தலைகீழ். உழைத்தால் தான் சாப்பாடு என்னும் நிலை அவளுக்கு. அம்மா அனுப்பும் சிறிய தொகை அவளுக்குப் போதாதிருந்தது. அவள் பலமுறை தாயிடம் பணம் போதாது என்று குறைகூறியுள்ளாள். எனினும் என்ன செய்வாள் அந்த ஏழைத்தாய்.

தனது புத்தகங்களுள் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்த சௌந்தர்யாவிற்கு அழைப்பு மணி ஓசை கேட்டது. கதவைத் திறந்தாள் வாசலில் விஷ்மதி. "என்ன விஷ்மதி நீ இண்டைக்கு லஞ்சிக்கு கூட வரவேயில்லை" "இண்டைக்கு புக் ஷொப்ல சரியான கூட்டம். எல்லாருட கணக்கு வழக்கையும் பார்க்கிறதுக்கு என்னால முடியல. அதுதான் வரல". "சரி நீ போய் ரெடி பண்ணிற்று வா. நான் சாப்பாடு ரெடி பண்றன். காவ்யாவும் வந்திடுவாள்" அடுத்தமுறை அழைப்பு மணி ஒலித்தது. யாரென்று சென்று பார்க்கையில் காவ்யா "வா காவ்யா நீ ஏன் லேட்?" "கணக்கு சரிபார்க்க நான் மட்டும் தான் நின்றன். எல்லா வேலையும் முடிய லேட் ஆகிட்டு"

மூவரும் சாப்பாட்டு மேசையில் அமர்ந்தார்கள். உணவை மாறி மாறிப் பரிமாறி உண்டார்கள். இடையில் சௌந்தர்யா குறுக்கிட்டு "இண்டைக்கு எண்ட டேர்ன், எப்படி இருக்கு சாப்பாடு." விஷ்மதியும், காவ்யாவும் மாறிமாறி முகத்தை பார்த்து விட்டு சரி என்பது போல தலையாட்டினர். உணவருந்திய பின் மூவரும் தத்தம் படுக்கைகளில் அமர்ந்தவாறு தம் பரீட்சைக்குரிய பாடப் பரப்புக்களை நினைவுபடுத்தினர். மாறி மாறி வினாக்களை தொடுத்தவாறும் பரப்புக்களை வாசித்தவாறும் தொடர்ந்தது அவர்களின் படிப்பு. வேலைக் களைப்பால் விஷ்மதியும், காவ்யாயாவும் தூங்கிவிட சௌந்தர்யா இரவு முழுவதும் படித்தாள். கடிகாரத்தை பார்க்கையில் அது நடுநிசி மணி ஒன்றாக முடிந்திருப்பதைக் காட்டவே, 'தூங்கலாம்' என முடிவெடுத்தாள். காலையில் தனக்கு உள்ள வேலைகளை எண்ணியவாறே தூங்கிவிட்டாள்.

பொழுது இனிதாகப் புலர்ந்தது. மூவரும் பற்பல கனவுகளைத் தாங்கிய வண்ணம் நாளை ஆரம்பித்தனர். கல்லூரி படிப்பு ஒழுங்காக நடைபெற்றது. பின் விஷ்மதியும் காவ்யாவும் தமக்குக் குறிக்கப்பட்ட வேலைகளுக்குக் கிளம்பினர். எனினும் விஷ்மதிக்கு தொடர்ந்து காவ்யா வேலை செய்யும் இடத்திலிருந்து தொலைபேசி அழைப்புக்கள் வந்த வண்ணம் இருந்தன. விடயத்தை தெரிந்து கொள்ள அவ் அழைப்பிற்கு பதில் கூறும் விதமாக 'ஆம்' என்றாள் மறுமுனையிலிருந்து காவ்யா வேலை செய்யும் இடத்தின் தலைமையதிகாரி "காவ்யா எங்க? ஏன் அவ எவ்வளோ நாளா வேலைக்கு வரல? என கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார். விஷ்மதியின் மனதில் ஒரே குழப்பம்.

தங்களிடம் வேலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு எங்கே செல்கிறாள் காவ்யா? ஏன் தங்களிடம் அவள் பொய் கூற வேண்டும்? காவ்யாவிற்கு என்ன பிரச்சினை எனத் தீர யோசிக்கும் போதே அவளிடம் போதைப்பழக்கம் குடி கொண்டிருப்பதை இருவரும் அறிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதனாலே அவள் அடிக்கடி சக்தி மாத்திரை எனும் பெயரில் மாத்திரை உண்டு வருவது தெரிந்தது. நண்பிகள் இருவருக்கும் அதிர்ச்சி தாங்க முடியவில்லை. ஒரு கணம் தாம் மலைபோல் நம்பிய காவ்யா இவ்வாறு ஒரு செயலைச் செய்வாள் என நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அவர்கள் இருவருக்கும் என்ன செய்வதென்றெ புரியவில்லை. இதைப் பற்றி காவ்யாவிடம் பேசுவதா? வேண்டாமா? என குழப்பத்திலிருந்த போது எவ்வாறெனினும் இதனைப் பற்றி கேட்பதென முடிவெடுத்து, காவ்யா வரும் வரை காத்திருந்தனர். மாலை நேரமாகியது. காவ்யாவும் வந்தாள். வந்தவுடனே கேட்க மனமின்றி ஒரு மனமாக "எங்கே போனாய்?", "வேலைக்கு பொயிட்டு வாறன்" என்றவுடன் சௌந்தர்யா எழுந்து "பொய்" எனக் கூறினாள். அவர்கள் நடந்த அனைத்தையும் கூறி விசாரித்தனர். காவ்யாவும் அவை யாவும் உண்மை என ஒத்துக்கொண்டாள்.

இவ்வாறானதொரு தர்மசங்கடமான சூழ்நிலையில் தாய் நாட்டிலிருந்து அழைப்பு வந்தது. தன் தாயிடமிருந்துதான் அழைப்பு என எடுத்தவளுக்கு ஏமாற்றமே பதிலாய் காத்திருந்தது. "ஹலோ காவ்யா நான் மாமா பேசுறன். நீ உடனே கிளம்பி இலங்கைக்கு வா. அவரின் குரலில் ஏதோ ஒரு இனம் புரியாத ஆழ்ந்த சோகம். என்னவாக இருக்கும் என்ற சந்தேகத்துடன் நண்பிகள் இருவரின் உதவியுடன் தாய் நாட்டை நோக்கி பயணமானாள்.

அங்கு வந்தவளுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. அவர்களின் குடிலைச்சுற்றி நிறைய பேர் உட்கார்ந்து புலம்பிக்கொண்டே இருந்தார்கள். பதற்றத்தின் உச்சத்தில் உள்ளே நுழைந்த அவளுக்கு தலையில் இடிவிழுந்துவிட்டது. தனக்காக வாழ்வின் அனைத்து விடயங்களையும் தியாகம் செய்த தன் உயிரான அன்னை இறுதியில் தன் உயிரையும் தியாகம் செய்து விட்டாள் என்பதை எண்ணிப்பார்க்கும் போது இதயம் நிற்பது போன்ற ஓர் உணர்வு. இறுதிவரை தன் தாய்க்கு ஓர் உண்மையான பிள்ளையாக இல்லாது போய்விட்டோமே எனும் உணர்வு மனதைக் கசக்கியது. அவள் மனம் கதறி அழுதது தாயின் பின்னே தானும் போக எண்ணினாள். எனினும் அவளுக்கு தன் தாயின் நினைவுகளுடன் செல்லக்கூட தகுதியில்லை.



ம.ஆன் மனுஷிகா – தரம் $11^{E}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சிசிலிய ராகங்கள் – 2016' சஞ்சிகை வெளியீட்டின் போது...



## பாடசாலை நூலகத் திறப்பு விழாவின் போது...



## கடந்தகால சிசிலிய ராகங்கள்




## 2016 இல் தரம் 1–11 வரையிலான சஞ்சிகை வெளியீடுகள் சில...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலும் மின்மினிப் பூச்சியும்

கானக் கருங்குயில் ஒன்று
காட்டில் பாடித் திரிந்தது
பாடிப் பாடிப் பசியினால்
பக்கம் எட்டிப் பார்த்தது

கண்ணைப் பறிக்கும் ஒளியொன்று
காட்டிக் கொடுத்தது பூச்சியினை
பற்றிப் பிடித்துத் தின்றிடவே
பறந்து சென்றது கருங்குயிலும்

பதறித் துடித்து மின்மினியும்
பக்குவமாகச் சொன்னதுவே
என்னைப் படைத்த இறைவன்தான்
உன்னையும் நன்கு படைத்துள்ளான்

நம்மைப் படைத்த நோக்கத்தை
நாமும் மறந்திட அழகாமோ
ஒளியைக் கொடுத்து இருள்போக்கும்
ஒப்பற்ற பணியை நான் செய்வேன்

இனிய பாடலை நீ பாடி
இன்பம் அளிப்பாய் உலகிற்கு
இனிய குரலால் நீ பாட
பக்கம் வந்து ஒளி தருவேன்

என்றே மின்மினி சொன்னதுவே
எல்லாம் கேட்ட கருங்குயிலும்
நன்றே செய்வோம் நம்பணியை
நன்கு போய் வா என்றதுவே



**ம.அமிர்தவர்ஷனா** – தரம் $8^C$

# ஆசை

ஆசை ஆசையாய் நாம் படிப்போம்!
அவனியில் புதுமைகள் நிதம் படைப்போம்.
ஆசையில் தர்மம் அகன்று விடின்
அவதிப்படுவோம் அதை நாம் உணர்வோம்!

பூவின் ஆசை வண்டிடத்தில் !
புலவரின் ஆசை பண்ணிடத்தில் !
நாவின் ஆசை நற் சுவையில்
நல்லவர் ஆசையோ பொது சேவையில்!

பல்லவன் ஆசை சிற்பத்திலே
படைத்தளபதி ஆசை வெற்றியிலே!
நல்லவர் ஆசை புவி நலத்தினிலே!
நமது ஆசையோ என்றும் கல்வியிலே!

உள்ளவர் ஆசை இன்னும் செல்வத்திலே !
உழவனின் ஆசை பயிர் விளைவதிலே!
தெள்ளு தமிழில் நீயும் ஆசை கொண்டால்
தேன் பாங்கான கீதத்தில் ஆசைவரும்!

ஆசை தான் துன்பத்தின் வேராகும் – ஆயின்
அந்த ஆசை தான் வளர்ச்சிக்கும் நீராகும்!
ஆசையாய் நானும் பாடியதை நீயும்
ஆசையாய்க் கேட்டால் என்றும் நலமாகும்!



**வினோக்ஷி** – தரம் $7^C$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பமடைதல்



புவி வெப்பமடைதல் எனும் போது இது தற்காலத்தில் மானிட உலகு எதிர் நோக்கும் பாரிய பிரச்சினையாகக் காணப் படுகின்றது. விஞ்ஞானிகளின் கருத்துக்க ளுக்கு இணங்க நோக்கும்போது இப் பிரச்சினைக்கு முக்கிய காரணமாயிருப்பது மனித செயற்பாடுகள் எனக் கண்டறிப்பட் டுள்ளது. புவி வெப்பமாதலின் விளைவாக முழு மனித உலகும்பாரிய பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம்.

வளிமண்டலத்திலுள்ள அகச் சிவப்புக் கதிர்கள் அதிகம் வெப்பத்தை வெளிவிடும் கதிர்களாகக் காணப்படுகின்றது. இக் கதிர்கள் வளிமண்டலத்தினால் அகத் -துறிஞ்சப்பட்டு மீண்டும் வெளிவிடப்படும் போது கோளின் கீழ் வளிமண்டலமும் அதன் மேற்பரப்பும் வெப்பமடைகின்றது. இது சிக்குறும் விளைவு எனப்படுகின்றது. வெப்பம் சிக்குறும் விளைவை ஜோசப் போரியர் ஆயிரத்து எண்ணூற்று இருபத்து நான்காம் ஆண்டு கண்டறிந்தார். ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று ஆறாம் ஆண்டில் சிவாந்தே அரினியஸ் வெப்பம் சிக்குறும்விளைவின் அளவைக்கண்டறிந்தார்.

தொழிற்புரட்சி முதல் மாந்தரின் நடவடிக்கை புவி வெப்பமாதலின் செறிவை அதிகரித்துள்ளது. மெதேன், காபனீரொட் -சைட்டு, குளோரோ புளோரோகாபன், நைதரசனீரொட்சைட்டு, கந்தகவீரொட்சைட்டு என்பன புவி வெப்பமாதலுக்கான முக்கிய மான வாயுக்களாக காணப்படுகின்றன. புவியியல் தரவுகளின்படி பல்வேறு மானிட நடவடிக்கைகளின் போது எரிக்கப்பட்ட புதை படிவ எரிபொருள் மூலமும் காடழிப்பு மூல மும் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரித்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. எதிர் காலத்தில் காபனீரொட்சைட் செறிவு கூடிச் செல்லும் வேகம் பொருளாதார, சமூக, தொழிநுட்பத் துறைகளில் பாரிய செல்வாக்கைச் செலுத்தக்கூடியதாக மாறும். இவற்றைவிட குளோரோ புளோரோ காபன், மேல் வளிமண்டல ஓசோன் படையை அழிப்பதால் இதுவும் புவி வெப்பமடைதலுக்குக் காரண -மாக கருதப்படுகின்றது. நச்சு வாயுக்கள், மாசுக்கள் மற்றும் எரிமலைகளாலும் உற்பத்தி செய்யப்படும் வளித் தொங்கல்கள் என்பனவும் இதற்கு காரணமாய் அமை -கின்றன.

புவி வெப்பமாதலில் அணு ஆற்றலின் பங்கினை நோக்குவோமானால் சர்வதேச அணுச்சக்தி கழகத்தின் அறிக்கையின்படி இரண்டாயிரத்து முப்பதாம் ஆண்டளவில் காபனீ -ரொட்சைட்டு வாயு புவியில் அதிகரிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட இரண்டாயிரத்து ஐம்பதாம் ஆண்டுக்குள் ஐம்பது முதல் எண்பத்தைந்து சதவீதம் வரை பசுமை இல்ல வாயுக்களை அதிகரிக்க வேண்டும் எனவும், அவ்வாறு இல்லாவிடில் அதிக மோசமான விளைவு -களை உலகம் சந்திக்க வேண்டியதாய் இருக்கும் என அறிவித் -துள்ளது.

புவி வெப்பமாதல் காரணமாக காலநிலைக் கோலங்களிலும் மாற்றங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்றன. உதாரணமாக துருவ நாடுகளில் பனிக்கட்டிகள் உருகி வருகின்றன. இதன் விளைவாக அங்கு வாழ இசைவாக்கமடைந்த உயிரினங்களுக்கும் பாரிய பிரச்சினையாகவுள்ளது. இவற்றைவிட அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீ ஏற்படுதலையும். எடுத்துக் காட்டாகக் கூறலாம். அத்துடன் புவி வெப்பமடைதல் காரணமாக பல்வேறுபட்ட நோய் நிலைமைகளும் வந்து ஆட்கொள்ளுவதனால் அதிக உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் வேலைத்திட்டத்தின் கூற்றின் படி காலநிலை மாற்றம் தொடர்பாக சிக்கலைச் சந்திக்க இருக்கும் பொருளாதாரம், விவசாயம், போக்குவரத்து துறைகளையும் வளர்ந்துவரும் நாடுகளின் அபிவிருத்தி என்பனவும் சார்ந்திருப்பது புவி வெப்பமாதல் என்ற சூழல் பிரச்சினையாகும்.

புவி வெப்பபடைதல் காரணமாக மேற்கூறப்பட்ட விளைவுகள் உலகில் பரவலாகக் காணப்படும் விடயமாக காணப்படுகின்றது. சூரியனிலிருந்து வரும் கழியூதாக் கதிர்கள் போன்றவற்றினால் பச்சை வீட்டு வாயுக்கள் வளிமண்டலத்தில் அதிகரிப்பதனால் பல் வேறுபட்ட சூழல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. புவியில் புவியினை வெப்பப்படுத்தும் நச்சு வாயுக்கள் அதிகரிப்பதனாலும் காடழிப்பு மூலம் ஏற்படும் வெப்ப அதிகரிப்பினாலும், கடல்மட்டங்கள் உயர்வடைந்து வெள்ளப் பெருக்குகளும் ஏற்படுகின்றன. இது போல பல இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மேற்கூறப் பட்டவாறே சர்வதேச ரீதியாக நோக்கும் போது இவ்வாறான பிரச்சினைகளால் ஏற்படும் உயிரிழப்புக்கள் அதிகமாகிக் கொண்டு வரு கின்றது. இதற்குக் காரணம் உஷ்ண அதிகரிப்பே ஆகும். இதன் விளைவாக புதிய புதிய எம்மால் ஊகிக்க முடியாத புதிய புதிய நோய்கள் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இப் பிரச்சினை காரணமாக மனித வாழ்வை கட்டியெழுப்பும் பல்வேறுபட்ட துறைகள் வீழ்ச்சியை நோக்கிச் செல்கின்றன. அதாவது பொருளாதாரம், விவசாயம், வர்த்தக வியாபாரங்கள் என்பன பல பாதிப்பை எதிர் நோக்கி உள்ளதென்றால் மிகையாகாது. இவ் இயற்கை விளைவினால் வளர்ந்துவரும் எதிர்காலச் சந்ததி அழிவை எதிர்நோக்கும் நிலையை எட்டியுள்ளது. புவி வெப்பமடைவதைக் குறைக்கவோ அல்லது முற்றாக நிறுத்தவோ ஒரு தனிநபரின் முயற்சி மூலம் இயலவே இயலாது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கமைய ஒவ்வொரு மானிடனும் இதைக்குறித்து சிந்திக்க வேண்டியது அவசியமாகும். உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் எடுத்து இதனைத் தடுக்க முயற்சிக்கலாம்.

புவிக்கு தீங்கு பயக்கும் சக்திகளுக்கு மாறாக இயற்கையோடு ஒத்துப் போகக்கூடிய மாற்றுச் சக்திகளைப் பயன்படுத்துவதால் புவியினை நீண்ட காலம் வாழவைக்கும். இதனைச் சிந்தித்து ஒவ்வொரு மாந்தரும் எதிர்காலச் சந்ததியை வாழ வைத்து கடவுளின் ஆசியைப் பெறுவோம்.



**அ.பிரணித்தா** – தரம் 11E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னை தெரேசா

**1979** ஆம் ஆண்டு மார்கழி மாதம் நோர்வேயில் மிகப் பெரிய விருதான நோபல் சமாதான விருதினையும், 190,000 டொலர் பணத் தொகையையும் பெற்றுக் கொண்டார். அன்னைதெரேசா அன்று தனக்கு அளிக்கப்படவிருந்த விருந்திற்குப் பதிலாக அதற்குரிய செலவை பணமாகத் தரும்படி கேட்டுப் பெற்றுக் கொண்டார். அதற்கு அவர் கூறிய காரணம் தனி ஒருவருக்கு ஒரு வேளை விருந்துக்குச் செலவிடப்படும் தொகையைக் கொண்டு 15, 000 ஏழை மக்களுக்கு உணவளிக்கலாம் என்பது தான்.

அன்னை தெரேசா தெருக்களிலும் சேரிகளிலும் ஏழைகளோடும் நோயாளிக - ளோடும் வாழ்ந்தார். அவர்களுக்கு சேவை செய்வதையே ஒரே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த அன்னை தெரேசா இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற தியாகி. 1910.08.26 இல் ஸ்கோஜே அல்பாமா என்ற இடத்தில் ஓர் அல்பேனியக் குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு ஆக்னெஸ் கோன்ஸா என்று பெயர் சூட்டப்பட்டது. இவருடைய குடும்பம் மதப்பற்றுள்ள கத்தோலிக்கக் குடும்பம். இவர் தன் ஒன்பதாம் வயதில் தந்தையை இழந்தார். பதினெட்டாவது வயதில் இந்தியாவில் திருத்தொண்டு புரிய ஆர்வம் கொண்டார். பாரிசில் நேர்முகத்தேர்வில் பங்குபற்றி அயர்லாந்து டுப்ளின் நகரில் கன்னியாஸ்திரி பயிற்சி, ஆங்கிலப் பயிற்சி ஆகியன பெற்றார். இவர் வேறு ஒரு கன்னியாஸ்திரியுடன் கல்கத்தா வந்து சேர்ந்தார். 1929 ஆம் ஆண்டு மே, 23 இல் தனது பெயரைத் திருச்சபை முறைப்படி தெரேசா என்று மாற்றிக் கொண்டனர்.

அன்னை தெரேசா கற்பித்தல், வைத்தியசாலைகளில் உதவிபுரிதல் ஆகிய பணிகளில் ஈடுப்பட்டார். அப்போது அவர் சந்தித்த சேரி வாழ் மக்களின் அவல வாழ்க்கை அவருக்கு வேதனையையும், அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று மன உறுதியையும் அளித்தது. சேரிவாழ் மக்களுடனே வாழ்ந்து அவர்க - ளுக்கு சேவை செய்ய அனுமதி பெற்றார்.பாட்னாவில் மருத்துவ உதவியாளராகப் பயிற்சி பெற்றுக் கல்கத்தாவில் சேரியில் பணிபுரியப் பயணப்பட்ட அன்னை தெரேசாவிடமிருந்தது 5 ரூபாய் மட்டுமே. பின் நாட்களில் ஏராளமான விருதுகளையும் ஏழை மக்களின் நல் வாழ்க்கைக்காகத் தன்னை அர்ப்பணித்த அன்னைதெரேசா 1997 ஆம் ஆண்டு எம்மையெல்லாம் சோகத்திலாழ்த்தி விட்டுப் பிரிந்தார்.





**T.ஷாரிக்கா** - தரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டுகாபயன்



இலங்கையின் முதலாவது தலைநகரமான அநுராத புரத்தை ஆட்சி செய்த முதல் மன்னன் பண்டுகாபயன் ஆவான். **இவனது தந்தையின் பெயர் தீக்காமினி.** தாய் உன்மாத சித்திரா என்பவளாவாள். பண்டுகாபயன் பண்டுல என்ற பிராமணனிடம் கல்வி கற்றான். இவன் எதிர்நோக்கிய சவால்கள் அடைந்த துன்பங்கள் பல உண்டு. அவற்றில் சில, பண்டுகாபயன் பிறந்தவுடனே அவனது பாதுகாப்பு கருதி வேலைக்காரி, மூலம் கூடையில் ஒழித்து துவாரமண்டல கிராமத்திற்கு எடுத்து சென்றனர். ஏழாவது வயதில் பண்டுகாபயன் கிராமத்துச் சிறுவர்களுடன் குளத்தில் நீராடிக் கொண்டிருக்கையில் மாமன்மார்கள் கொலை செய்ய முயன்றனர். பன்னிரெண்டாவது வயதில் பண்டுகாபயன் இடையர் சிறுவர்களுடன் மந்தை மேய்த்துக் கொண்டிருந்த போது அவனை மூன்றாவது முறையாக கொல்ல முயன்றனர். மனைவியின் பெயர் சுவர்ணபாலி. **இவனது தந்தையின் பெயர் கிரிகண்ட சிவன்.** பண்டுகாபயனால் அபயன் என்ற மாமன் கொலை செய்யப்படாதவனாவான். இவனுக்கு சேத்தியா என்ற குதிரை உதவியது. இவனால் கட்டியகுளம் அபயவாவி ஆகும். அது தற்போது பசவக் குளம் என அழைக்கப்படுகிறது. இவன் தனது 8 மாமன்மார்களின் 8 தலைகளையும் ஒன்றாகக் குவித்து அதை 'லபுனொருவ' என அழைத்தான். இவன் கட்டுப் - பாடற்ற சமயக் கொள்கையைப் பின்பற்றினான். சித்திரஜ, காலவெல என்ற இரு கணங்களுக்கு ஆலயங்கள் அமைத்தான். கிழக்கில் சிற்றரசுத் தலைவனாக விளங்கி அனுராதபுரத்தை ஆட்சி செய்த திறமை மிக்க ஆட்சியாளனாக 70 ஆண்டுகள் புரிந்தமை குறிப்பிடத்தக்கன.



*N.*குகனிஜா – தரம் 8C

# அறிவுத் துளிகள்

- பிறருக்கு உதவி செய்யுங்கள் தன்னுதவி தேடி வரும். கடமைகளை கண்ணிமை போல் காத்துக்கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு நூல்களையும் பாதுகாத்து வையுங்கள் பிறருக்கு உதவும்.
- காலத்தை வினாக்காதீர் காலம் பொன்னானது
- எதையும் சிந்தித்துச் செயலாற்றுங்கள்
- சிந்தனை செய்பவன் சிறப்பாளி
- பொறுமையைக் கடைப்பிடியுங்கள், பொறாமையைக் கைவிடுங்கள்
- ஒவ்வொன்றாக சேமியுங்கள். ஒருமிக்கச் சேமிக்க வேண்டாம்
- வயது கடந்தாலும் கற்றலைக் கைவிடாதீர்கள்
- அன்பாக இருங்கள் அடிமையாக இருக்காதீர்கள்.



ர.பிரஜன்னியா – தரம் 7S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப் பாலர்



பாடசாலை நோக்கி
பாலர் நாமும் செல்வோம்
பாடல் பல இசைப்போம்
பழங்கதைகள் படிப்போம்

ஆட்டுக்குட்டிக் கதையும்
அழகு நிலாப் பாட்டும்
காணும் புதுமை யாவும்
கேட்டு இன்பம் அடைவோம்


வண்ணக் கலவை கொண்டு
எண்ணமெல்லாம் வரைவோம்
மண்ணை அள்ளி எடுத்து
சின்ன வீடு அமைப்போம்

காசால் கிடைத்திடாத
கலைகளெல்லாம் அளிக்கும்
ஆசான் எம்மை அழைத்து
ஆதரவு தருவார்



திலக்ஷிகா – தரம் 8S

# சூரியன்



காலைச் சேவல் கூவுறது
காகம் கூழக் கரைகிறது
சோலைக்குயில்கள் இசைபாட
சூரியன் உதயம் கொள்கிறது

கிழக்கே வானம் வெளுக்கிறது
கீற்றாய்ச் சுடரும் படர்கிறது
விளக்கு வெளிச்சம் அணைகிறது
விழந்து பொருட்கள் தெரிகிறது

தாமரை மொட்டு அவிழ்கிறது
தாயைக் கன்று அழைக்கிறது
தாமதம் கொண்ட மனிதர்களைத்
தட்டிச் சூரியன் உதிக்கிறது


சிவந்த கோளம் சுழல்கிறது
சிவப்பு மெல்ல மறைகிறது
பவளம் போன்ற நிறம்மாறி
பந்தாய் சூரியன் எழுகிறது.



S.அக்ஷி – தரம் 8S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# My Country

**M**y country is Sri Lanka. It is a small island which is situated in the Indian Ocean. There are nine provinces and twenty five districts in our country. The capital of the country is Sri Jayawardenapura Kotte Sri Lanka. It is a developing country. There is a tropical climate in the country as it is situated near the equator the country has a long history more than two thousand and five hundred years. My country is internationally famous for cricket. Sri Lanka team won the world cup in 1996 which brought great honour to the country. In the old days, Sri Lanka had been known by many names some of the names are "Thoprabore" Thambapanni, Ceylon and etc. Sri Lanka had been governed by many kings in the history. King Vijeya was first king of the country. In the past, Sri Lanka was introduced as "The ganary of the East" by the foreigners because the country was self - sufficient. Sri Lanka is a multi-national and multi-cultural country. There are Sinhalese, Tamils, Muslims and Burghers. Four major religions are Buddhism, Hinduisium, Christianity and Islam. Unfortunately, there was an on going war situation in the North and East provinces of the country. Let us live peacefully shedding all petty differences and protect the country for our generation.



S.Havibriya Gr - 6S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரு கேள்வி ஒரு பதில்

1) பருப்புக்கறி மணப்பதேன்?
படை வீரர் சாவதேன்?
**பெருங்காயத்தால்**

2) எருக்கிலை பழுப்பதேன்?
எருமைக் கன்று அழுவதேன்
**பால்வற்றிப் போவதால்**

3) கல்வி வளர்வது எதனால்?
காற்றாடி பறப்பது எதனால்?
**நூலினால்**

4) மலரால் தொடுக்கப்படுவது எத
சூரியன் மறையும் நேரம் எது
**மாலை**

5) பந்து எழுவதேன்? பையன்
அழுவதேன்?
**அடிப்பதால்**

6) காடு குறைவதேன்? கால்வாய்
நீள்வதேன்?
**வெட்டுவதால்**

7) கொட்டாவி விடுவது எதனால்?
குழந்தை அழுவது எதனால்?
**பசியால்**



S.சதுசனா – தரம் 7S

# சிந்திக்க சில சிந்தனைகள்

1) யார், ஒருவர் தயவு, நன்றி என்பதை அதிகம் பயன்படுத்துகின்றார்களோ அவர்களின் செயல்கள் நிறைவேற அதிக வாய்ப்பு உள்ளது.

2) நன்றாக வாழ வேண்டுமானால் முன் கூட்டியே திட்டமிடுங்கள்.

3) வெற்றிகளைச் சந்திக்க விரும்பினால் உடனே இடையூறுகளுக்கு முடிவு காணுங்கள்.

4) தைரியமாக இருக்க வேண்டுமானால் பொய் சொல்லாதீர்கள்.

5) அடக்கமான இதயம் அனைவரின் அன்பையும் பெறும்.

6) நாற்காலியில் அமர முடிந்தவர்கள் அதன் அடியிலும் அமரத் தெரிந்து கொள்ள வேண்டும்.

7) கடுகளவு சிறந்த சிந்தனை பூசணியளவு நற்பயனைத் தரும்.

8) சிப்பிகள் அடங்கிக் கிடந்த பின்னரே அதில் முத்துக்கள் நிறைந்திருக்கும்

9) நல்ல கொள்கையில் உறுதியுடைய உத்தமருக்கு உலகம் வளைந்து கொடுக்கும்

10) உங்களுடைய எண்ணங்களைப் பொறுத்தே செயல்கள் அமைகின்றன.



ப.அபிராமி – தரம் 8C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

*01.* சூரியனை நேருக்கு நேர் பார்க்கும் பறவை - **கழுகு**
*02.* ஒட்டகத்தின் எடை - **300km**
*03.* சமையல் ராணி என ஜேர்மனியர்களால் அழைக்கும் பொருள் - **வெங்காயம்**
*04.* உலகில் நீளமான பாம்பினம் - **அனகொண்டா**
*05.* உலகில் மிக உயரமான பாலம் - **பிரான் ஷமில்லாங் பாலம்**
*06.* தனக்கென தாய்மொழி இல்லா நாடு - **சுவிஸ்லாந்து**
*07.* சிங்கத்தின் ஆயுட் காலம் - **20 வருடம்**
*08.* 335 பல் வரிசை கொண்ட விலங்கு - **நத்தை**
*09.* புற்று நோய் தாக்காத ஒரே விலங்கு - **நத்தை**
*10.* கபில சிவப்பு நிற முட்டை இடும் விலங்கு - **சுறாமீன்**
*11.* எலிக்காக நினைவு தினம் உள்ள நாடு - **ஜேர்மனி**
*12.* பூனைகளை முதலில் வழிபட்டவர் - **கிரேக்கர்**
*13.* உலக உணவு ஸ்தாபனம் எங்குள்ளது - **FAO ரோம்**
*14.* விலை உயர்ந்த உலோகம் - **பிளாட்டினம்**
*15.* பூச்சியத்தை அறிமுகப்படுத்திய நாடு - **இந்தியா**
*16.* உலகின் மிகப்பெரிய காவியம் - **மகாபாரதம்**
*17.* பறக்கும் பாம்புள்ள நாடு - **ஜாவா**



**யோ.கைஷியா** – தரம் 7S

## பொது அறிவு



1) காசுக்கட்டளை அனுப்புதல் - **தபாலகம்**
2) பொதிகளை அனுப்புதல் - **தபாலகம்**
3) பொது நூலகத்தைப் பராமரித்தல் - **பிரதேச சபை**
4) நாணயங்கள் அச்சிட்டு வெளிவிடல் - **இலங்கை மத்திய வங்கி**
5) விளையாட்டுக் கழகமொன்றை பதிவு செய்தல் - **பிரதேச செயலகம்**
6) நன்நடத்தைச் சான்றிதழ் பெறல் - **கிராம சேவையாளர்**
7) துவிச்சக்கரவண்டிக்கு அனுமதித் தகடு பெறல் - **மாநகர சபை**
8) வாக்காளர் அட்டை பெறல் - **மாவட்ட தேர்தல்**
9) திருட்டு பற்றி முறையிடுதல் - **பொலிஸ் நிலையம்**
10) பணத்தைச் சேமித்தல், காசோலையை மாற்றுதல் - **வங்கி**




**ம.கைஷிகா** – தரம் 7T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contribution of Education towards Sustainable Development



A society which is uneducated cannot think on rational lines or contribute to the development of the country. In the primitive period, long before the resurgence, people and cultures often fought mindless wars that resulted in bloodshed as they were illiterate and ignorant about social values and development. Therefore, the importance of education in modern times cannot be understated as it forms an integral part of our lives as well our aspirations towards a developed society. The principal institutional mechanism for developing human skills and knowledge is the formal educational system through schools, colleges and universities. The world nations have understood and aspired to expand educational opportunities as education is the key to social and national development. It has been proven throughout mankind's history and especially by the growth of the developed nations.

The more educated the society becomes; the more rapid the development takes place. Western nations have been a great example of developed societies through a well thought out education systems and processes. Most economists and academics would completely agree that it is the human resources of a nation, not its capital or its natural resources, that ultimately determines the character and pace of its economic and social development. This proves why nations invest heavily on education and its development to ensure that the nations are well equipped to respond to the growing needs of development. All countries have committed themselves therefore, to the goal of universal education in the shortest possible time.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The advantages education brings to the nations and its development are enormous and incomparable. An educated nation brings down poverty, increases the GDP and income, makes people healthier, boosts the economy, fosters peace, reduces fertility rates, raises crop yields, reduces child marriages, reduces maternal death, promotes gender equality and more importantly saves and promotes the lives of the children who will be leaders to drive the humanity towards development and sustainability. These are some of the basic examples how education contributes to the economy and development. Education changes the attitudes of the general population which is extremely vital for growth and development.

Human communication in development is paramount and education provides that scope for people to communicate effectively which subsequently results in better output within the development sector. The education systems in the western nations have evolved periodically enabling them to include non-formal and on the job learning also to meet the market demands following World War II. Most of the western nations were destroyed and distraught following the end of World War I & II but in the last 7 decades they put that distress past behind and have become developed nations due to the investment and proactive steps taken towards developing and improving the formal and informal education systems.

Sri Lanka is a well literate nation and according to the 2015 census and statics our literacy rate is 92.63% and this is the best rate in Asia. This ratio is even better compared to some developed countries. This is largely due to the free education system established and developed during the colonial period. Our free education system is comparatively well acknowledged within the Asian region and has gained high accolades from many academics and pundits. But the larger question remains as to why we are still a developing nation? Researches during the past decades have revealed that although we are a well literate nation, our education system has not evolved to the needs of the changing world. Our curriculums have not accommodated the need to understand the technological and scientific demands. Interestingly we have not developed our informal and job oriented education systems which are vital for the growth of the economy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and sustainable development. We are highly dependent on the western countries to provide us the technological inputs that are needed for sustainable development.

This clearly defines the need for the Sri Lankan education system to evolve accordingly and contributes to the development needs. Sri Lanka needs to devote more of its financial resources towards quality inputs such as incorporating IT into education and increasing the quality of teaching. Developing a better result oriented education system will be conducive to rapid economic growth such as good work ethics, moral responsibilities, disciplines, etc., is imperatively, a role of education in the country. Sri Lanka's path towards the ambition of becoming an active economic and a developed state depends on the future steps taken to improve and develop the education systems.



**A.Roy Ravinath**
*Master of Regional Development and Planning*
*B.A.Social Sciences, TEFL, Dip.in.English*
*National Dip.in Teaching English Lang & Lit.*



✻ மழை பெய்யாமல் இருந்தா நல்லா இருக்கும்

▼ ஏன்

✻ புதுசா வாங்கின குடை நனைஞ்சிடுமே!



✻ பேராசையால் ஒரு புத்தகம் வெளியிட்டீங்களே என்ன ஆச்சு?

▼ பெருநட்டம் ஆச்சு.



**கோ.ஜெஷாங்கரி** - தரம் 7S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01) ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது
**வெறும் புத்தகப் படிப்பு பயனற்ற கல்வி**

02) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - **ஒற்றுமை**

03) கந்தையானாலும் கசக்கிக் கட்டு
**வறுமையிலும் செம்மை**

04) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
**சந்தர்பத்தை நவறவிடக் கூடாது .**

05) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
**திறமையில் நம்பிக்கை**

06) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
**விடா முயற்சி பலன் தரும்**

07) குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி மங்காது
**நற்புகழ் மங்குவதில்லை**

08) அடாது செய்தவன் படாது படுவான்
**கேடு செய்பவர் துன்பம் அனுபவிப்பார்**

09) பேராசை பெரு நட்டம்
**எல்லை கடந்த ஆசை துன்பம் தரும்**

10) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
**சுகதேகியாக வாழ்வதே பெருஞ் செல்வம்**



**ஜெ.ஜேனுஸ்கா** – தரம் 6T




(1) நெட்டையான காலுடனே நீள மான கழுத்துடனே சுட்டுப் பொசுக்கும் மணலிலே சுமையைத் தூக்கிச் செல்லும் அது என்ன? - **ஒட்டகம்**

(2) அடித்தால் விலகாது அணைத் தால் நிற்காது அது என்ன? - **நீர்**

(3) சிவப்பு மனிதனுக்கு உடம்பெல் லாம் முள்? - **ரம்புட்டான்**

(4) பச்சை வீட்டுக்காரனுக்கு சிவப்பு வாசல்? - **கிளி**

(5) மூன்று எழுத்துப் பெயராகும் முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? - **பஞ்சு**

(6) பாளை போல் பூக்கும் பார்த்தவர் விரும்பும் பூ. தலையில் சூடாத பூ. அது என்ன? - **வாழைப்பூ**

(7) செம்பு நிறைய சிவப்பு முத்துக் கள் அது என்ன?

- **மாதுளம்பழம்**

(8) வானத்துக்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி. அது என்ன?

- **மழை**




**ஜெ.ஜேனுஸ்கா** – தரம் 6T




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவை வீணடிப்பது புவி வெப்பமாதலைத் தூண்டும்



சூரியனின் வெப்பக் கதிர்களின் தாக்கம் வருடந்தோறும் அதிகரித்து வருவது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந் நிலையில் தற்போது நிலவிவரும் கோடை வெப்பம் பகல் பொழுதுகளில் எரிச்சல் தருவதாக அமைவதுடன் இரவுப் பொழுதுகளிலும் கூட அதன் தாக்கம் நீடிக்கின்றது. இவ்வாறான சூழ் நிலை காரணமாக சூரியன் இல்லாத வேளை யிலும் கூட மின்விசிறிகளை உபயோகிக்க வேண்டிய நிலைக்கு மக்கள் உள்ளாகின்றனர். ஏற்கனவே சூழல் ஆர்வலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் எதிர்வு கூறியவற்றை சூழல் நிலைமைகள் மெய்ப்பித்து வருகின்றன. எதிர்காலம் இதைவிட மோசமானதாக அமையும் என்ற எதிர்வுகூறல்கள் எம்மை மேலும் அச்சுறுத்துகின்றன.

அநேகமானவர்கள் புவி வெப்பமாதல் தொடர்பாக தொழிற்சாலைகள், அனல்மின் நிலையங்கள் போன்ற பாரிய தொழிற்சாலைகளை குற்றஞ் சாட்டிவிட்டு தாம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முன்வருவதில்லை. வீணே ஒளிர்ந்து கொண்டிருக்கும் மின்விளக்கினை அணைத்தல், வினைத்திறனான மின்விளக்கினை உபயோகித்தல், மின்னை விரயமாக்கும் சாதனங்களை அவதானமாக உபயோகித்தல் போன்ற விடயங்களும் கூட புவிவெப்பமாதலைத் தடுப்பதாக அமையும். ஒவ்வொரு தனி நபராக ஓராயிரம் நபர்கள் இந்நடவடிக் கையை மேற்கொள்ளும் போது காற்றினை மாச டையச் செய்தவாறு இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் அனல் மின்நிலைய மின் பிறப்பாக்கி நிறுத்தப்பட ஏதுவாகும். இதேபோன்றே, ஒவ்வொருவரும் உண்ணும் உணவினை



வீணாக்காது செயற்படுவதும் கூட புவி வெப்பமடைதலைத் தடுக்கும் என அனைவராலும் எதிர்பார்க்கப் படுகிறது. உணவினை வீணாக்கு வதால்எப்படி புவி வெப்பமடை யும்? இக்கேள்விக்கான பதிலை ஆராயும் முகமாக காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வகங் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அவதானிப்பை மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் நகரங்கள் நவீன மயமாகுகையில் பல்தேசிய நிறுவனங்களின் உணவகங்கள் ஆங்காங்கே முளைக்கின்றன. உணவகங்களுக்குச் செல்பவர்கள் தேவைக்கு மேலதிகமாக உணவை வரவழைத்து மீதியை விட்டுச் செல்கின்றனர். தாவர உணவுகளை உண்போரும்கூட விலங்கு உணவுகளால் கவரப்படுகின்றனர். ஒரு கலோரி சக்தி தரும் மாமிச உணவு உற்பத்திக்கு எட்டு கலோரி தரும் தானியங்களை வீணடிக்க வேண்டிய நிலைகளும் இன்று உணவகங்களில் இருப்பதாக ஆய்வுகள் வெளியிடப்பட்டுள்ளன. இது மாமிச உணவின் வினைத்திறனற்ற நிலையை வெளிப்படுத்தும். மேலும் இறைச்சிக்காக வளர்க்கப்படும் விலங்குகள் அதிகளவு மெதேன் வாயுவை வெளிப்படுகின்றது.

உலகின் ஒரு பகுதியில் உணவு வீணாக்கப்படுகையில் மற்றுமொரு பகுதியில், குறிப்பாக வளர்ந்துவரும் நாடு-கள் மற்றும் வறிய நாடுகளில் உண்பதற்கு உணவில்லாமல் பசியால் வாடுகின்றனர். சில வறிய நாடுகளை எடுத்து நோக்கும் போது அங்கு சிறுவர்கள் குறை போஷாக்கினால் பாதிப் படைகின்றனர். இவ்வாறு மக்கள் பசியால் வாடுவதற்கு உணவு வீணடிக்கப்படுவதே காரணமாகும். இவ்வாறு உணவு வீணடிக்கப்படுவது மற்றுமொரு வழியில் புவி வெப்பமாதலைத் தூண்டும் காரணமாக அமைகிறது. எவ்வாறெனில் உணவு உற்பத்தி நடவடிக்கையின் போது நிலத்திலிருந்தும் கால்நடைகளிலிருந்தும் பச்சை வீட்டு விளைவு வாயுக்கள் வெளிவருகின்றன. குறிப்பாக நைதரசனீரொட்சைட்டு மெதேன் போன்ற பல வாயுக்களும், விவசாய மற்றும் விலங்குப் பண்ணைகள் ஆகியவை மின்சாரத்தினை உபயோகிக்கையில் அதிகளவில் உருவாகும் காபனீ-ரொட்சைட் வாயுவும் வெளியேறுகின்றது. இதைவிடவும் எமது அன்றாட நடவடிக்கையால் தோன்றும் சூழலுக்கு வெளிவிடப்படும் பல்வேறு வாயுக்களும்கூட இந்த புவி வெப்பமடைதலைத் தூண்டும் மற்றுமொரு காரணியாகத் திகழ்கின்றது. இவை யாவற்றிற்கும் முக்கிய காரணங்களாக இருப்பது. யாரென்று பார்க்கையில் அது நாம் அனைவருமே!



மக்கள் உணவினை வீணடிக்கும் போக்கினையும் உணவுப் பழக்க வழக்கங்க-ளையும் மாற்றிக் கொள்ளாவிட்டால் எதிர்வரும் தசாப்தங்களில் பாரிய நெருக்கடிகளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்ளவேண்டிய நிலைமைக்கு நாம் ஆளாகலாமென ஆய்வாளர்கள் எச்சரிக்கின் -றனர். இந்நூற்றாண்டின் நடுப் பகுதியில் உலக சனத்தொகை ஒன்பது பில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வேளையில் உணவுப் பற்றாக்குறையினை தீவிரமடைவதைத் தவிர்க்க முடியாது போகலாம். ஆகவே தொடர்ந்து வரும் அடுத்த அடுத்த காலகட்டங்களில் அதிகளவு வெப்பம் நிலவும். இதனை "எல்நினோ" என்பர். இந்த எல்நினோ தாக்கத்தை தொடர்ந்து கடுமையான மழை, வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடுமென அதாவது "லாநினோ" தாக்கம் இருக்குமெனக் கூறப்படுகின்றது.

கோயில் தேரினை தனியே ஒருவர் அசைக்க முடியாது. ஆனால் அனைவரும் இணைந்து வடம்பிடித்தால் தான் அது அசைய ஆரம்பிக்கும். இவ்வாறே காலநிலை மாற்றம் தொடர்பில் அனைவரும் முயற்சிப்பது அவசியம். ஒவ்வொருவரும் வீட்டிலும் உணவகங்களிலும்உணவை வீணாக்காது கெட்ட வாயுக்களை உருவாக்காது, புவி வெப்பமடைவதைத் தூண்டாது இருப்பதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்த உறுதியெடுத்துக் கொள்வோம். இந்நடவடிக்கை பசியால் வாடும். மனிதருக்கு உணவுகிடைக்க வழியமைப்பதோடு புவி வெப்பமடைவதைத் தடுப்பதற்கும் உதவுவதாக அமையும்.



**Y.திவ்யாணி** – தரம் - 11E



# வானவில்

வான வெளியைப் பாரம்மா
வண்ணக் கோலம் தெரியுது.
வானம் செய்த விந்தை இதோ
வர்ணத் தோரணம் இட்டவர் யார்?

வானில் ஏழு வர்ணங்கள்
வடிவாய்த் தெரியுது பாரம்மா
இயற்கை ஓவியன் வானத்தே
எழுதிய சித்திரம் இதுதானோ?

ஊதா, சிவப்பு, கருநீலம்
உயர்ந்த மஞ்சள் பச்சையுடன்
சீராம் நீலம் செம்மஞ்சளும்
செறிந்தே தோன்றும் காட்சியிதாம்

ஆகா அழகுக் காட்சிதான்
அதோ மறைந்து போகிறது
வானவில்லும் நிலைக்காதோ
வாழ்வும் பலநாள் நிலைக்காதோ



**L.அக்ஷயா** – தரம் 6L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவத் தலைவிகள்



## *Provincial Visit*



## சுகாதாரக் கழக விருது வைபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரியாவிடை நிகழ்வின் போது....





## உயர்தர மாணவிகளின் சுற்றுலா











## Wash Room Opening





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Why I Love Books

**I** have a little library of my own at home. New I have fairy tales, fun books, and books on Geography, Science, History and literature all of which are presented in the from of a story. I love my books. Whenever I have a holiday, I pick up any book from the shelf and read it.

I get so engrossed in the books that I often forget to eat. My mother has to yell at me to have my lunch.

I often borrow books from my friends and my school Library. Books are a great charm for me. Some of my friends too have started enjoying reading books as much as I do.

Most of my relatives and friends know that the best birthday gift that they can give me is books and with their generosity I have over a hundred books in my personal library now.



M.N Fathima shanaaz - Gr - 6[L]

*My Favourite Book*

# Oliver Twist



Oliver Twist is my favourite story book. It is a book written by the English writer Charles Dickens. It is about a poor boy. He lost his Mother and father and lives in a poor house. He and his friend are very hungry and they asked for more food. They are punished for asking more.

He is sold to a coffin maker. He works in his workshop for some time. He is not treated well in that place. So he ran away to London. There again he leads a very difficult life.

He is very lucky to find his mother's sister Aunt Rose maylie and her family. They give him lots of love and he lives there happily there after.

Thank you.




S.Dimoshin - Gr - 7[L]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To Fight Deadly Dengue Fever in Humans, Create Dengue-Resistant Mosquitoes.



How manipulating the immune systems of mosquitoes can halt the spread of dengue virus.

There's a reason this tropical disease is known as "break-bone fever". To its victims that's how it feels. Dengue fever can cause such severe muscle and joint pain that it can be excruciating for an infected person to even move. It can also cause burning fever, delirium, internal bleeding and even death as the body attempts to fight off the disease. There is no effective treatment, and won't be anytime soon.

Nevertheless, new research has identified a hope for stemming the epidemic and it lies in genetic engineering.

Dengue virus, which is passed on by the same **Aedes Aegypti** mosquito that spreads Zika, has been plaguing humans since at least the late 1700s. But in the past few decades, skyrocketing human population and increased urbanization – particularly in warm, moist regions like South America, Southeast Asia and West Africa – have fueled a growing number of cases. Like the Zika virus, dengue has no symptoms for the majority of those who contract it. But nearly 100 million people annually do develop at least some of its dangerous and excruciating symptoms – and roughly 20, of those die each year.

So farm preventing the spread of dengue has mostly taken the form of old-fashioned mosquito warfare nets, insecticide and draining still water, where mosquitoes like to breed. In 2015, researchers developed a partially effective dengue virus vaccine which was green-lighted in 03 countries. But the vaccine only reduced chances of getting the virus by 60 percent in clinical trials, and because of the risk of developing antibodies; some experts think it may only be safe for people who have already survived an infection.

Today the vaccine is only being used in limited quantities in the Philippines.

Usually, the virus its home in a mosquito after the insect bites an infected human; it rarely passes between mosquitoes. The manipulated genes caused the mosquitoes" immune systems to become more active when



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the bugs fed on blood, which is when they contract dengue virus. This stimulation made the mosquitoes significantly more resistant to the different types of dengue virus.

Oxitec's methods (Oxitec – The British Biotechnology Company) are effective in the short term. But eliminating the mosquito population from an area will not make it mosquito-free permanently, because mosquitoes' from other areas will eventually fill the empty niche left behind.

Replacing the wild mosquitoes with live but resistant mosquitoes, however, will act as a tasting barrier to spreading tropical diseases.

We have to remember that these disease hare been with us for a very long time. There's no human way to test in the lab whether or not humans will contract dengue less often from these mosquitoes. As a result, wi'll only know for sure how effective the gene manipulation is once the mosquitoes have been released.

Moreover, the immune systems efforts to fight the virus can attack the body instead – causing hemorrhaging, seizures and even death.

***"The fight against these diseases is like a war"***

***"You can't win it with one weapon."***

*Thank you.*



**R.Sivadharini**
Grade - 11L (2016 O/L Batch)

# Save the Earth

- *Our Earth is a beautiful place.*
  *Where lovely fauna and flora make up every space Nature is always trying to give us things of joy No wonder she is admired by every girl and boy.*

- *Our Earth is a partner of the universe. So poets have described it in beautiful verse This planet is a place of great wonder and joy But mind you, It's not a toy.*

- *This home of ours comes at a precious price Don't disregard it – you will never get anything as nice*
  *Take care to conserve our planet's green cover Once its gone, it can never recover.*



**C.J.Mayrariniy** Gr - 11L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவனின் தனித்துவ ஆளுமையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும்



"கல்வியில் சிறந்த கல்வி அனுபவக் கல்வி" என்று சான்றோர் சாட்சி பகர்கின்றனர். நாகரிகம் என்று இன்று நறுமணம் கமழும் உலகில் விளையாட்டு என்னும் வியப்பும், விவேகமும் வெற்றியும் தெளிவும் , துணிவும், தென்பும் அழகாண்மையும் நிறைந்த மாணவன் ஒருவனை புத்தகம் மட்டுமே உருவாக்க முடியாது என்பது உலகறிந்த உண்மை ஆகும்.

பூகோள மயமாகும் இவ்வுலகில் மேற்குறிப்பிட்ட அனைத்தும் வனப்பு இழந்து, பெறுமதி இழந்து தனித்துவமும் அதன் தன்மையும் இழந்து போவதற்கு "விளையாட்டும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பங்களிப்பும்" மாணவரிடையே காணப்படாமையே முக்கிய காரணமாக அமைகின்றது.

விளையாட்டுக்களில் விசேட தினங்களில் பண்பாட்டில் கலை, கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமையால் வாழ்வு நோக்கிழந்து, வனப்பிழந்து, வலுவிழக்கும் வலைக்குள் சிக்கிக்கொள்ளும் வாய்ப்பு உருவாகின்றது. தன்னிகரில்லாத தன்மையும் தனித்துவமும் அறிவாற்றலும் புத்தகங்களின் உதவியுடன் உருவாகின்றன என்பதை ஒப்புக்கொள்ளும் அதேவேளை, கலிக்கம் கட்டிய குதிரை போல செல்லும் வாழ்வே இன்று காண்பது வேதனை தருவதொன்றாக அமைகின்றது.

"இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்" என்ற கூற்றுக்கமைய இனி வாழும் உலகைப் பாரமெடுக்கும் இன்றைய சமுதாயம் பூரண ஆளுமை உடையதாக அமைய வேண்டியது மிகவும் இன்றியமையாதது. இதற்கான பெரும் பணியை பாடசாலையிலே இடம் பெறும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் திறம்படச் செய்கின்றன.

பாடசாலைச் செயற்பாட்டில் காணப்படும் மூன்று முக்கிய துறைகளான மையக் கலைத்திட்டம், மறை கலைத் திட்டம் என்பவற்றுடன் காணப்படும் இணைந்த கலைத் திட்டத்தினூடாக இச்செயற்பாடுகள் செவ்வனே நிறைவேற்றப்படுகின்றன. இதற்கு உதாரணமாக கல்விச் சுற்றுலா, பாடசாலை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், மொழித் தினக் கொண்டாட்டங்கள், கண்காட்சிகள் . கலாசார விழாக்கள் ஏனைய பிற விழுமிய நிகழ்வுகள் போன்ற பலவற்றைக் கூறலாம். இவற்றில் மாணவன் முழுமையாக ஈடுபடு கின்ற போது மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் ஓர் மாணவன் பூரணப்படுத்தப்படுகின்றான். தார்மீகம் என்ற தன்னலம் அற்ற நற்பண்பு நானிலத்தில் உருவாக புத்தகங்களும் அவற்றின் பயன்பாடும் அத்தியவசியமானவைகளாகக் காணப்படுகின்ற அதேவேளை இணைப் பாடவிதானச் செயற்பாடுகளான கலை, கலாசார நிகழ்வுகளும் பண்பாட்டுக் கொண்டாட்டங்களும் விசேட தின வைபவங்களும் உடல் நலத்தையும் உடல் வலிமையையும் உளநல உணர்ச்சியையும் அனுபவிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டும் அதனோடு சேர்ந்த வினோதங்களும்விசேட வழிமுறைகளை ஏற்படுத்துகின்றன.

தீய பழக்கவழக்கங்களினால் உடல் நலக் குறைவும் மதிப்பிழந்து, ஒழுக்கமிழந்து ஆயுள் குறைவுடன் வாழும் வாழ்க்கையினை வேரோடு அறுத்து நற்பண்பும், நல்லொழுக்கமும், நற்சிந்தனையும், நன்மதிப்பும், நன்றி மனப்பாண்மையும் வளர்வதற்கு உந்துதலாக விளையாட்டும் வெற்றியும் வினோதமும் வித்திடுகின்றது.

உலகமயமாதல் எனும் அலை, கரை கடந்து மோதும் சூழலில் மதுபானமும் போதைவஸ்துகளும், தொலைத்தொடர்புச் சாதனங்களும், இலத்திரனியல் பொருட்களும் இன்று ஆக்கிரமித்து அங்கலாய்ப்புக்கள், அநேகம் உயிர்கள் அமிழ்ந்து போகும் சூழலில் இணைப்பாடவிதான செயற்பாட்டினால் மட்டுமே ஆளுமை, தனித்துவம், தற்பாதுகாப்பு தரா தரம் ஏன் தரணியை ஆளும் தகைமை முகாமைத்-துவம், சுகத்துடன் கூடிய பலம் என்பன உரு-வாகும் வாய்ப்பு உண்டு என்று கூறினால் அது மிகையாகாது.

புத்தகமே தத்துவம் என்னும் பூர்வ கால கோட்பாட்டினை ஏற்றுக்கொண்டாலும் பரீட்சையையும் அதன் பெறுபேறுகளையும் இலக்காக வைத்து செயற்படுத்துவதைத் தவிர்த்து, விளையாட்டு மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால், சமுதாயத்தில் சாங்கோ பாங்கான வாழ்வு வாழ்வதற்கு சூழலை உருவாக்கும் விளையாட்டுக்களை விலக்காது அவற்றில் ஈடுபட்டு உடல், உள, மனவலிமை ஆற்றலுள்ள நற்பண்புள்ள சன்மார்க்கப் பாதையில் நன் மார்க்க ரீதியில் நேர்மையான நம்பகமான நற் சமுதாயமாக மாணவமணிகள் மாறும் மார்க்கத்திற்கு மாற்றீடாக வேறெதுவும் அமைய முடியாது என்பது திண்ணியமான உண்மை.



**திருமதி.சுவீற்றா பிரியாழினி எபநேசர் தர்சனி**
உடற்கல்வி ஆசிரியர்

## உலகின் முதலாவது அதிசயம்

சின்னஞ்சிறு மொட்டுக்களாய்
சிங்கார தேன் சிட்டுக்களாய்
பூவில் வட்டமிடும் வண்டுகளாய்
உலகின் முதலாவது அதிசயமாய் – இப்
பூவுலகை அலங்கரிக்க வந்துதித்தார்கள்
இச் சிறார்கள்

கள்ளமில்லா உள்ளத்துடனும்
கவர்ந்திழுக்கும் பார்வையுடனும்
கண்ணைக் கொள்ளை கொள்ளும் அழகுடனும்
ஊனும் உறக்கமுமே தெரிந்தவர்களாய்
உலகில் வலம் வந்த வண்ணம் உள்ளனர்
இச் சிறார்கள்.

காற்றில் பறக்கும் காற்றாடி போல்
கஷ்டம் கலகம் பற்றி அறியாதவர்களாய்
கற்றுக் கொடுத்ததைத் திருப்பச் சொல்லும்
கிளிப்பிள்ளையாய் வாழ்கின்றார்கள்
இப் பாலகர்கள்.

ஆச்சரியம் ததும்பும் அன்பு விழிகளும்
அஞ்சா நெஞ்சத்துடனும்
அறிவுக் கடலாய் திகழும்
உன்னத புத்திக் கூர்மையுடனும்
புதுமைப் பித்தன் பாரதியாரின்
ஓடி விளையாடும் பாப்பாக்களாய்
உன்னத உலகில் வாழ
வாழ்த்துகின்றோம்.



**பிரித்திகா இராகவன்**
தரம் $8^E$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உன்னை அறிந்தால் உலகத்தில் முன்னேறலாம்"

இன்று பலரிடம் திறமையும் போதியளவு பயிற்சி அனுபவமும் காணப்படுகின்றன. ஆனால் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படாமையால் தனிமனித உயர்வுக்கு பொருளாதார வளர்ச்சிக்கும் குந்தகமாக இது காணப் படுகின்றது. இத்தகைய தடைகளை தகர்த்து, தனிமனிதனது திறமை, பயிற்சி, முயற்சி என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டி வெற்றிக்கு வழிகாட்டும்.

"வேலை தருவது அரசின் கடமை" என்ற எதிர்பார்ப்பில் வீணே நாட்களைக் கழிக்காது வறுமைப்பட்டு வாழ நாதியற்று வருந்தும் மக்கள் தமது வாழ்க்கையை வளம் படுத்த ஏதாவதொரு சுயதொழில் முயற்சியில் ஈடுபட வேண்டியது அவசியமானதொன் றாகும். அதுமட்டுமன்றி இன்றைய விலை வாசி ஏற்றம், வாழ்க்கை மாற்றம் என்பன ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக்கூட துண்டுவிழும் வரவு செலவாகவே காணப் படுகின்றது. தமது பிரதான தொழிலோடு கூட ஒரு சுயதொழிலையும் கற்றுக்கொண்டார். இன்னும் வாழ்க்கை வளமாகும். இதற்கு உதவியாக இதோ சிறிய இலகுவான சுய தொழில் முயற்சிகள்.

**மார்ஷ்மலோ தயாரித்தல்**



எல்லோரும் விரும்பி உண்ணும் இனிப்புப் பண்டங்களில் இதுவும் ஒன்றாகும். அதிக முத லீடு அதிக முதலீடு இன்றியும், சிரமமுமின் றியும் இதனை வீடுக ளில் தயாரிக்கலாம். எல்லா விழாக்களிலும் பரிமாறலாம். பொதுச் சந்தை, கடைகள், பாடசாலைச், சிற்றுண்டிச்சாலை போன்ற இடங்களில் சந்தைப்படுத்தும் வாய்ப் -புண்டு.

**மூலப்பொருள் :** சீனி, திரவக்குளுக்கோஸ், ஜெலட்டீன் கோர்ன் பிளவர், எசென்ஸ், கலரிங்.

**உபகரணங்கள் :** வெப்பம் வழங்கும் அடுப்பு, அலுமினியப் பாத்திரம், மர அகப்பை, சமைய லறைத் தராசு, 20 தகரத் தட்டுகள் சமயலறைக் கத்தி, பொலித்தீன் சீற், பீட்டர்

**முதலீடு :**

உபகரணங்களும், மூலப்பொருளும் - ரூபா 16,000/-

மாத வருமானம் - ரூபா 4,000/-

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| ஜெலற்றின் | - 30 கிராம் |
| சீனி | - 450கிராம் |
| தண்ணீர் | - 2கப் |
| கோர்ன் பிளவர் | - சிறிதளவு |
| எசென்ஸ் | - " |
| கலரிங் | - " |

**செய்முறை :**

ஜெலற்றீனை ஒரு கப் தண்ணீர் விட்டு கலக்கி வைக்க வேண்டும். பாத்திரமொன்றில் ஒரு கப் தண்ணீரில் குறிப்பிட்ட ளவு சீனீயை இட்டு அடுப்பில் வைத்து சூடாக்க வேண்டும். 10-15 நிமிடங்களின் பின்னர் சீனிப்பாகை இறக்கி கலக்கிவைத்த ஜெலற்றீனைச் சேர்த்துச் அதனுடன் அளவான எசென்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலரிங் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். பின்னர் இக்கலவையை பீட்டரினால் நன்றாக நுரை வரும்வரை அடிக்கவேண்டும். அடித்த கலவையை நெய் அல்லது மாஜரீன் தடவிய தட்டில் வார்த்து பின் எட்டு மணித்தியா லங்கள் உறைய வைத்தல் வேண்டும் பின்னர் சிறு சதுரங்களாக வெட்டி கோர்ன் பிளவரில் பிரட்டி எடுத்து பொதி செய்தல் வேண்டும்.

**மாவகை பொதிசெய்தல்**

அரிசிமா, உழுந்துமா, குரக்கன்மா, கடலைமா, பனை ஒடியல்மா ஆகிவற்றை பொதிசெய்து சந்தைப்படுத்தலாம். தானியங்கள் விரைவில் உழுத்துப்போகும் தன்மை உடையவை. இவற்றை அரைத்து, மாவாக்கி, பதப்படுத்தி, பொதிசெய்து வைப்பதன் மூலம் நீண்டகாலத்துக்குப் பயன்படுத்தலாம். விலை அதிகரிக்கும் காலங்களில் பொதி செய்து விற்பதன் மூலம் அதிக வருமானம் பெறலாம். இதில் பெரிய தொழிநுட்பம் எதுவுமில்லை. நன்கு பதப்படுத்தப்படவில்லையெனில் மா விரைவில் பழுதடைந்து சந்தைவாய்ப்பை இழந்துவிடும். மா வீணாகாது பொதி செய்தல் வேண்டும்.

**மூலப்பொருள்:-** தானியங்கள் கிழங்குவகை

**உபகரணங்கள் :-** அரைக்கும் இயந்திரம், அல்லது மனித வளம் விற்தராசு, பொலித்தீன், பொலித்தீன் சீலர்

**முதலீடு** :- உபகரணங்கள் :- 18000/-
மூலப்பொருள் :- 16000/-
மாதவருமானம் :- 30000/-

இதனை வீட்டில் இருந்தவாறே ஓர் உபதொழிலாக மேற்கொள்ளலாம். மனித வளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக வருமானத்தைப் பெறலாம்.

" செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சீவியம் ".



**திருமதி.தி.கனகராஜா**
மனையியல் ஆசிரியை

# சாற்றுவார் யாருமில்லை

நாகரிக மோகம் எல்லாம்
நம்மை வந்து தாக்கி
பூவுலகில் நாம் காட்டும்
புதுக்கூத்து கொஞ்சமல்ல

உலகமயமாதல் தந்த
ஆயிரம் மாற்றங்களும்
பலவகையாய் நமைமாற்ற
படும்பாடு தாமறிவீர்!

முன்னோர்கள் ஆக்கி வைத்த
நூல்களை மறந்து விட்டு
முகநூலில் அறிமுகத்தை
முகம்பார்த்து அலட்டுகின்றோம்

எத்தனை விளையாட்டுக்கள்
இத்தரை மீதினிலே
அத்தனை தடைகளையும்
தொகையாக அறிந்திருந்தும்

மாற்றங்கள் என்று சொல்லி
மாறவே தொடங்கிவிட்டோம்
சாற்றுவார் யாருமின்றி
சரிவதுதான் நிச்சயமே!



**திருமதி.J.பாரதி** - சங்கீத ஆசிரியை

# Most People want to be an Educated Person. BUT

- It is not acquiring the best Grade or the first Rank, but to have that prudence to face challenges in life with integrity;
- To overcome trying situations with a serenity and calmness; it is relating to people with open mind without being biased by past experiences or cast, colour or....;
- Being able to relate without allowing the hurts that the other has caused me;
- It is acquiring the courage to rise above the trifles and having the broader vision...

**TO MENTION A FEW STANDARD VIEWS: ......**

- An educated person has the ability to think clearly and independently.
- An educated person has good judgment.
- An educated person has the ability to take the initiative and work alone.
- An educated person has the ability to speak clearly.
- An educated person has the ability to reason analytically and critically.
- An educated person has the ability to think inductively and deductively.
- They can discern truth from error, regardless of the source.
- An educated person knows how to distinguish between the important and the trivial.
- An educated person understands human nature and has the ability to establish, maintain, and improve lasting relationships.
- An educated person knows how to establish rapport with others; they know how to get others to trust and respect them.
- An educated person knows how to cooperate and collaborate effectively with others.
- An educated person knows how to resolve conflicts with others.
- An educated person has the ability to conceptualize and solve problems.
- An educated person knows how to make decisions.
- An educated person has the ability to see connections among disciplines, ideas & cultures.
- An educated person is someone who has been educated holistically: creatively, culturally, spiritually, morally, physically, technologically, and intellectually.
- An educated person has achieved victory over themselves; they know how to withstand discomfort in the short term in order to achieve important goals in the long term.
- An educated person has the capacity to endure and persevere.
- An educated person is self-aware; they know how to perceive and manage their own internal states and emotions.
- An educated person knows where and how to focus their attention.
- An educated person has ethical values and has integrity.
- An educated person has the ability and the discipline to do what is right.
- An educated person has equal esteem for everyone, without regard to gender, race, religion, country of origin, and so on.
- An educated person capable of doing new things; they have the ability to generate ideas and turn them into reality.
- An educated person is innovative.
- An educated person is one whose natural curiosity has been awakened with the purpose of satisfying that curiosity.
- An educated person has the ability to pursue lifelong learning.

**CONCLUSION:** Am I a learned person? Let's be truly EDUCATED not focusing our attention on mere book learning and heaping up of paper confirmation. Let our life bear witness to the degree of our learning and not mere degree!



*Sr. Maria Vijitha A.C*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

(1) ஆணுக்கு ஏற்றநகை பெண்ணுக்கு ஏற்றநகை முகத்தில் அணியும் நகை என்னநகை?

**புன்னகை**

(2) கதவில்லாத கோட்டைக்குள் வெள்ளைக்காரனும் மஞ்சள் காரனும் வாழ்கிறார். அது என்ன?

**முட்டை**

(3) இது துள்ளுவதைப் பார்க்கலாம், அழுவதைப் பார்க்க முடியாது அது என்ன? **மீன்**

(4) உள்ளே இருந்தால் கல்நெஞ்சுக் காரன் வெளியே வந்தால் உருகி ஓடாய்ப் போவான்?

**ஐஸ்கட்டி**

(5) கண்ணிருந்தும் குருடன் குடும்பி இருந்தும் பூச்சூட வழியில்லை. அவன் யார்? **தேங்காய்**

(6) பாட்டுப்பாடி வருவான். பாடாய்ப் படுத்திவிட்டு போவான். அவன் யார்?

**நுளம்பு**

(7) இரண்டு கால்கள் உடையவன் தனித்தனியாக ஓடுவான். அவன் யார்? **கடிகாரம்**

(8) வெள்ளைமேனிக்காரன் ஊதினால் பறந்து விடுவான். அவன் யார்? **பஞ்சு**

(9) உருண்டை மண்டைக் காரரை ஓங்கி உடைத்தால் வெள்ளையாகச் சிரிப் பான்.
அவன் யார்?
**தேங்காய்**



**M.டினோதனா** – தரம் 6S

# அம்மா நீ!



என்னைப் பத்து மாதம்
சுமந்து பெற்றவளும் – நீ
என்னைப் பல வருடங்கள்
தாங்கி வளர்த்தவளும் – நீ
ஆயிரம் சுமைகள்
உனக்கு இருந்தாலும்
அதில் என்னைச் சுமையாக
எண்ணாது
சுவையாக நினைத்து
அழகு படுத்தி ரசித்தவளும் – நீ
சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு
என்னை வரச் செய்தவளும் – நீ
உண்மையான அன்பை
எனக்கு தந்தவளும் – நீ
அதை எனக்குப் புரிய
வைத்தவளும் – நீ



**P.ஹேறனுகா** – தரம் 5C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நமது தாய் மொழி

தமிழ் மொழி எம் தாய் மொழி. எம்மைப் பெற்றெடுத்த தாய் தாலாட்டியதும் தமிழ் மொழியிலே தான். எம்முடன் உறவாடியதும் இம்மொழியிலே தான். நாம் தம் மொழியி - லேயே சிந்திக்கின்றோம், தமிழ் மொழியிலே பேசுகின்றோம். எனவே தமிழ் மொழியைப் பற்றி நன்கு அறிய வேண்டியது அவசியமாகும்.

உலகத்தில் வழங்கி வரும் ஆயிரக்கணக்கான மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். தமிழ் மொழி தொன்மையும் பெருமையும் வாய்ந்தது. வளமான இலக்கண இலக்கியங்கள் நிரம்பப்பெற்றது. சொல் வளம்மிக்கது. தமிழ் மொழி இயல், இசை, நாடகம் எனும் மூன்று பிரிவைக் கொண்டது அதனால் தமிழ்மொழியை முத்தமிழ் என்பர். தமிழுக்கு இனிமை என்றொரு பொருள் உண்டு. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழியைப் போல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாடியுள்ளார். மேலும் தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத்தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்...." என்று கவிஞர் பாரதிதாசனும் பாடியுள்ளார்.



தமிழ்மொழி பல்வேறு சமயத்ததவர்களாலும் அரவணைக் கப்பட்ட மொழியாகும். சைவர்கள், வைஷ்ணவர்கள், சமணர்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்த - வர்கள், ஆகியோர் தமிழ் மொழி மூலம் தங்கள் சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளனர். இவர்களின் பல்வகைப்பட்ட இலக்கியங்கள் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளன. தமிழ்மொழி தமது வாழ்க் - கையின் சகல நிலைகளிலும் கலந்துள்ளது. நமது தாய் மொழியாம் தமிழ் மொழியை மேலும் வளர்த்திட வேண்டியது நமது தலையாய பொறுப்பு. தமிழ் மொழியை பிழையறப் பேசவும் பிழையற எழுதவும் நாம் முயல வேண்டும்.



**ர. டேனிஷாலி ஆன்** - தரம் - 7[s]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பழமொழிகள் நீதியைக்கூறுவதோடு வாழ்க்கையை நேர்மைப்படுத்தும் கருத்துக்களைக் கொண்டவை. இவற்றைப் பயன்படுத்தாதவர்கள் எவருமில்லை எனலாம். நமது நாளாந்த வாழ்க்கையில் பழமொழிகளைப் பயன்படுத்துவதை அறிவோம். எளிமையான வாசகங்களைக் கொண்ட பழமொழிகள் நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகின்றன. நம் முன்னோர் நமக்களித்த அருஞ்செல்வமாக அவை மிளிர்கின்றன. அவற்றைப் பேணிப் பாதுகாப்பதும் அவற்றின் கருத்துணர்ந்து வாழ்வதும் நமது தலையாய கடமையாகும். பழையமொழி பழமொழி பழகிப் போன மொழி பழமொழி, பழக்கத்திற்கு வந்துவிட்ட மொழி பழமொழி. பழமையாகச் சொல்லப்பட்டதாலும் காலத்தை வென்று எப்பொழுதும் ஏற்கக்கூடியதாக உள்ளதாலும் பழமொழி என்றெல்லாம் இதற்கு பொருள் கூறுவர்.

உலகில் ஒவ்வொரு மொழியிலும் மக்களுக்கு நீதி போதிக்கும் பழமொழிகள் உள்ளன. ஆயினும் அவையனைத்தும் புகட்டும் கருத்துக்கள் பெரும்பாலும் ஒரே தன்மையுடையனவாக விளங்குகின்றன. நாடும் மொழியும் வேறுபட்டாலும் பழமொழி கற்பிக்கும் பாடம் ஒன்றாகத்தானிருக்கும் என்பர். பழமொழி என்பது தோற்றத்தால் பழையது : ஆனாலும் பயன்கருதி பார்க்கும் போது புதியதுதான். சிந்திக்கத் தூண்டும் வகையில் குறுகிய வாக்கிய அமைப்பில் அழமான விடயங்களைப் பழமொழிகள் சொல்கின்றன. நமது முன்னோர்கள் அனுபவசாலிகள். அவர்கள் தாங்கள் கண்ட யதார்த்தபூர்வமான உண்மைகளை நறுக்குத் தெறிந்தாற் போல் வெளியிடும் போது அழகான சிறிய வாக்கிய அமைப்பில் அவை அமைந்து விடுகின்றன. அவ்வாறாக உலக நாடுகளின் பழமொழிகள் சில வருமாறு :

***சீனா*** : வாழ்க்கையில் தோல்வியுற்ற ஒருவனிடம், உனது வெற்றியைப் பற்றி பேசுவது அவனது பகையை சம்பாதிப்பதாகும்.

**அமெரிக்கா** : ஏழைக்கு ஒருபோதும் வாக்குக்கொடுக்காதே!
பணக்காரனுக்கு ஒரு போதும் கடன்படாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜப்பான்** : ஏழ்மையிலிருந்து செழுமைக்குப் போகும் பிரயாணம் மிகக் கடினம், ஆனால் திரும்பி வருவது எளிது

**இந்தியா** : சிறு குழந்தை இல்லாத வீடும் வீடன்று ! சீரகம் இட்டு ஆக்காத கறியும் கறியன்று

நமது அன்னைத் தமிழில் ஆயிரமாயிரம் பழமொழிகள் உள்ளன. அவை மக்களால் நாளாந்தம் பயன்படுத்தப்படுவதைக் கண்ணாரக் காண்கின்றோம். படிப்பறிவற்றவன் கூடத் தான் பேசும் போது நீதி, நேர்மை, நியாயத்தை வலியுறுத்திப் பழமொழிகளைப் பயன்படுத்துவதைக் காணலாம். நமது வாழ்வோடும் பண்பாட்டோடும் பழமொழிகள் எப்படி இணைந்து கலந்துள்ளன என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

பழமொழிகள் வாழ்க்கை உண்மைகளைக் காலங்காலமாக மக்களுக்கு உணர்த்தி வருகின்றன. பழமொழிகள் அனைத்தும் இலக்கண சுத்தமாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதில் எண்ணங்களே பிரதானமாக அமைகின்றன. மொழியில் சிறந்த பாண்டித்தியம் இல்லாதவனும் அனுபவ வாயிலாக அருமையான உண்மைகளைச் சொல்லிவிட முடியும். எனவே கொச்சையான மொழிகூட அனுபவபூர்வமான, அபூர்வ உண்மைகளைக் கூறும் போது அவை கூட பழமொழிகளாகிவிடலாம்.

பழமொழிகளை எவரும் திட்டமிட்டுப் படைப்பதில்லை. நாடோடிப் பாடல்கள் மாதிரி இவையும் உணர்ச்சி வெளிப்பாடாக மக்கள் நாவினின்று தோற்றியவை ஆகும். பழமொழிகளுக்கு எவரும் இலக்கணம் வகுத்து வரையறையிட்டு சொல்ல முடியாது. அவற்றில் பொதிந்துள்ள கருத்துக்களும் சொல்லப்பட்டுள்ள முறையுமே அவற்றிற்கான இலக்கணமாகும். பழமொழிகளின் பயன்பாடு அளவிடற்கரியது. அவை நமது வாழ்க்-கைக்குப் பெரிதும் பயன்படுவன எனலாம் பழமொழிகளை வைத்து வாழ்க்கைக்குத் தேவையான எத்தனையோ விடயங்களை நாம் புரிந்துகொள்ள முடியும்.

வேறு எவற்றிலும் பார்க்க முடியாதவாறு பழமொழிகளில் அனுபவம் பெரிதும் பேசப்படுகின்றது. இதனால் அவை வாழ்க்கைக்கு அவசியம் தேவைப் படுவன என்று துணிந்து கூறலாம்.

எந்தப் பழமொழியையும் மேலெழுந்தவாரியாகப் பார்ப்போமானால் ஏதோ ஓர் அர்த்தம் தோன்றும். அந்த அர்த்தம் மட்டுமே அப்பழமொழியின் முழுமையான கருத்தாகிவிட முடியாது. மென்மேலும் சிந்திக்க சிந்திக்கப் பல்வேறு உண்மைகள் அதிலிருந்து கிளைவிட்டுச் செல்வதைக் காண முடியும்.

சுருங்கக்கூறின், பழமொழி என்பது ஒரு விதை போன்றது. அதை நம் மனதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாக ஊன்றி சிந்தனை என்னும் நீருற்றி வளர்ப்போமாயின் அது வாழ்க்கைக்கு உகந்த பயன்தரும், பல மலர்களையும் கனிகளையும் நல்கும். அத்தகு பெருமைமிக்க பழமொழிகளைப் பேணிப் பாதுகாப்பது படித்து இன்புறுவது நமது தலையாய கடமையாகும். எடுத்துக்காட்டாக சில பழமொழிகளையும் அவற்றின் கருத்துக்களையும் நோக்குவோம்.

**'பழுத்த ஓலையைப் பார்த்துக் குருத்தோலை சிரித்ததாம்'.** பழுத்த பனையோலையொன்று பனை மரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. காற்றடித்தால் வீழ்ந்துவிடும். அதனுடைய பரிதாப நிலையைப் பார்த்து குருத்தோலை சிரித்தது. அந்த சிரிப்பின் அர்த்தம் என்ன? **நீ கிழடு தட்டிப்போய் இன்றைக்கோ நாளைக்கோ என்று இருக்கின்றாய். ஒருகணம் திரும்பிப்பார். எவ்வளவு இளமையோடும் பொலிவோடும் இருக்கின்றேன்'** என்று நையாண்டி பண்ணுவது அச்சிரிப்பில் இருந்தது.

இப்பொழுது பழுத்துத் தொங்கும் ஓலையும் ஒரு காலத்தில் குருத்தோலையாகத்தான் இருந்தது. இப்பொழுது குருத்தோலையாக இருக்கும். நானும் ஒரு காலத்தில் பழுத்த ஓலையாகி விழ வேண்டியிருக்கும் என்பதை அது மறந்து விட்டது. மூப்பு என்பது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்று. என்றோ ஒருநாள் அனைத்து உயிர்க்கும் அது வந்தே தீரும். முதுமையும் தள்ளாமையும் என்றோ ஒருநாள் நமக்கு வந்தே தீரும். இந்த உண்மை சாதாரணமானதுதான். ஆனால் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டது. இதனை நன்கு சிந்தித்தால் இளமையின் அகம்பாவம் நம்மை விட்டு நீங்கிவிடும்.

இந்தப் பழமொழியில் மற்றோர் கருத்தும் மறைந்து கிடக்கின்றது. முதுமைக்கும், அதைத் தொடர்ந்துவரும் மரணத்துக்கும் மனிதன் தயாராகிவிட்டால் எத்தனையோ விடயங்களில் அவனுக்கு இருந்த குழப்பங்கள் நீங்கிவிடும். அன்றைக்குள்ள சூழ்நிலைகளுக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வசதி கிட்டும்.

மூத்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் எண்ணம் எழும். தன்னைவிட தாழ்ந்த நிலையில் உள்ளவர்களையும் பலவீனமானவர்களையும் அலட்சியப்படுத்தும் எண்ணம் தோன்றாது.

**'பழுத்த ஓலையைப் பார்த்து குருத்தோலை சிரித்ததாம்'** என்ற பழமொழி மிகப்பெரிய வாழ்க்கை உண்மையை நமக்குப் புலப்படுத்துகின்றது. வாழ்க்கையின் உண்மைத் தன்மையைச் சிந்திக்கத் தூண்டுகின்றது

மற்றொரு பழமொழியைப் பார்ப்போம்.

**"அடி உதவுகிற மாதிரி அண்ணன் தம்பி உதவமாட்டார்"** என்பதும் ஒரு பழமொழி. இந்தப் பழமொழிக்கு ஒருவரை அடித்து உதைத்தால் மிகுந்த பயனடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றப்படி ஒருவனின் அண்ணன் தம்பிகளின் சிபாரிசு கூட அவனுக்கு பெரிய பயன் தந்துவிடாது. வன்முறையால் காரியம் சாதிக்க முடியும் என்ற கருத்து நடைமுறையில் இருந்து வருகின்றது. இது தவறான கருத்தென இக்கால அறிஞர்கள் கூறுகின்றனர்.

உண்மையில் இதன் ஆழ்ந்த கருத்தினை ஒருகணம் நாம் சிந்திக்க வேண்டும். இறைவனின் திருவடித்துணை இருந்தால், அதாவது திருவருள் இருந்தால் மாபெரும் பயன்களைப் பெறலாம். மற்றப்படி அவர்கள் அண்ணன் தம்பியாகவே இருந்தாலும் அவர்கள் எத்தகைய பேருதவி புரிந்தாலும் இறைவனின் திருவடி துணையால் பெறும் பயனுக்கு நிகராகாது. இதுவே இப் பழமொழி கற்றுத்தரும் பாடமாகும்.

பகட்டைக் கண்டு ஏமாறுவது மனித இயல்பு. மனித சுபாவத்தின் மிகப் பெரிய பலவீனம் இது. எனவேதான் அனுபவசாலிகளான நம் முன்னோர்கள் எச்சரிக்கையாகக் கூறியுள்ள பழமொழி ஒன்றினை நோக்குவோம். அப்பழமொழி

**" மின்னுவதெல்லாம் பொன்னல்ல"** என்பதாகும்.

ஒருவனது எடுப்பான தோற்றத்தை மட்டும் வைத்து அவனை எடை போட்டு ஏமாந்து போகின்றோம். மின்னுகின்ற எல்லாம் பொன் என்று எண்ணி விடுகின்றோம். கம்பீரமான தோற்றம், பொருத்தமான உடை, கவர்ச்சியான பேச்சு இருக்கின்ற ஒருவர் நம்மை எளிதில் கவர்ந்துவிடுவார். இது இயற்கையும் கூட ஆனால் அந்த மனிதனின் குணநலன்களையும் பண்புகளையும் அவனோடு பழகும்போதே புரிய முடியும். எனவே தான் தோற்றத்தை மட்டும் வைத்துக்கொண்டு முடிவுகளுக்கு வந்துவிடக்கூடாது. தோற்றத்திற்குப் பின்னேயுள்ள குணங்களையும் வைத்துத்தான் நாம் முடிவு செய்ய வேண்டும், என்று பாடம் புகட்டுகின்றது இப்பழமொழி. அவசரப்பட்டு முடிவுகளுக்கு வராமல் ஆற அமர சிந்தித்து சரியான முடிவுகளுக்கு வரவேண்டும் என்பதையே இப்பழமொழி தெளிவுறுத்துகின்றது.

இவை போன்ற ஆயிரமாயிரம் பழமொழிகள் நமது தமிழ் மொழியில் உள்ளன. இவற்றை மேலேழுந்தவாரியாக நோக்காமல் ஆழ்ந்து சிந்தித்தால் அரிய தத்துவங்கள் பலவற்றையும் நாம் அறிந்திட முடியும். நமது முன்னோர்கள் யதார்த்த பூர்வமாக அனுபவத்திற் கண்ட அரிய உண்மைகளைப் பழமொழிகளாக நமக்கு தந்துள்ளனர். அவற்றை பொருளுணர்ந்து நாம் கற்றிட்டால் நம் வாழ்வும் சிறக்கும் நன்மைகள் பெருகும்.



**"பாடம் பல புகட்டிடும்**
**பழமொழிகள் கற்றிடுவோம்"**

T.லேனுஜா – தரம் 11E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்தோர் - 2016



## Best Achievers for Scholarship - 2016

186 Marks



3rd Rang for District

Y.A.Sanjika



M.J.P. Prashani, N.Janucsha

T.Tharukkshana, P.Rukshanya, T.Thanushikka, C.Jathushini

A. Minuvarthana, R. Tiffany Selyna, F.Anjani Anurshika, S. Jerusali, P.Thashangarii

S.Sheroni, J.Daniska, Y. Mithushicka, J.Prithika, T.Shelah, U.Regeshna

M.Thejaswini, K.Kaarni, R.Rakshikka, S.Yhathavi, Q.Nitsha divny, V.Akshayaeni, K.Michael Abisha

A.Tejashwiny, S.Sathruthya, J.Chrisminrajini, S.Suthiksha, S.Yojitha, S. Mathusha, S. Ashmitha, T.Akshitha

G.Thushani mensika, R.Manashika, T.Shishani, J.Danojika, V.Sujithra, S.Nithursha, K.Vaishaly, R.sYvonne Akshala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Congratulation to the Achievers of the
G.C.E. A/L - 2016




தேசிய மட்டத்தில் பங்குபற்றியமைக்கான வாழ்த்துக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# කෝච්චිය



කඳු වැටිනැග නැග
පල්ලම් බැස බැස
සද්දෙන් ගොස ගොස
කෝච්චි එනවා කෝච්චි එනවා
කොළඹට එනකොට
ආපහු යනකොට//
පිඹගෙන හූ හඬ
කෝච්චි එනවා කෝච්චි එනවා
රටකජු රඹුටන් අරගෙන නාරං//
කෝච්චියෙන් දැන්
තාත්තා එනවා
තාත්තා එනවා



ටෙ. අක්ෂිදා ඩෙනිෂා
5^C ශ්‍රේණිය

ம நீ இருக்கும் போது அது வரப்போவதில்லை ....
ர அது வரும் போது நீ இருக்கப்போவதில்லை ...
அதனால் நீ எதை செய்ய வேண்டுமோ அதை
ண இப்போதே செய்துவிடு ....
ம்



T.Sharika
Grade - 6^L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# THE OLYMPIC GAMES

The Olympic games are a multi-sport competition held every four years. The Olympic games started in ancient Greece in 776 Bc. They were held in Athens. In the ancient Olympic games there were only a few sporting events and only men could take part in them.

The first modern Olympic games were held in Athens in 1896. There are a lot of sporting events in the modern Olympic games and both men and women can take part in them.

In the ancient Olympic games, the winners received a wreath made of wild olive leaves. In the Olympic games of today the winners receive medals.



**Nadesalingam Kuganija** Gr - 6[S]

# கல்வி

வெறும் சொற் குவியல்களை
எழுப்புவதல்ல, மக்களின்
ஆற்றலை வளரச் செய்து
அவர்களை நல்ல முறையில்
திடமாகவும் நேர்மையாகவும்
சிந்திக்கப் பயிற்றுவதே கல்வியாகும்.





**கி.நிஸ்மிக்கா** – தரம் 5[C]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கான விருதுகள்



கடந்த வருடம் 2016ல் மேன்மைதங்கிய **ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன** மட்டக்களப்பு வெபர் மைதானத்தைத் திறந்து வைப்பதற்காக வருகை தந்தபோது மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரியின் சித்திர ஆசிரியர் **திரு. அழகர்சாமி ஜெயதீபன்** அவர்கள் ஜனாதிபதியினுடைய உருவப்படத்தை ஓவியமாக வரைந்து கையளித்தபோது...



**திருமதி. டிறோஜினி மகேஸ்வரன், அனோஜா பேரின்பராஜா**
கடந்த வருடம் 2016ல் **பிரதீபா** விருதினைப் பெற்ற ஆசிரியர்கள்.

# 2016ல் புதிதாக நியமனம் பெற்ற அதிபர்கள்




**Rev.Sr.Regina Kavitha A.C.**




**Mr.Sivalingam Elankeeran**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Best Music Awarding



Olympiad

பண்ணிசை





## சிவானந்தியன் பரிசளிப்பு விழா - 2016






## Principal's Malaysia Visit





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## சில நிமிடம் சிந்திக்க...

- உலகிலே எதுவுமே இல்லாதவனுக்குத்தான் எதையும் தாங்கும் இதயம் உண்டு.
- தீக்குச்சி ஒருமுறை சிரிப்பதால் தீபம் வாழ்நாள் முழுவதும் சிரிக்கின்றது.
- கீழே விழுந்த நெல்மணிகளை பொறுக்கியெடுத்திடலாம். ஆனால் தவற விட்ட வார்த்தைகளை மீளப் பெற முடியாது.
- எதைச் சிந்திக்கிறார் என்பதிலிருந்துதான் புதிய கருத்துக்கள் உதயம் பெறுகின்றன.
- நம்பியது தோல்வியடையும் போது எல்லாமே நிலைமாறி விட்டதாகத் தோன்றும். ஆனால் தோல்வியிலும் முயற்சியை கைவிடக் கூடாது.
- நல்லதை எண்ணுவது அறிவு எண்ணியதை முடிப்பதே முயற்சி.



றா.ரேஷ்மிதா – தரம் 6E



## சிந்தனைத்துளிகள்

1) வரட்டுக் கௌரவம் வாழ்க்கைக்கு உதவாது, முரட்டுப் பிடிவாதம் முன்னேற உதவாது.
2) இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில் துடுப்பில்லாத படகு போன்றது.
3) விடாமுயற்சியும், குறிக்கோளும் வெற்றிப் பாதையில் முன்னேற உதவும் இரு சக்கரங்கள்
4) ஒரு நாட்டிற்கு விஞ்ஞானமே முதுகெலும்பு.
5) அபாயத்தைத் தடுத்து அறிவுடன் வாழ வேண்டும்
6) பேசும் விடயத்தைக் கவனி, பேசுபவரைக் கவனிக்காதே.
7) இதயத்தில் தூய்மை இல்லாதவன் இறைவனை அடைய முடியாது.
8) விரும்பியதைப் பெற முடியாவிட்டால் பெற்றதை விரும்பு.



வி.சுஜித்ரா – தரம் 5S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *World's longest river*







**T**he world's longest river is the Nile, which flows for 6.700 kilometres [4.160 miles] from south to north half way across the continent of Africa. Beginning in the tiny nation of Burundi the Nile flows through Nine countries. Many of them near deserts and ends in Egypt. The River brings life-giving water to the parched lands along its shores.

# *World's highest country*



**T**he tiny kingdom of Bhutan is perched so high in the mountains of the Himalayas that it is considered the highest country on the Earth. Not for always. In the same mountain range, the country of Nepal is almost as high. Nepal has slightly less land at the highest elevations and more at lower elevations.

# *World's highest mountain*




**M**ountains rise on every continent and also from the sea floor. The world's highest mountain is Mount Everest, towering 8848 meters [29028 Feet] above sea level. It is in the Himalayan range of mountains in south Asia.



**P.Rochel** Gr - 6L




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனே எழுந்துகொள் !

போதையிலே புதைந்து நித்தம்
பொய்யிலே நீந்திக் கிடந்து
தேசத்தை அழுக்காக்கும்
எதிர்கால சமுதாயத்தின்
இளைய சமூகமே!

எதிர்கால தேசத்தை உருவாக்கும்
இளைய தலைவன் நீ!

கிழக்கே உதிக்கும் அந்த
சூரியனை
தூக்கிப் போடும் சக்தி
உன் தோள்களுக்குண்டு

துடைத்து விடு
உன் சோம்பல்களையும்;
ஊதாரித்தனங்களையும்


இந்தத் தேசத்தின்
விடியல்கள் ஒவ்வொன்றும்
உன் தோள்களில்
தூக்கி வைக்கப்பட்டிருக்கின்றது

இளைஞனே வைராக்கியம் என்பது
வந்து போகும் வானவில் அல்ல
உன் சுவாசத்தின்
ஒவ்வொரு துளியிலும்
கலந்திருக்கும் உயிர்!

வா! வானத்தை வளைத்து
குனிந்து கிடக்கும் தேசத்தை
நிமிர்த்தி விடு:




ப.அபிராமி – தரம் $8^{C}$



# நாத்தை நடவுங்கடி

முத்து முத்தா வர வேணும் – கதிர்
முக்கல நெல்லு காண வேணும்
பத்தி பத்தியாக நாத்தை நடவுங்கடி – அடி
ஆணவங் கெட்ட பொண்டுகளா


பிடிக்கொரு படி காணவேணும்
பிடிச்சுப் போட்டு நடவுங்கடி
பொழுது போச்சுப் பொண்டுகளா
பொறப்பிடனும் நல்ல வேளையிலே
புளிய மரத்துக் கிளையிலேதான்
புள்ளை யழுகுது கேளுங்கடி





கோ. ஸெஷாங்கரி
தரம் - $7^{S}$

# இதய நோய்களுக்கு பகைவனாக விளங்கும்
# புகை பற்றிய அதிர்ச்சியூட்டும் விடயங்கள்







- ஒவ்வொரு சிகரட்டுக்களும் உங்கள் விலைமதிப்புள்ள வாழ்க்கையில் இருந்து ஐந்து நிமிடங்களைப் பறிக்கின்றது.
- ஒவ்வொரு புகை இழுப்பும் 4000 வெவ்வேறு தீய பொருட்களைக் கொண்டுள்ளது. இதில் புற்றுநோய்கள், இருதய நோய்களுக்கான இரசாயனம் அடங்கி இருக்கின்றது,
- சிகரட்டின் எரிமுனையின் வெப்பநிலை 900 டிகிரி செல்சியஸ் இது நீரின் கொதிநிலையை விட 9 மடங்கு அதிகம். இந்த வெப்பநிலையில் சில இரசாயன மாற்றம் ஏற்பட்டு மிகவும் விஷமான பொருள் விடுவிக்கப்படும்.
- புகையில் 95% வாயு உள்ளன. அவற்றில் காபன்மொனக்சைட்டின் செறிவு 2-8% உண்டு. 60% காபன்மொனக்சைட்டின் செறிவு உயிருக்கு ஆபத்தானது.
- எரியும் புகையில் இருந்து கிடைக்கும் நச்சுக் கலவையில் நிக்கொட்டின் அதிகம் உள்ளது. இது உடலின் பல முக்கிய உறுப்பைக் கடுமையாகப் பாதிக்கும்.
- புகைப்பதால் ஏற்படும் மாரடைப்பால் இறக்கும் வாய்ப்பு 60 -70ற்கு அதிகம். இங்கு 40 - 25 மடங்கு மாற்ற முடியாத நுரையீரல் நோய் உருவாக வாய்ப்பு அதிகம்.
- நுரையீரல் புற்றுநோய் உருவாகும் ஆபத்து 10 - 25 மடங்கு அதிகம்
- உணவுக் குழாய், வயிறு மற்றும் மூச்சுக்குழாய் ஆகியவற்றில் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகம்.
- மனைவி கருவுற்றிருக்கும் போது அவர் கணவர் அருகில் இருந்து புகை பிடித்தால் குழந்தையின் வளர்ச்சி தடைப்பட்டு எடை குறைவாகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கும், கருச்சிதைவு அபாயம், குழந்தை மரணத்திற்கு வாய்ப்பு அதிகம். மேலும் குழந்தை அறிவு வளர்ச்சி தாமதம், மன வளர்ச்சி குன்றல், குழந்தைப் பருவ ஆஸ்துமா, அந்தக் குழந்தைக்கு மற்றக் குழந்தைகளை விட அதிகமாக வரும்.

- இன்றைய காலகட்டத்தில் 20 வயதில் மாரடைப்பு வரும்.
- சிறு வயது முதலே *Passive Smoking* என்ற வகையில் புகை பிடிக்கும் அப்பா அருகில் இருந்து வளர்வது ஒரு காரணம்.
- எரி முனையில் இருந்து வரும் புகையை சுவாசிப்பதும் பக்க வீச்சும் அதிக தீமையானது. அது அப்பாவிகளான குழந்தைகளையும் குடும்ப ஆரோக்கி -யத்தையும் குறைக்கும்.
- ஒரு நாள் ஒரு பைக்கற் புகைபிடிப்போர் ஒர் ஆண்டில் 4000 சிகரட் புகைக்கின்றனர்.
- 20 - 40 வயது வரை தினமும் ஒரு பைக்கற் சிகரட் பிடிப்பவரின் சிகரட்டை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கினால் அது எவரட்ஸ் மலை உயரத்தை எட்டிப் பிடிக்கும்.



**வி.திலக்ஷினி** – தரம் $13^A$
கலைப்பிரிவு

# மற்றவர்களிடம் பேசுவது எப்படி!





**தாயிடம் அன்பாகப்பேசுங்கள்!**
**ஆசிரியரிடம் பண்பாகப்பேசுங்கள்!**
**சகோதரரிடம் அடக்கத்தோடுப் பேசுங்கள்!**
**சகோதரியிடம் அளவோடு பேசுங்கள்!**
**துணைவியிடம் உண்மையாகப் பேசுங்கள்!**
**குழந்தைகளிடம் ஆர்வமாய்ப் பேசுங்கள்!**
**உறவினரிடம் பரிவோடு பேசுங்கள்!**
**நண்பரிடம் பணிவாகப் பேசுங்கள்!**
**அதிகாரிகளிடம் பணிவாகப் பேசுங்கள்!**
**தொழிலாளரிடம் மனித நேயத்துடன் பேசுங்கள்!**
**அரசியல் வாதியிடம் ஜாக்கிரதையாகப் பேசுங்கள்!**

**கடவுளிடம் மரியாதையாகப் பேசுங்கள்!**
**பேசுங்கள்! பேசுங்கள்! ஆனால்**
**புரிந்து பேசுங்கள்! புரியும் படி பேசுங்கள்!**



**ஜே.கிறிஸ்மின் றோஜினி** – தரம் $5^C$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Newspapers are very important in modern life. Editors and correspondents gather news from all parts of the world. They collect news through telegraph, telephone, radio and internet. Then they publish news as a newspaper and Sunday papers.

Newspapers have many advantages. They tell us daily happenings in our country and in other countries. So people can learn about floods, earth quakes, cyclones, accidents, abductions, murders, thefts, riots, deaths etc.

Newspapers reflect public opinion. They spout urgent problems. We can see many, articles, discussions and letters of current problems. Editorial is written to show the correct way and truth.

Newspapers can cultivate good habits among the readers. There are many articles about Buddhist teachings in Poya day newspapers. Such articles may help to reduce the crime rate of Sri Lanka. Newspapers can protect the nation from drug menace, drinking, smoking and other bad habits. So news so newspapers can lead the people the right bad habits. So papers can lead the people on the right path.



***Kailyn Kanicca Johnpillai***
*Grade - 6C*

## What is the largest lake in the world?

The world's largest lake is an inland salt lake known as the Caspian sea, bordered byAzerbaijan, Iran Kazakhstan, Russia and Turkmenistan. More than 11 million years ago, the Caspian sea was connected to the black






sea. Which is linked to the Mediterran ean sea was cut off by land. Since then, it has existed as an inland sea.

## How are tunnels dug beneath the sea?

An undersea tunnel is a passage dug below the sea from one place on land to another place on land. The tunnel is made with machines that cut through rock below the seabed. To prevent flooding, the tunnel's walls are made stronger with concrete and steel. There is an undersea tunnel below the English channel. It allows people to travel between Britain, and France.

## Are gold and diamonds mined in every country?

Gold is found in many countries of the world. But there are only a few places where it is found in large guantities, many diamonds are found in Africa, gold and diamonds are both mined by digging into the ground.



***P.Rochel** - Grade - 6C*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் முன்னேற ஆறு வழிகள்



O1. தினமும் ஒருமணி நேரமாவது தொலைக் –காட்சி, செல்போனை நிறுத்தி விட்டுக் குடும்பத்துடன் நேரத்தைச் செலவிடுங்கள். உறவுகள் வலுப்பட இது உதவும்.

O2. தினமும் காலையில் 6 நிமிடமாவது வீட்டுத்தோட்டத்தில் உலாவுங்கள். இயற்கை –யோடு கலப்பது பதற்றத்தைக் குறைக்கும். காலை வெளிச்சம் உடலுக்கு நல்லது.

O3. தினமும் ஒருவரையாவது பாராட்டுங்கள். மற்றவர்களை நாம் பாராட்டினால் தான் நம்மையும் மற்றவர்கள் பாராட்டுவர்.

O4. நண்பர்களை மாதத்திற்கு ஒருமுறையாவது சந்தியுங்கள். உங்கள் இளமைக் காலத்தை அது ஞாபகமூட்டும்.

O5. முடிந்தவரை உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள ஆலயம், சந்தை ஆகியவற்றிற்கு நடந்து செல்லுங்கள். அது உங்கள் மனதிற்கும், உடலிற்கும் நல்லது.

O6. நீங்கள் எத்தனை மணிக்கு எழ வேண்டுமோ, அதற்கு ஆறு நிமிடம் முன்னதாக எழும்புங்கள் அந்த ஆறு நிமிடத்தில் ஆழ்ந்த மூச்சு விட்டு ஆறுதல் அடையுங்கள்.



ஹரணியா – தரம் 8T

# பொது அறிவு



1. உலகிலே ஒரே குடும்பத்தை சேர்ந்தவர் அரசியலில் ஈடுபட்ட நாடு? - **இலங்கை**
2. நாக்கில் வியர்க்கும் உயிரினம்? - **நாய்**
3. 1000 சுவை நரம்புகள் கொண்ட உயிரினம்? – **பூனை, மீன்**
4. அப்துல்கலாம் எங்கு பிறந்தார்? – **இந்தியாவிலுள்ள இராமேஸ்வரத்தில்**
5. பருந்து எத்தனை ஆண்டு காலம் வரை வாழும்? - **100 ஆண்டுகள்**
6. மானிடர் முதலில் எதில் இருந்து தோன்றினர்? - **சிம்பன்சி**
7. உலகில் பெரிய இயேசுநாதர் சிலை எங்குள்ளது? - **பிரேசில் நாட்டில் ரியோநகரில்**



ஷம்பரித்தா – தரம் 6T




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியறிவு

உலக மக்கள் மேன்மக்களாக வாழ்வதற்கு அறிவே பிரதானமானதாகும். இருளைக் கடந்து செல்வதற்கு ஒளியானது எவ்வாறு அவசியமோ அவ்வாறே, அறியாமையைக் கடக்க கல்வியறிவு கண்மணி போன்றது. **“கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச் சொற்றெறிதல் வல்லர் அசத்து”** என்ற வள்ளுவர் பெருமான் கல்வியின் சிறப்பினை எடுத்துரைத்துள்ளார்.

கல்வியின் முக்கியத்துவம் இன்று நேற்றல்ல எத்தனையோ வருடங்களுக்கு முன் உணரப்பட்டுள்ளபோதும்’ அக்கல்வியை நாம் பெற்றுள்ளோமா? அதனை செயற்படுத்தி உள்ளோமா? எனக் கேட்டால் மிகப்பெரிய வினாக்குறி எம் மனக் கண் முன் தோன்றி மறைகின்றது. இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி -யான நிலைக்கு கல்வி ஒரு காரணமெனப் பரவலாகக் கூறப்படுகின்றது. முறையற்ற கல்வி இவ்வாறான பிற்போக்கு விளைவுகளை ஏற்படுத்தி இருக்க, அதனை விரட்டும் புதியகல்விச் சீர்திருத்தங்களை இன்று கல்வியாளர்கள் முன்வைத்துள்ளனர். அதில் அனைவருக்கும் கல்வி எனும் தொனிப்பொருள் முதன்மைப்படுத்தப்படுகின்றது. மக்களை கல்வி மயப்படுத்தாமல் நாட்டை முன்னேற்ற முடியாது என்பது அனைவராலும் நன்கறியப்பட்ட உண்மையாகும். ஒவ்வொரு பிள்ளையும் 14 - 21 வயதுவரை கட்டாயக் கல்வியைப் பெறவேண்டும் ஒருவன் தான் விரும்பியளவு கற்கலாம். அதற்குத் தடையில்லை. எனவே, கல்வி என்கின்ற கண்ணாடி முறையாகக் கையாளப்படும் போதுதான் அதன் ஆளுமைமிக்க விழுமியம் கொண்ட சமுதாயம் எனும் நேரான பாதை தோன்றும். அன்றில், பயனற்ற சமுதாயமே உருவாகும் என்பது திண்ணம்.



**கல்வி கற்போம்!**

**வாழ்வில் மேன்மையடைவோம்.**



**த.ஹர்ஷாயினி** - தரம் 6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A Healthy Mind in a Healthy Body

Every human being in the world needs a healthy body and mind. Eating good food having a balanced diet, exercising, taking regular rest and having a relaxed mind, makes a healthy body and mind.

A balanced diet includes the required amount of nutrients, vitamins, fat proteins and Carbohydrates. Balancing these without exceeding one variety like junk food and fast food. Exercising is needed to burn the excess calories. Walking and jogging makes our organs function well.

Mental health is also important to live a good life. Meditation and rest are needed to save us from mental stress. The mind controls our feelings. So in order to live a happy life a healthy mind is vital. Patience is the key to good mental health.



A healthy mind and a healthy body will help you to have healthy life.

**P.Esther Amrith** Gr - 6L

# பள்ளிப்பருவ நிலை பழைய கதை ஆவதில்லை

சிந்தனைச் சிட்டுகளாய்
சிசிலியாவின் மொட்டுகளாய்
எண்ணங்களை வண்ணக்கனவுகளாய் ஏந்தி
செல்லக் கனவுகளில் சிங்காரப் புன்னகையில்
நம் உறவுப்பாலம் தொடங்கியது
தென்றலென அன்பை வீசி
ஈன்றெடுக்கா அன்னையாய் – என்
கரம் பிடித்து "அ" எழுத்து
அரிச்சுவடியை ஆரம்பித்தாளே – அன்று
வருடங்கள் உருண்டோடியதே – இன்று
வசந்தலோகத்தை பிரிய மனமில்லாமல்
வாயடைத்து நின்றதும் – வழிகிறதே
கண்களில் வேதனைத் துளிகள்
காலச்சக்கரத்தை கற்பனையால்
நிறுத்த முடியவில்லை – ஆனாலும்
பள்ளிப்பருவ நிலை பழையகதை ஆவதில்லை
சாகாத பள்ளி நினைவலைகளை
நோகாமல் என் நெஞ்சு
நூல் சுமக்கிறது




**மகாலிங்கம் சசிநிதா**
கலைப்பிரிவு 13B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Midnight Sun



Countries near the North Pole have long days of light in summer and long days of darkness in winter. On the summer solstice, the sun shines for 24 hours. Its pole light at midnight is called the midnight sun. On the winter solstice, the sun never rises, so it is dark all day.

# How are Maps Made?



An ordinary map might show a large area of your country as seen from above. At a glance, it will show you how far apart places are and what direction to take to get from one town to another. In the past, people on the ground made detailed measurements of the places they were going to map but now aeroplanes and other special surveying tools are used.



# Rainy Season

In summer in some Asian countries, it rains almost constantly. This is called the rainy season. It is caused by the summer heat, which makes moist air rise from the ocean. This moisture is blown over the land and
rain.



Grace Sophia Gr - 6L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். சூழல் மாசடைவதால் தனிப்பட்ட ஒருவரன்றி முழுச் சமுதாயமுமே பாதிப்புக்குள்ளாகின்றது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ஆகும். மக்களின் நோயற்ற நல்வாழ்வுக்குச் சுற்றுப் புறச் சூழலை மாசடையாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம். ஆயினும் தற்காலத்தில் மக்கள் பல்வேறு நோய்களில் அகப்பட்டு அவதியுறுகின்றனர்.

நிலம், நீர், வளி என்பன பல வழிகளில் அசுத்தமடைகின்றது. தொழிற்சாலைக் கழிவுகள், இரசாயன உரப் பசளைகள், பூச்சிகொல்லிகள், கிருமி நாசினிகள் மற்றும் அழுகிய நிலையிலுள்ள சேதனப் பொருட்கள் போன்றவை நிலத்தை மாசுபடச் செய்கின்றன. உக்காத தன்மையுள்ள பிளாஸ்டிக் பொருட்களும், பொலித்தீன் உறைகளும் நிலத்தினுள் புதைந்து அதனைப் பாதிக்கின்றன.

நாம் பருகவும், குளிக்கவும், உணவு சமைக்கவும், விவசாயம் செய்யவும் நீர் இன்றியமையாதது. நீரைச் சுரக்கின்ற நீர்நிலைகள் இன்று அசுத்தப் படுகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் ஆறுகள், குளங்கள் மற்றும் வாவிகளில் கலப்பதனால் நீர் மாசுறுகின்றது. அது நீர் வாழ் உயிரினங்கள் அழியவும் அந்நீரைப் பருகும் மனிதர்களும் விலங்கினங்களும், நோய்வாய்ப்படவும் ஏதுவாகின்றது.

தூய்மையான காற்று இன்றி உயிர் வாழ முடியாது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத காற்று தற்காலத்தில் மாசுபட்டு வருவதைக் காண்கின்றோம். தொழிற்சாலைகள் பல நச்சு வாயுக்களை வளிக்குள் செலுத்துகின்றன. மோட்டார் வாகனங்கள் கக்கும் புகையும், வளியை மாசுப்படுத்துகின்றது. அனல்மின் நிலையங்களும், அனுமின் உலைகளும் தொழிற்சாலைகளும் வெளியேற்றும் புகை, தூது, சாம்பல், கதிர்வீச்சு முதலியன காற்றில் கலந்து அதனை அசுத்தப்படுத்துகின்றன. மாசுபட்ட காற்றைச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசிப்பதனால் மக்களின் உடல்நலம் குன்றுகிறது. நச்சுக்காற்றால் தாவரங்களும் விலங்குகளும் மற்றும் உயிரினங்களும் அழிகின்றன.

சூழலைப் பாதுகாப்பது நம் கைகளிலே உள்ளது. மனிதர்களின் பொறுப்பற்ற பல நடவடிக்கைகளால் சூழல் பழுதுபடுகின்றது என்பதை நாம் உணர வேண்டும். சூழல் மாசடைவதற்கெதிராக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். சூழலைக் காப்போம். நலனைப் பெறுவோம்.




ர. டேனிஷாலி ஆன்
தரம் - 07^S



# கருணையின் அன்னை

ஒருநாள் அன்னை தெரேசா இந்தியாவில் கல்கத்தா நகரில் ஒரு வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தார். வயது சென்ற ஒரு பாட்டி வீதி ஓரத்தில் விழுந்து கிடப்பதைக் கண்டார். அந்த வீதி வழியாக அநேகர் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவராவது இந்த வயோதிபப் பெண்மணியைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அன்னை தெரேசா அவர்களுக்கு இந்நிகழ்வு விசித்திரமாகவும் மனதிற்கு வேதனையாகவும் இருந்தது.

அன்னை அவர்கள் அந்தப் பாட்டியின் அருகே சென்றார். அவளைத் தூக்கி எடுத்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். கல்கத்தாவில் இவளைப் போன்ற அநேகர் இருப்பதை அன்னை அறிந்து கொண்டார். இவர்களை யார் கவனிப்பார்கள் என்ற கேள்வி அவர் உள்ளத்தில் எழுந்தது. எனவே, அன்று தொடக்கம் ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்குச் சேவை செய்யத் தொடங்கினார். இந்தச் சேவைக்கு அவரோடு பெண்கள் சிலரும் சேர்ந்து கொண்டார்கள். அன்னை அவர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் ஏழைகள், அநாதைகளுக்காக அர்ப்பணித்துச் சேவை செய்து இறை தந்தைக்கு அன்பு செய்தார். நாமும் அன்னை தெரேசா அவர்களைப் போல் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும் உதவி செய்வோம்.



றொமேனா வின்சன் - தரம் 7^T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் இந்துமத வரலாறு

உலகில் மிகத் தொன்மையானதும், சமயங்களுக்கெல்லாம் தாய்ச்சமயம் எனப் போற்றப்படுவதும் "சனாதன தருமம்" எனச் சிறப்பிக்கப்படுவதுமான இந்து மதமானது இலங்கையிலும் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலம் முதலே நிலைபெற்று வளர்ச்சியடைந்தது எனலாம்.

இவ்வரலாற்று நிகழ்வுகளை இன்று புராண இதிகாசங்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள் வரலாற்று இலக்கியங்கள், புதைபொருட் சின்னங்கள், கட்டிட அழிபாடுகள், பிறநாட்டார் குறிப்புக்கள் போன்றவற்றின் ஊடாக அறியலாம். மேலும் இலக்கியச் சான்றுகளூடாகவும் இந்து சமய வரலாற்றை அறியலாம். தமிழ் மொழி இலக்கியங்களில் தமிழகத்தில் திருமந்திரம் பக்திப் பாடல்களின் ஊடாகவும், இலங்கையில் யாழ்ப்பாண வைபவமாலை, தட்சணகைலாய மான்மியம், பாளி மொழியில் மகாவம்சம், சூளவம்சம் மூலமும், சிங்களமொழியில் கந்த உபத மூலமும், சமஸ்கிருத மொழியில் இதிகாசங்-கள், புரணாங்கள் மூலமும் இந்து மதத்தின் வரலாற்றினை அறியலாம். பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையில் இந்து சமயம்சார் புதைபொருட் சின்னங்கள் காணப் படுதல் சிறப்பம்சமாகும். மேற்கூறப்பட்ட ஆதாரங்களின் ஊடாக இலங்கையின் இந்து மதப் பாரம்பரியங்கள் எவ்வாறு வளர்ச்சி அடைந்தன என்பதை நோக்குவோம்.

திருமூலர் இலங்கையச் "சிவபூமி" எனக் கூறியதிலிருந்து வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே இங்கு இந்துமதம் நிலை பெற்றிருந்தது எனலாம். இலங்கையின் பூர்வீக மதமாகவும் சிறப்புப் பெற்று விளங்கிய மதம் இந்து மதம் என்பதற்கு இலங்கையின் வரலாற்று நூலாகிய "மகாவம்சம்" தாட வம்சம், வைபவமாலை" என்பன ஆதாரங்க-ளாக விளங்குகின்றன. மகாவம்சத்தில் பூர்வீகக் குடிகள் இயக்கர், நாகர், வேடர் போன்ற என்றும் இவர்கள் இலிங்க வழிபாடு, நாகவழிபாடு, இயற்கை வழிபாட்டினையும் மேற்கொண்டனர். நாக வழிபாட்டுத் தொடர்ச்-சியினை நாம் திருக் கேதீச்சரம், நயினை நாகபூசணி அம்மன், நாகதம்பிரான் ஆலயங்-கள் வாயிலாக அறியலாம். இவ் இந்துமதம் சார்ந்த மூவகை வழிபாட்டினையும் பூர்வீகக் குடிகள் மேற்கொண்டு இருந்தனர் எனக் கூறியிருப்பதன் மூலமும் இலங்கையின் பூர்வீக மதம் இந்து மதம் எனக் கூறலாம்.

இலங்கையில் வாழ்ந்ததாகக் கருதப் படும் மாதுவட்டா, விசுவகர்மா, மயன், இராவணன், மண்டோதரி போன்றோர் சிவ வழிபாட்டினராக இருந்ததாக இராமாயணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் கூறப்பட்டுள்ளது. மயனின் மகளும், இராவணனின் மனைவி மண்டோதரியும் வழிபட்ட தலமாக திருக்கேதீச்சரம் விளங்குகின்றது. இலங்கை வேந்தனான இராவணன் சிறந்த ஓர் சிவபக்தன் என்பதும் இலிங்க பூஜை ஆற்றுபவன் என்பதும், இலிங்கத்தை அணிபவன் என்பதும் சைவக்கிரியைகளை ஆற்றுபவன்



என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை போல சம்பந்தர் "இராவணன் மேலது நீறு" எனப் பாடியுள்ளார்.

இராவணனும் அவனது தாயும் திருக் கோணேச்சரத்தை வழிபட்டனர். இராவணனின் தாய் கைகேயி சிவலிங்க வழிபாடு செய்வதற்காக கைலைமலையைப் பெயர்ப்பதும் அதனை சிவன் தடுப்பதும், அப்போதும் சாமகானம் பாடியதாகவும் அதன் பயனாக முக்கோடி வாழ்வும் வீரவாளும் பெற்றான் என்பதில் இருந்தும் தாயின் அபரக் கிரியைகள் செய்வதற்காக அமைக்கப்பட்டதே திருகோணமலையில் உள்ள "கிண்ணியா தீர்த்தம்" என தட்சண கைலாய புராணம் கூறுவதிலிருந்தும் இராமாயண காலத்தில் இருந்தே சிவவழிபாட்டின் தொன்மையினை அறியலாம்.

மேலும் இராமனின் மனைவியாகிய சீதையை இராவணன் இலங்கையில் சிறை வைத்தமையும், அதனை மீட்க வந்த இராமன் இராவணனுடன் போர் புரிந்து அவனைக் கொன்றமையும் இதனால் இராமனுக்கு "பிரம்மஹத்திதோஷத்தை" நீக்க அவர் திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய தலங்களிலே இலிங்கதானம் செய்து மீட்ட - மையும் இராமாயணத்தில் காணலாம்.

இன்றுவரை இராவணன் வாழ்ந்த காலம் வரையறுக்கப்பட்டவில்லை. எனவே வரையறை கூறமுடியாத பழமையான காலத்திலேயே இலங்கையில் இந்துமதம் சிறப்புடன் பேணப்பட்டதாக அறிய முடிகின்றது.

இந்தியாவின் தென்னாட்டு யாத்திரையை மேற்கொண்ட அருச்சுனன் இலங்கைக்கு வருகை தந்து திருத்தலங்களைத் தரிசித்த தாகவும், செல்லும் போது இங்கிருந்த ஒரு நாககன்னியைத் திருமணம் செய்து சென்றதா -கவும் மகாபாரதம் சான்று பகர்கின்றது. எனவே "ஈழத்திலே வரையறை கூற முடியாத காலத்து தொன்மை சிறப்புடையதாக இந்து மதம் விளங்குகின்றது" எனலாம்.

மகாபாரதத்தில் இலங்கையில் வந்து இறங்கிய விஜயனுடன் "உபதிஸ்ஸ" எனும் பிராமணனும் வந்ததாகவும் அவன் ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களாகிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேச்சரம், முன்னேஸ்வரம், நகுலேச்சரம், **சந்திரசேக ரீச்சரம்** ஆகிய ஈச்சரங்களை வழிபட்டதாகவும் யாழ்ப்பாண வைபவமாலை கூறியுள்ளது. மேலும், பழைய கல்வெட்டுக்களில் மன்னர்களின் பெயர்களுக்கு முன்னோ பின்னோ "சிவ" எனும் அடைமொழி காணப்பட்டுள்ளது.

***உதாரணம் :-*** மகாவம்சத்தில் மூத்தசிவ, சிவ நேசர் கிரிகண்ட சிவன் என்பன உள்ளமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இலங்கைக்கு விஜயன் வர முன்னரும் பின்னரும் இங்கு சைவம் செழிப் புற்றிருந்ததென வணக்கத்திற்குரிய வல்பொல இராகுலதேரர் எழுதிய "இலங்கையில் பௌத்த வரலாறு" எனும் நூலில் கூறியுள்ளார். மேலும் திரு.ஜே.டபிள்யூ ரெனற் எழுதிய "இலங்கைச் சரித்திரம்" எனும் நூலில் இலங்கையில் ஆதியில் குடியேறியவர்கள் சைவர்களே எனக் கூறியுள்ளார். இதற்குச் சான்றாக உறுகுணைத் தேசிய பூங்காவில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில் "சிவ நகர்" எனும் இடம் பெயர் குறிக்கப்பட்டிருப் பதைக் காணலாம்.

தேவநம்பியதீசனுக்கு முன்பு இலங் -கையை ஆண்டவர்கள் சைவர்களாக விளங்கியதோடு அவர்கள் பிராமணர்களை -யும் ஆதரித்ததாக மகாவம்சம், தீப வம்சம், பிராமியக் கல்வெட்டுக்கள் சான்று பகர் கின்றன. மேலும் அனுராதபுர இராசதானியை அமைத்த பண்டுகாபயன் "சிவிகசாலை", "சொத்திசாலை" எனும் நிலையங்களை அமைத்ததாக மகாவம்சம் கூறியுள்ளது. அவர்கள் சிங்கள மன்னர்களாக இருந்த போதிலும் சைவர்களாக விளங்கியதோடு பிராமணர்களையும் ஆதரித்தனர். பிராம - ணர்கள் அரசர்களின் புரோகிதர்களாக விளங்கியதுடன் ஆலோசகர்களாகவும் செல் -வாக்குப் பெற்றனர்.

கி.மு 2ம் நூற்றாண்டளவில் தேவநம் -பியதீசன் இலங்கையை ஆட்சி செய்யும் காலத்திலேயே பௌத்த மதம் தென்னிந்தி -யாவை ஆண்ட அசோக மன்னனால் மத்திய பிரதேசப் பரப்பை கைப்பற்றிய பௌத்த மன்னர்களை விரட்டியடித்து பௌத்த மையஸ்தானங்களாக விளங்கிய அனுராத புரத்தைத் தலைநகரமாகக்கொண்டு ஆட்சி - யினை மேற்கொண்டமை. இதற்கு மேலும் பிராமணர்களை அமர்த்தி இந்து மதக் கிரியைகளை செய்வதற்கும் வழிசெய்தனர். இந்து மதம் இலங்கையில் காணப்பட்டது. கி.பி 1216 - 1221 வரை இவர்களது ஆட்சி யாழ்பாணத்தை அடிப்படையாக வைத்து அமைந்தது. அங்கு யாழ்ப்பாண தமிழ், சிங்கை நகர், நல்லூர் என மூவகை இராஜ தானிகளை அமைத்து அவ்வாட்சி அமைந்தது. அவர்கள் முருகன், அம்மன், விநாயகர் ஆகிய தெய்வங்களுக்கு ஆலயங்களை கட்டி ஆலய மதம் பேணப்பட்டது .

அந்நியரது ஆட்சிக் காலத்திலே இந்து மதமானது வீழ்ச்சி கண்டது. போர்த்துக் கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோர் எடுத்த பல்வேறு நடவடிக்கையின் காரணமாக இந்துமதத்தில் வீழ்ச்சி நிலை ஏற்பட்டது. போர்த்துக்கேயர் 1505 - 1658 வரை ஆட்சி செய்தனர். கிறிஸ்தவமதம் இவர்களால் வளர்க்கப்பட்டதோடு இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டு இந்து மதத்திற்கு வீழ்ச்சியை -யும் ஏற்படுத்தினர். இவர்களைத் தொடர்ந்து 1658 -1796 வரை ஆட்சி செய்தவர்கள் ஒல்லாந்தர்கள் ஆவர். இந்து மதமும் வளர்ச்சியடையும் நிலையைப் பெற்றது. நல்லூர் கந்தசாமி ஆலயம், வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரர் கோயில் போன்றன புனர் நிர்மாணம் செய்யப்பட்டு ஆலய வழிபாடு செய்வதற்கு ஊக்கம் கொடுக்கப்பட்டது. மேலும் சின்னத்தம்பிப் புலவர், சேனாதிராய முதலியார் முத்துக் குமார கவிராயர் முதலியோரது சைவம் சார்ந்த பிரபந்தங்கள் தென்னிந்திய இலக்கி யங்கள், சிதைந்த கட்டிடங்கள், கல்வெட்டுக் -கள் புதை பொருட்கள் வாயிலாகக் கிடைத்த விக்கிரக சிற்ப வடிவங்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொள்ளலாம்'. அவ்வாறே இலங்கையின் இந்துமத வரலாற்றிலே "தமிழகத்தின் பொற்காலம்" எனச் சிறப்பிக் கப்படும். சோழ மன்னர்களினது ஆட்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமும் வருகையும் சிறப்பிடம் பெறுகின்றது. சோழ மன்னர்களுள் சிறப்பானவன் முதலாம் இராஜராஜசோழனின் மகனான வீர இரா ஜேந்திரனாவான். இவன் இந்தியாவை மாத்திரமின்றி இலங்கையினையும் தனது ஆட்சிக்கு உட்படுத்தி "மும்முடிச் சோழ மண்டலம்" எனும் நாமத்தோடு ஆட்சி செய்தான். இவனது ஆட்சி உறுதியானதாகக் காணப் பட்டதோடு சைவமும் மேலோங்கிக் காணப் பட்டுள்ளது. அவனால் பொலநறுவை தலை நகரமாக்கப்பட்டு "ஜனநாதமங்கலம்" எனும் நாமத்தோடு ஆட்சி செய்யப்பட்டது' இவனது ஆட்சியில் இங்கு 16 ஆலயங்கள் அமைந் துள்ளது அவன் கட்டிய ஆலயங்களில் சிறப்புக்குரியது அவன் தாயாரின் பெயரில் கட்டியது வானவன் மாதேவி ஈச்சரமாகும்.

சோழர் ஆட்சியின் பின்பு மீண்டும் பௌத்த மன்னர்களது ஆட்சி இடம் பெற்றது. மீண்டும் பொலநறுவையைத் தலைநகரமாக மாற்றியவன் 1ம் விஜயபாகு ஆகும். இவனைத் தொடர்ந்து 1ம் பாராக்கிரமபாகு, நிசங்க மல்லன் ஆகியோர் ஆட்சி செய்தனர். அவர்கள் தாங்கள் அமைத்த விகாரைகளிலேயே இந்து மதத் தெய்வங்களாகிய விஷ்ணு, கணபதி, சக்தி ஆகிய தெய்வங்களை வழிபட்டனர்.

இலங்கையில் பரப்பப்பட்டது என மகாவம்சம் கூறியுள்ளது அசோகமன்னன் தனது மகன் மகிந்தனிடம் பரிசுப் பொருட் - களைக் கொடுத்து தீசனிடம் அனுப்பியதாகவும் அவனை கௌரவித்த தீசன் மக்கள் முன்னி -லையில் அவனைப் பிரசங்கம் ஆற்றும்படி பணிந்ததாகவும், மகிந்தன் அறம், ஆசாரம், ஒழுக்கம் என்பவற்றைக் கொண்ட சொற் பொழிவினை ஆற்றினான் எனவும் இது மக்க -ளுக்குப் பெரும் விருப்பத்தைத் தந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே மன்னனும் மக்களும் பௌத்தத்தைத் தழுவியதாக அறிய முடிகின்றது "கஜபாகு" மன்னன் இந்தியாவிலிருந்து பத்தினித் தெய்வ வழி பாட்டினை இலங்கையில் பரவச் செய்வதற் -குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

கி.பி இலங்கையில் 7ம்,8ம் நூற்றாண்டு காலப்பகுதியிலே இந்துமதம் சிறந்த வளர்ச்சி யினைப் பெற்றது இதற்கு நாயன்மார், சுந்தரர் ஆகிய இரு நாயன்மார்களும் இலங்கையில் எழுந்தருளியுள்ள திருக்கேதீஸ் -சரம், திருக்கோணேஸ்வரப் பெருமான் மீது பதிகங்களைப் பாடியுள்ளனர். அவர்கள் தென்னிந்தியாவிலுள்ள இராமேஸ்வரம் எனும் தலத்தில் நின்று மானசீகமாகப் புகழ் பாடியுள்ளார். இவை பாடல் பெற்ற தலங்க -ளாக விளங்கியமை இந்துமத வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும். எனவே கி.மு 2 - கி.பி 6ம் நூற்றாண்டு வரையில் பௌத்தத்தின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டது. ஆனால் இந்துமதம் முழுமையாக அழிய வில்லை. இவ்வாறு நலிவுற்றுக் காணப்பட்ட இந்து மதமானது 6ம் நூற்றாண்டின் பின் இலங்கைக்கு வருகைதந்த பல்லவ மன்னர் களால் மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ச்சி அடைந்தது.

கி.பி 1796 - 1948 வரை ஆங்கி லேயர் ஆட்சியினை நடத்தினர். இவர்கள் கிறிஸ்தவ மதத்தினை வளர்ப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்தனர். ஆங்கிலக் கல்வியினை ஊக்குவித்தல். தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தல் அச்சு இயந்திரத் தினை அறிமுகம் செய்து துண்டுப்பிரசுரங் களை அச்சிட்டு வெளியிடல் போன்ற நடவ டிக்கைகளினால் மத வளர்ச்சியினை ஏற்ப டுத்தி இந்து மத்தினை வீழ்ச்சியடையச் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயரைத் தொடர்ந்து நாவலர் இந்துமதத்திற்கு வளர்ச்சி நிலையினை ஏற்படுத்துவதற்கு அவர்கள் கையாண்ட நடவடிக்கைப் பாணியிலே இவரும் நடவடிக்கை எடுத்து இந்து மத வளர்ச்சி நிலையடையச் செய்தார்.

தற்காலத்தில் இந்துமதம் வளர்ச்சி நிலையடைந்து வருகின்றது. சமய நிறுவனங்கள், ஆலய வழிபாடுகள், அறநெறிப் பாடசாலைகள், சமயப் பெரியார்கள் பணிகள் மூலமும் இந்நிலை வளர்ச்சி அடைந்து வருகிறது எனலாம்.



**திருமதி வி.புலேந்திரன்** (BA)
இந்து நாகரிக ஆசிரியை

# எமது ஆசான்கள்

**ஆரம்பப் பள்ளிக்கு,
துள்ளி நான் அடி வைக்க
அன்பாய் அரவணைத்த
அன்னையர் நீங்களே!**

**பார் போற்ற நாம் படிக்க
பிஞ்சுக் கரம் பிடித்து,
பிழைகள் பல பொறுத்த
பொன்னான பொக்கிஷங்கள் நீங்களே!**

**உலகு போற்றும் ஒழுக்கங்களை,
ஓங்கச் செய்யும் ஒப்பற்ற
ஒளி விளக்குகளும் நீங்களே!**

**கண்ணை இமை காப்பது போல்,
எம்மைப் பாதுகாத்து வழி
நடத்துபவரும் நீங்களே!**

**கல்வி என்னும் இமயம் ஏற,
அத்திவாரங்கள் அமைத்த
அன்பான ஆசான்களும் நீங்களே!**

**உங்களை வாழ்த்துகின்றோம்,
வணங்குகின்றோம்,
வாயாரப் போற்றுகின்றோம்.
நன்றி, நன்றி, நன்றி.**



**உ. ரெகேஷ்னா**- தரம் - 5[C]

# வரலாற்றுப் பதிவுகள்

- 1825 பொலிவியா நாடு சுதந்திரம் பெற்றது.
- 1881 பென்சிலின் மருந்தைக் கண்டு பிடித்த ஸ்கொட்லாந்து நாட்டு விஞ்ஞானி அலெக்ஸாண்டர் ஃபிளமிங் ஆவார்.
- 1945 ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது. இதில் சுமார் இரண்டு இலட்சம் பேர் இறந்தனர்.
- 1948 இல் பிரபல எழுத்தாளர் புதுமைப் பித்தன் காலமானார்.
- உலகில் இருக்கும் மொத்த மொழிகள் 809. இவற்றில் 700 மொழிகளில் மட்டுந்தான் எழுதப் பேச முடியும்
- 1845 இறப்பர் பேண்ட் கண்டுபிடிக்கப் பட்டது.
- 1861 இத்தாலியின் சுதந்திர தினம்
- 100km பறக்கும் ஜெட்விமானம் சூரியனையடைய 17 ஆண்டுகள் எடுக்கும்.
- எடிசன் கண்டுபிடிப்புக் கள் மொத்தம் - 1368



**க.தஸ்வினி** - தரம் - 6[E]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஜாபின் முக்கியத்துவமும் அதன் சிறப்புக்களும்



இஸ்லாம் மனிதன் இவ்வுலகில் கண்ணியம் மிகுந்தவனாகவும் மனிதப் பண்பாடுகளில் உயர்ந்தவனாகவும் சீர்மை கொண்ட இறை பிரதிநிதியாகவும் வாழ வேண்டும் என எதிர்பார்க்கின்றது. இதன் காரணமாகத் தான் ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஆடை அணிகலன்களை அவர்களுக்கே உரிய உடல், உணர்வுகளை கருத்திற் கொண்டு வரையறை செய்துள்ளது இந்த வகையில் பெண்களுக்கான சிறந்த, கண்ணியமான ஆடையாக இஸ்ஸாம் ஹிஜாயை அறிமுகப்படுத்தி, அதை கடமையாக்கியுள்ளது.

அல்லாஹ் ஹிஜாபை கடமையாக்கியதற்கு ஆதாரமாக அமைகின்றது.

இஸ்லாம் பெண்களை மேற்குலம் பார்ப்பது போன்று வெறுமனே ஒரு யோகப் பொருளாகப் பார்க்கவில்லை. மாறாக பெண்களைப் பற்றிய இஸ்லாத்தினது கண்ணோட்டம் சீர்மையானது. பெண் என்பவள் சமூகத்தின் சரிபாதி. அவள் தனது கடமைகளை சரியான முறையில் ஒழுங்காக நிறைவேற்றும் போது தான் மனித சமூகம் சுபீட்சமான சாந்தி நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்ற மிகத்தெளிவான கருத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இவ்வாறு பெண்ணானவள் தனது பணிகளை செவ்வனே நிறைவேற்றுதற்கு வசதியாக ஹிஜாபை இஸ்ஸாம் கடமையாக்கியுள்ளது. சுருங்கக் கூறின் ஹிஜாப் என்பது பெண்களுக்கான ஒரு பாதுகாப்புக் கேடயமாகும். இது பெண்மைக்கான இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அறிகுறியாகும். ஹிஜாபிற்கென்று அதிகமான சிறப்புக்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு சுருக்கமாக நோக்குவோம்.

பெண்ணானவள் ஹிஜாப் அணியும் போது அவள் அல்லாஹ்விற்கும் இறை தூதர் (ஸல்) அவர்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பவளாகக் கருதப்படுவாள். அல்லாஹுதஆலா அல்குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

(ஸூறதுல் அஹ்லாப் 36) அல்லாஹ்வும் அவரது தூதரும் யாதொருகாரியத்தை முடிவெடுத்து விட்டால் அவர்களுடைய காரியத்தில் சுயமாக வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும் எந்தப்பெண்ணுக்கும் உரிமையில்லை. இதனடிப்படையில் நோக்குகையில் அல்லாஹ்வின் ஏவல்களை ஏற்று நடப்பதன் மூலம் அவள் அல்லாஹ்வின் திருப்தி, நற்கூலியைப் பெற்றுக்கொள்கின்றாள். இதற்கு மாற்றாக ஒரு பெண் ஹிஜாபைப் புறக்கணித்து நடந்தால் அவள் அல்லாஹ்வின் சாபத்திற்கு ஆளாகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிஜாப் ஒரு பெண்ணின் கற்பொழுக்கத்திற்கு அடையாளமாகும் ஏனெனில் அல்லாஹுதஆலா ஹிஜாயை கற்பொழுக்கத்தின் முகவரியாக ஆக்கியுள்ளனர்.

"நபியே உம்முடைய மனைவியருக்கும், புதல்விகளுக்கும் விசுவாசிகளின் பெண்களுக்கும் அவர்கள் தங்கள் தலை முந்தானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு நீர் கூறுவீராக! அதனால் அவர்கள் சுதந்திரமானவர்கள் என அறியப்படுவதற்கு இது மிகவும் நெருக்கமானதாகும். அப்போது அவர்கள் பிறரால் நோவினை செய்யப்படமாட்டார்கள். இன்னும் அல்லாஹ் மன்னிப்பவனாக, கிருபையுள்ளவனாக இருக்கின்றான் " (ஸூறா அல் அஹ்லாப் : 59)

இவ்வசனத்தில் அல்லாஹுதஆலா ஒரு பெண் ஏனையோரின் நோவினை - களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு ஒரு கேடயமாக ஹிஜாயை வர்ணித்துள்ளான்.

ஹிஜாப் உளத்தூய்மையை ஏற்படுகின்றது. இதைப்பற்றி அல்லாஹுத்ஆலா பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

"மேலும் நபியுடைய மனைவியான அவர்களிடம் யாதொரு பொருளை நீங்கள் கேட்க நேரிட்டால் திரைக்கு அப்பாலிருந்து கொண்டே கேளுங்கள். அவ்வாறு செய்வது உங்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்" (ஸூறா அல் அஹ்லாப்: 53)

பெண்களது உள்ளத்தை மட்டுமல்லாமல் ஆண்களது உள்ளத்தையும் ஹிஜாப் தூய்மைப்படுத்துகின்றது. ஏனெனில் கண் ஒரு விடயத்தை பார்க்கையிலே உள்ளம் ஆசைக்கொள்கிறது இதனால் பற்பல பிரச்சினைகளுக்குச் சந்தர்ப்பங்கள் உண்டு எனவே கண்ணுக்கு திரையிட்டுக் கொண்டால் உள்ளம் ஆசை கொள்ளாது.

ஹிஜாப் தக்வாவை ஏற்படுத்த துணைசெய்கின்றது. அல்லாஹுதஆலா இதைப் பற்றி பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றான்.

"ஆதமுடைய மக்களே உங்களுடைய மானத்தை மறைக்கக்கூடிய ஆடையையும் அலங்காரத்தையும் திட்டமாக நாம் உங்களுக்கு இறக்கி வைத்துள்ளோம் இன்னும் பாவங்களை மறைக்கக்கூடிய பரிசுத்தமான பயபக்தி எனும் ஆடை, அதுதான் மிக மேலானது" (ஸூறா அல் அஃராப்: 96)

ஹிஜாப் பெண்களிடத்தில் வெட்க உணர்வை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் ஒரு பெண் ஹிஜாப் அணிந்த நிலையில் இறைவனை கோபத்துக்குள்ளாக்கக்கூடிய காரியங்களில் ஈடுபடமாட்டாள். ஹிஜாப் அணிவதால் உருவாகும் வெட்கம் அவளை தீய விடயங்களில் ஈடுபடுவதிலிருந்து தடுத்துவிடும். நபி(ஸல்) அவர்களிடத்தில் பனூதமீம் கோத்திரத்தைச் சேர்ந்த சிலப்பெண்கள் மெல்லிய துணியாலான ஆடைகளை அணிந்த நிலையில் வந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் "நீங்கள் உண்மையாக ஈமான் கொண்டவர்களா?" என அப்பெண்களிடம் கேட்டுவிட்டு இது முஃமின்களின் ஆடையல்ல' என்று கூறினார்கள்.

இவ்வாறாக ஹிஜாபின் சிறப்புப் பண்புகளை அடுக்கிக்கொண்டே போகலாம் இருப்பினும் இதன் சிறப்புக்கள் தெரியாமல் பல முஸ்லிம் பெண்கள் இதனை உதாசீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றனர். இன்றைய முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் என்ற பெயரில் ஆடைகளை அணிகிறார்களே ஒழிய அல்லாஹ் கூறிய முறைப்படி ஒழுங்காக அணிவதில்லை அவர்கள் அணியும் ஹிஜாப் பெயரளவில்தான் ஹிஜாபாக காணப்படுகிறது. ஹிஜாபிற்குரிய ஆடை வடிவங்களை நவ நாகரிக முறையில் அதற்கு பல பெயர்களை சூட்டி தற்காலப் பெண்களும், யுவதிகளும் அணிந்து வருகின்றனர்.

எங்கள் பழக்க வழக்கங்கள், பண்பாட்டொழுங்குகள், ஆடை கலாசாரங்கள் போன்றவற்றில் ஏற்றுக்கொள்ளத்தக்க மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். இறை கட்டளையை ஏற்று இஸ்லாமிய வரம்புகளைப் பேணி எங்கள் ஆடைகளை அமைத்துக் கொள்ள வேண்டும். ஹிஜாபின் நோக்கம் ஒரு பெண்ணை சிறைப்படுத்து -வதல்ல மாறாக அவளை பாதுகாத்து உயரிய பண்புள்ள பெண்ணாக வார்த்தெடுப்பதுவே அதன் நோக்கமாகும்.



**திருமதி ஹாஜிபா M. நஸார்**
இஸ்லாமிய ஆசிரியை

# 18 நல்ல செயல்கள்

| | | |
|---|---|---|
| நட | - | அதிர்வின்றி |
| பழகு | - | நாகரிகமாக |
| பேசு | - | பணிவாக |
| உண்ணு | - | அளவாக |
| சுவாசி | - | ஆழமாக |
| உடுத்து | - | அழகாக |
| செயல்படு | - | அச்சமின்றி |
| உழை | - | உண்மையாக |
| தூங்கு | - | அமைதியாக |
| சிந்தி | - | சுயமாக |
| நம்பு | - | சரியாக |
| திட்டமிடு | - | முன்னதாக |
| ஈட்டு | - | நேர்மையாக |
| சேமி | - | சிறிதாவது |
| செலவிடு | - | யோசித்து |
| நேசி | - | பேதம் கடந்து |
| படி | - | முடிவின்றி |
| மரணி | - | பயமின்றி |



**V.அஜோமிக்கா ரதுஷனா** – தரம் 4C

# மூன்றெழுத்து

அன்னை என்னும்
மூன்றெழுத்தால் பிறந்தோம்
அன்பு என்னும்
மூன்றெழுத்தால் வளர்ந்தோம்
பள்ளி என்னும்
மூன்றெழுத்தில் சேர்ந்தோம்
கல்வி என்னும்
மூன்றெழுத்தினைக் கற்றோம்
போட்டி என்னும்
மூன்றெழுத்தை எதிர் கொண்டு
வெற்றி என்னும்
மூன்றெழுத்தை எதிர் கொண்டு
சாதனை என்னும்
மூன்றெழுத்தைச் சந்தித்தோம்



**N.குகனிஜா** – தரம் 6S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய விழாக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான பல்வேறு செயற்றிட்டங்கள்



## அரச நடன நாடக விழா



## இலக்கிய விழா




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# The Influence of Social Network on Students' Education

**Abstract**

*Free education is a gift to the Sri Lankan students. Students must be accountable for the responsibilities taken by the state. Social networking nowadays increasingly penetrates into the academic activities of students. General views about social networking side more towards the darker side. The purpose of this study is to reveal the good and bad in social networking and to make students aware of the results, which they might get if they don't handle social networks in a proper way.*

**Key words:** *Social networking, education, students.*

## INTRODUCTION

Education is an extremely important factor for every student in a country. During school days students must give most prominence to education than other activities. Sri Lanka spends a considerable amount of money for education for more than 60 years .The Sri Lankan government has increased its responsibility by allocating more funds in the budget to educate her children for a better future .But, whether the same responsibility is acknowledged by the student community for their better life is a question, due to the extensive influence of social network, which have penetrated in their academic activities. Therefore it is immense importance to study the impacts of social networking in Sri Lankan educational status. The advent of social networks like two sides of a coin bring with it both positive and negative.

## SOCIAL NETWORKING SITES (SNS)

Social networking sites (SNS) are online communities of internet users who want to communicate with other users about areas of mutual interest, whether from a personal, business or academic perspective (William, Boyd, Dunstan, Chin ,Diamond & Mergenthaler 2009). Social networking sites include : Facebook, Twitter, Viber, Whatsapp, Vimeo, Flickr, Google+, yahoo messenger, Blackberry messenger, Skype, Google messenger, Instagram , IMO, LinkedIn and Pintrest. These networking sites are used by most people to find new friends and to keep in touch with old friends (Asemah & Edegoh 2012).

## BENEFITS OF SOCIAL NETWORKING

It is always preferable to start with the benefits. Recently some schools in Sri Lanka have started to use these sites to promote education, keep students up to date with assignments and offer help to those in need. Social networking sites provide an outlet for teens to express themselves in their own unique ways. In addition, they serve both as a meeting place for teen interaction and showplaces for teens' artistic and musical abilities (Boyd 2007). Virtually these sites also help students to find academic related friends. For example; you are doing a survey on soil science and you have to state a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

graph representing the diverse views of about 100 people on a certain subject. It will be a cock and bull story if you are going to survey 100 persons directly. But if you blog into social networking sites, you'll have the views and comments of more than a 100 persons on seconds.

## DRAWBACKS OF SOCIAL NETWORKING

Now let's focus on the drawbacks of these sites. Since the coming of these sites it is assumed that the academic status of students is facing a great challenge. Achievement or academic performance is the outcome of education; the extent to which a student, teacher or an institution has achieved their goals .Nowadays students' academic progress suffer setback as a result of the addiction to the online rave of the moment-Social networks. Students, instead of reading books, they spend their time chatting and making friend though SNS .This definitely causes adverse effects on their education level.

Researcher Raquel concluded that, it seems, when students are connected via social networks, they lose their mind entirely. Today it is a common sight to see teens chatting via SNS in highly sensitive and organized places like Churches, Kovils, mosques seminar halls etc. Some are so carried away that even as they are walking along the highway, they keep chatting.

Parent-child conflicts have also become more of an issue since the sudden escalation of SNS usage in Sri Lanka. Researchers have shown that students who have a strong sense of intimacy and communication with parents have a better chance for academic success (Greenfield & Subrahmanyam 2008). Due to spending more time on social networks against the will of parents in turn cause distress in the household and may ultimately lead to a barrier between parent child and communication about schoolwork and education (Greenfield & Subrahmanyam 2008).

Participating in online social networks increase the possibilities of being victimized by cyber bullying (Mesch 2009). 14% of Sri Lankan SNS users less than 18 years old have been cyber bullied (Thilini 2016). The result of being cyber bullied can be embarrassment, depression, low esteem and also suicide.

## DISCUSSION

It is crisp clear that social networking sites have more negative effects in comparison to positives. According to my observation, and the opinion of others, all the social networking students are making weak progress in studies. Although some of the SNS users have been aware of their progress, they were not willing to give up social networking due to their great addictiveness. Parents also fear from being parted from their children due to the excess time spent by students on SNS. They also fear about their children's education. Some teachers who are deeply concerned in students have also stated their opinions against SNS. It is a common view that these sites are time killers. At the same time we all must accept that social networking sites have done good to the students.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In my opinion, I would like to state that the positives and negatives of SNS depend on us. The students must have willpower to control themselves in the correct way. Moreover, it is the greatest responsibility of parents to always censor the sites used by their children to avoid students being exploited to unwanted content. Additionally it is proven that students connect themselves via SNS to relieve them from loneliness. So I would also like to mention that parents must spend time with their children regularly. There are many chances for cyber bullied victims (students) getting corrupted. So it will be favorable if the students are counseled at home or in consultancies.

## CONCLUSION

In conclusion, the students must always be aware of their progress in studies. It is now clear that SNS have played a negative part on education due to lack of planning and proper guidance. I have to add that if guided properly and effectively, the outcomes of social networking would have multiplied advantage. Social networking sites can be compared with a knife, which can save, at the same time destroy a life .Students definitely can succeed in using SNS effectively by being brilliant enough to handle them and using them in the correct way.

## REFERENCES


1. Asemah, E.S and Edegoh, L.O.N. (2012). Social media and insecurity in Nigeria: a critical appraisal. Being a paper presented at the 15th National Conference of African Council for Communication Education, Conference Hall of Federal University of Technology, Minna, Nigeria.

2. Boyd, D. 2007. The role of networked publics in teenage social life. MacArthur Foundation Series on Digital Learning-Youth, Identity, and Digital Media Volume. Cambridge, MA: MIT Press. 1-26.

3. Greenfield, P. and Subrahmanyam, K. (2008). Online communication and adolescent relationships, 18, 119-140. Retrieved from: http://www.futureo fchildren.org.

4. Thilini, W, Cyber stalking menace invades Sri Lanka, Ceylon today, http// www.ceylontoday.lk.

5. Williams, A. Boyd, S. Densten, R. Chin, D. Diamond, and C. Morgenthaler, "Social Networking Privacy Behaviors and Risks", In Proceeding of CSIS Research Day, Seidenberg School of CSIS, Pace University, USA. 2009.






**Romikha Andrew** Gr - 11[L]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMPORTANCE OF VALUE EDUCATION IN THE PRESENT CONTEXT



Education and values are related to each other. The end of education is character. To realize this idea all teachers are expected to possess values. At the same time education is a methodical effort towards learning basic facts about humanity and the core idea behind value education is to cultivate essential values in the students. So that the civilization that teaches us to manage complexities can be sustained and further developed. It begins at home and it continues in the school. Once if we can understand our values in life, we can examine and control the various choices we make in our lives. It's our prime duty to uphold the various types of values in life such as cultural values, universal values, personal values and social values. The need for value education among the parents, children, teachers etc, is constantly increasing as we continue to witness increasing violent activities, behavioural disorder and lack of unity in society.

Khant, an ancient philosopher has said that character is the only thing that is valued most. For Tamil speaking community 'Thirukural' is considered an inspiring treatise on value which shows the way to lead a good life. But the worldly, commercialized modern culture which appeared in the western world and spread throughout the world Has destroyed the traditional, social values. This has resulted in the degeneration of society. At the present context, the students see no values in education other then passing examination. As a result the students are unable to face life's challenges. At this point, it is appropriate to see what we really mean by values. The word value means something valuable or treasured. A special human quality is to give a value to things. Mother nature has no such thing as value. But it is this human mind which attributes a certain value to objects, people, occurrences, characterization and thoughts. For example "gold is more valuable than silver when time passes silver may become more valuable than gold.

It is very interesting to ask why people value certain things. It may be because of their usefulness, beauty, the self – satisfaction it gives, the good quality, strength etc. Lets see some of the definitions which explain the concept of value. According to Collins Cobled Dictionary Value means worth; that which make anything desirable or worth possessing – qualities, attitudes. Methods etc. Anything which is desired, valued, received held in high esteem, consumed, liked and experienced is basically considered as value Brightman


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1978). In English, by values we mean anything that is worthy of and also lofty ideas. But according to the eastern thoughts value and values refer to two different things.

A.S Balasuriya (1997) has defined values as human characteristic of quality that enriches and develops an individual, society and life" A famous humanist, psychologist Abraham Maslow (1970) goes along this line of thought and says "the value that guide a man to his deeds are something inherent in human nature. Values can be expressed by man's effort, knowledge and experiences. Values are something that should be expressed and not built up or created. In the field of education why do values play a significant role? Of course when we talk about value education we never forget to think of discipline, attitude and morality.

Through value education Students should be able to build up a Philosophy of life. The present day adolescents are searching for a philosophy which Would enable them to understand the world the life and distinguish the good and bad . Youths develop inferiority complex because of the types of knowledge and education given to them. Teachings of academic subjects occupy a predominant place in our education system which presents children from developing the correct philosophy of life.

What does a teacher in the school can do to inculcate values among the students who are experiencing the process of globalization? when students are reading books quietly in the absence of the teacher what has determined their behaviour moral elements such as it is wrong to waste time. It is bad to disturb others would have been the basis for such behaviour. These are their moral judgements. Infact the outcome of values can be seen from the discipline maintained in that school.

Let us see what is discipline? Holliday (1961) says the self-control that develops in a person shows the good discipline that develops in an individual. Discipline therefore emerges through self-effort. Madame Agnew (1964) too emphasize this respect, she says discipline of these two, he argues that doing the right thing is more important further two eminent psychologists Britts Haitor (1958), William Mackeyar (1960) has explained the basic truths about individual attitudes. A person, will not have two attitudes which are contradictory to each other. If such contradictory attitudes do exist at a particular time, that would lead to a restlessness in him or her. That is why it is said that it is very difficult to build up an attitude which may be against one's life philosophy. Changing one's attitude and values should be very carefully done. Accordingly, teachers must be careful when dealing with the students to inculcate a correct attitude. At the sametime we, teachers should not forget that personal example is the best method in teaching. If we don't show by example what we teach, of what use is our teaching and what impact it will make on the children's mind. The teacher adheres to the values in day to day life. He sets an example to others particularly to students. That is the primary duty of a teacher.

When a child behaves in the expected manner, the teacher rewards him or her by praising, giving gifts, offering marks etc. This motivates a child to behave in the same way over and over again. Psychologists like skinner and Albert Bandura have referred to this as



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

stimulation. Giving punishment is a negative stimulant. It is favourable to avoid giving punishment. It is necessary that ample opportunities and facilities should be given to children to enable them to behave in the expected manner. At the same time rewards and punishments may be suitable for children in primary grades. This may not be useful for the secondary grades as well as they will not help to enhance the inner feeling s, thoughts or attitudes. Whenever the teacher provides information the students should be made aware of the reason. Even teachers sometimes do the mistakes unconsciously what does it mean? This shows that the elders want the children to be under their control. This may sometimes result in children developing negative attitudes as a result of frustration and stress. More than the school and the teachers, the parents have to play a bigger role in developing values, among children. Accorning to a research done in 1994 students and others include the following as important characteristics of parents.

- Parents should know their responsibilities
- Should be democratic
- Should not be dictatorial
- Faith in parents to be built up by self – evaluation methods
- Should be interested in giving explanation and desire

According to Peber and mazlis (1992) parents can do the following to develop efficiency in children

- Allowing children to choose
- Respect and recognize students best efforts
- Avoid raising unwanted questions
- Avoid being hasty to provide answers
- Encourage children to make best use of resources outside home

According to Winston and Tom Lickson I 1997) the opportunities for parental participation in school activities are less. Both parents and school should jointly identify values that are to be inculcated amongst children. Discipline, adjustment to the Environment, respecting traditions are some of these values.

At the same time pre – service, in service, continuing teacher education should be reoriented to give more and more emphasis to classroom management and student behavior. Teachers may adopt several methods to inculcate values among children. But, student centered approach is supposed to be the best. Value oriented education should be included in a teacher education programme. The training programme should make teachers sensitive to the value needs of children and their full adjustment to society of future.



**Ms.K.Sothilingam**

(BA in Social Science, PGDE (English Medium), M.A. in TESL PGIE at OUSL (Reading)

Teacher of English Special tained Bolawalana, Teacher Training College.

***Reference :***

*Principles of Educations Module (PGDE) OUSL.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் தின நிகழ்வுகள்




## தமிழ்த்தின நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடி வந்த நோபல் பரிசு



2வது உலக யுத்தம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தனது ஆயுத பலத்தை அதிகரிக்க விஞ்ஞானி ஐன்ஸ்டீனை அழைத்து அணுகுண்டு தயாரித்துத் தருமாறு கேட்டுக் கொண்டதுடன், அதற்குத் தேவையான உதவிகளை -யும், ஏராளமான பணமும் தருவதாகக் கூறினார்" இதைக் கேட்டதும் ஐன்ஸ்டீன் சிரித்தார். அதற்கான அர்த்தம் ரூஸ்வெல்ட்க்கு புரியவில்லை "அறிவியல் கண்டுபிடிப்புக்கள் மனிதகுல மேம்பாட்டுக்கு பயன்பட வேண்டுமே தவிர, மனித அழிவுக்கு பயன்படக்கூடாது. பணத்திற்காக எனது மூளையை ஒரு போதும் அடகு வைக்கமாட்டேன்" என்று ரூஸ்வெல்ட்டிடம் உறுதிபட தெரிவித்தார்.

ரூஸ்வெல்ட் வேறு விஞ்ஞானியைக்கொண்டு அணுகுண்டு தயாரித்தார். 2ம் உலகப்போரில் ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா, நாகசாஹி நகரங்களின் மீது அமெரிக்கா வீசியதைக் கேள்விப்பட்டு ஐன்ஸ்டீன் அழுதார். அறிவியல் வளர்ச்சி அழிவுக்கு பயன்படுத்தப்பட்டதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த சோகத்திலிருந்து விடுபட பல ஆண்டுகள் ஆனதாம். இந்த உயரிய குணத்தைப் பாராட்டித்தான் ஐன்ஸ்டீனுக்கு நோபல் பரிசு தேடி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



**Y.சஞ்சிகா** – தரம் 5S

# ஆமைத்தீவுகள்



பசுபிக் பெருங்கடலில், கலபாகஸ், தீவுகள் உள்ளன. 'கலபாகஸ்' என்றால் ஆமை கள் என அரத்தம். அதற்கேற்ப இத் தீவுகளில் பல நூறு பவுண் எடையுள்ள ஆமைகளை சர்வ சாதாரணமாகப் பார்க்கலாம். 13 பெரிய தீவுகள், 8 சிறிய தீவுகள் 40 தீவுத்திட்டுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. 1959ம் ஆண்டு வரை சிறைக் கைதிகளின் கூடாரமாக இருந்த ஆமைத்தீவு பின்னர் தேசிய பூங்காவாக அறிவிக்கக்கப்பட்டது.



**பு.ஹரிசனியா** – தரம் 6L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டாள் கழுதை



ஒரு தோட்டத்தில் கழுதையும் சேவலும் மேய்ந்து கொண்டிருந்தன. அந்த இடத்திற்கு எதிர்பாராத வகை -யில் சிங்கம் ஒன்று வந்தது.

சிங்கத்தைப் பார்த்த சேவல் 'கொக்கரக்கோ' என்று பலமாகக் கூவியது. சேவலின் கொக்கரிப்பு சிங்கத் -திற்கு முற்றிலும் பிடிக்காத -தால் அந்த இடத்தை விட்டு ஓடியது.

சிங்கம் ஓடுவதைக் கண்ட கழுதை, தன்னைக் கண்டுதான் பயந்து ஓடுகின்றது என்று எண்ணிச் சிங்கத்தைத் துரத்திக் கொண்டு ஓடியது.



சேவலின் கொக்கரிப்புக் கேட்காத தூரத் திற்குச் சென்றதும் சிங்கம் நின்றது. சிறிதும் இவ்வகை மிருகத்தைக் கண்டு அச்சமில்லாமல் கழுதை பின் தொடர்ந்து ஓடி வருவதைக் கண்டு சிங்கம் ஆத்திரம் அடைந்தது.

சிங்கம் கழுதையைப் பார்த்து "எதற்காக என்னைப் பின் தொடர்ந்து ஓடி வருகின் றாய்" எனக் கேட்டது.

அதற்கு கழுதை "என்னைப் பின் தொடர்கிறாய் என்று கேள்வி கேட்கிறாயா? எனக்குப் பயந்து தானே நீ ஓடுகின்றாய்" என்று கூறியது. இதைக் கேட்டதும் சிங்கம் கழுதைமேல் பாய்ந்து அதைக் கடித்துவிட்டுச் சென்றது.

**பெருமை பேசாமல் அமைதியாக இருந்திருந்தால் கழுதைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டிருக்க மாட்டாது.**




**கே.ஆனி தர்ஷிகா** – தரம் 6C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**D**o you know the meaning of discipline? Discipline means keeping control of ourselves. This will help us to achieve our goals. Student life is that period of time in which we are studying, whether at school or at university. We have to keep a good control over our actions. Through this we can progress as well as possible in our studies.



# Importance of Discipline in Student Life

If we do not stay disciplined, it is hard to stay motivated in our studies. It's important to remind ourselves what we are working for and why. The students must obey their teachers. They must obey the rules in school. If a student violates them she suffers a great deal in her future. A disciplined student can achieve success. At the same time a teacher without discipline in his / her life cannot be an ideal teacher. Therefore, everyone should have self-discipline.

Most of the students especially the teen agers understood the word discipline as the opposite of freedom. They didn't understand it as a synonym for organized, goal-driven effort. Discipline is a set of task and effort metrics, that you want to define, to "keep you in" on the path.

In our lives we observe that those who became famous in the world lead a discipline life. It is true that their success was not possible at all without discipline. Therefore, we can teach a lesson of maintaining discipline from their life. Besides, we observe that the students who maintain discipline becomes good ones. On the other hand, the students who do not maintain discipline does bid in future. Therefore, we never think of our success without discipline.

Dear readers and my dear students before the conclusion I would like to say that discipline help us to stay focus towards our work, activities or goals and it help us to get respect from others. We can earn bad name easily but getting a good name from others is difficult. Discipline is one way to reach that goal. Therefore, stay healthy, stay active and have self-control, get a good education and enjoy with your studies, live a stress less live. To get these things be a disciplined student good luck.



*Mrs. A. J. Speck*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனது திருமுடியில் ஒரு பிரம்ம கபாலம் பல்லிழந்த நிலையில் உள்ளது. அவரது கழுத்தினை முப்பத்-திரெண்டு பிரம்ம கபாலங்களையுடைய மாலை ஒன்று அழகு செய்கின்றது. இறைவன் பிச்சை புகுகையில் கபாலம் ஒன்றினை பிச்சைப்பாத்திரமாக ஏற்பார். இறைவன் கழுத்துமாலையிலுள்ள பிரம்ம கபாலங்களின் எண்ணிக்கையை இருபத்தொன்று என்றும் முப்பத்திரெண்-டென்றும் இருவகையாகக் கூறுவர். இப்பிரம்ம கபாலமலையில் ஆதி வராகக் கொம்பும் கலந்திருக்கும். இப்பிரம்ம கபாலங்களை கட்டிக்கோர்த்து வைக்க



# நாட்டிய சாஸ்திரத்தில் பிரம்ம உலகு

பாம்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. நடராஜப் பெருமான் விசித்திரசித்தன் ஆகையால் அவருடைய முக்கிய அணியே விசித்திர மாகவுள்ளது. இறைவனது திருமுடிக் கண்ணுள்ள சந்திரன் அமிர்த தாரகை-களை உமிழ்கின்றது. பல்வேறு பிரம்ம யுகங்களில் செயல்பட்ட பிரம்மனது கபாலங்கள் இவ்வமிர்த தாரகைகள் பட்டு உயிர்பெற்று விடுகின்றன. இம் மாலையினைக் கட்டியுள்ள பாம்பு நெருக்குகின்றது. பிரம்ம கபாலங்கள் துயர் மறக்க இருக்கு சாம வேதங்களை பாடத் தொடங்குகின்றன. வேதகோஷம் விண் அதிர்கின்றது. இறைவனது நடன வேகத்தையே இப்பிரம்ம கபாலங்கள் ஒரு தனி உலகாக அமைத்து நித்திய கருமங்களை செய்யத்தொடங்குகின்றன. வேதம் பாடுபவர்கள் கங்கையின் நீர்த் துளிகளில் நீராடிக்கடன் இறுக்கின்றனர். இதனை "நதியதனயலே நகுதலை மாலை நான் மதிச்சடைமிசை அணிந்து" என திருஞானசம்மந்தர் பாடியுள்ளார். ஹர விஜயம், சதுக்கதிர்ணாமிதம் முத-லிய சமஸ்கிருத நூல்களும் இவ்வாறே புகழ்கின்றன. பிரம்ம கபாலங்களும் ஆதி வராக்கொம்பும் பிரம்மாக்களும் ஆதி வராக மூர்த்திகளும் கருத்தாக்கள் அன்று கருவிகளே என்பதை சுட்டுவதோடு எண்ணற்ற பிரம்ம கற்பங்களையும், ஆதி வராகக்கற்பங்களையும் ஆய காலங் களைக் கடந்து நித்தியமான ஆதி கருத்தாவாகவும் காரிய கர்த்தாக்க ளாகிய பிரமாதயரை படைத்து அழித்துச் செயல்படுத்தும் இவனே மூலகர்த்தா என்பதனையும் குறிப்பன என்பதைக் குஞ்சி தாங்கிரி ஸ்தவமும் பிற நூல்களும் குறிப்பிடுகின்றன.

கபாலம் இறைவன் விருப்பு, வெறுப்பு அற்றவர் என்பதற்கு அடையா-ளம் என்பதும் உண்டு. கற்கழிவு, வேத கோஷம், அமிர்த தாரகையின் உயிர்ப்பு என்பன மிக்குயர்ந்த தத்துவப் பின்னணி-கள், சிதம்பர சிற்ப சபையில் ஆனந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜப்பெருமான் தங்கத்தினாலான கபாலங்களையுடைய அழகிய மாலை அணிந்து ஆடுகின்றார். இறைவனின் சிகை சக்கரத்தில் அமைந்துள்ள நான் முகன் மண்டையோடு அழிப்பும் மாயா காரியப் பொருட்களும் சிவபெருமான் கையதேல் அவை அழிவினை எய்யா தென்றும் வெற்றி காட்டும் சின்னமாக -வும், படைத்தல் தொழில் செய்யும் பிரம்மனுக்கு இறுதித் தொண்டென்பதை யும் காட்டுவர் என்பர்



**திருமதி.வசந்தி நேரு**
நடன ஆசிரியை-முதுகலைமாணி.

காத்திருந்தோம் – எதிர்பார்த்திருந்தோம்
கல்லூரியில் சுற்றுலா செல்ல!
கிடைத்ததுமே மகிழ்ந்திருந்தோம்
நட்புடனே பயணம் செல்ல!



# நீங்காத நினைவுகள்

மூன்று நாட்கள் நீண்ட பயணம் – அதில்
ஆயுள் வரை நீளும் நினைவு!
காலமெல்லாம் மறவோம் – பள்ளிப் பருவம்
அதில் கிடைத்த வரமும் இது!

கோடையினால் ஊரில் சலிப்பு
தொடர் தேடலினால் கண்ணில் தவிப்பு!
பரீட்சையினால் உள்ளே படபடப்பு – இதை
போக்க வந்த பயணத்திலே உள்ளம் குதூகலிப்பு!


புதுமை தந்த சுற்றுலா வாழ்க்கை – அதை
புரிந்து கொள்ள வேண்டும் நாம்!
புரியவில்லை இயற்கை எழிலும் – அங்கே
காலம் மட்டும் பனியின் குளிரில்!

குளிரில் உடல் நடுங்க – துடிப்பில்
இதயம் சிரிக்க! – வேண்டும் பள்ளிக்காலம்
அதில் மீண்டும் பயணம் வேண்டும்! என்றே
மனமும் ஏங்கும்! அதையும் காலம் மாற்றும்.

வானிலை மாற்றும் அங்கே – பெரும்
சூழ்நிலை மாற்றும் இங்கே
இயற்கையின் வனப்பு அள்ள – அதை
இரசித்திடும் பல கண்கள் துள்ள!

மறவாத கல்விப் பயணம் – அதைக் கூறிட
வார்த்தைகள் தேடிச் செல்லும் – பல
வரிகளும் தொடர்ந்து போகும் – அதில்
முடிவையும் கேட்டுச் சொல்லும்
வார்த்தைகளிங்கு இல்லை

எம் சுற்றுலா தந்த சுகங்கள் சொல்ல
என் ஆயுளின் நீளம் வேண்டும்!
காலமெல்லாம் எம் கல்விச் சுற்றுலா –
என்றுமே எம் நீங்காத நினைவுகள்!



**நிரோஜா வெற்றிவேல்**
தரம் :- 12B - Bio 2017 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனீர் தயாரிப்பு



**அறிமுகம்:**

பனீர் என்பது பாலில் இருந்து இலகுவாகத் தயாரிக்கக்கூடிய பால் உற்பத்திப் பொருளாகும். மாமிச உணவை விரும்பாதவர் களுக்கும் பாலை நேரடியாக பருக விரும்பாதவர்களுக்கும் பொருத்தமான உணவாகும்.



போசணையும் சுவையும் மிக்க உணவாகவும் சந்தையில் தேவைக்கு ஏற்ற வகையில் உற்பத்திகள் கிடைக்காததால் விலையுயர்ந்த உற்பத்தியாகக் கொள்ளப்படும்.



சுயதொழிலாகப் பாலுற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பவர்க -ளுக்கு இலாபத்தைப் பெறக்கூடிய வியாபாரமாக பனீர் தயாரிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**பனீர் தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள்**



பசுப்பால் அல்லது எருமைப்பால் – 01 லீற்றர்
சித்திரிக் அமிலம் (அசிட்) – 1/2 தே கரண்டி அல்லது (5 பெரிய எலுமிச்சம்பழச்சாறு)
மல் பீஸ் அல்லது பருத்தித் துணி – 18 – 18 அங்குல அளவு

**தயாரிக்கும் முறை**



- முதலில் பாலை ஒரு பாத்திரத்திலிட்டு 78 – 80 சென்ரிகிரேட் வெப்பநிலைக்கு சூடாக்கவும்.
- அந்த வெப்பநிலையில் உள்ள பாலுக்கு சித்திரிக் அசிட் (அமிலம்) அல்லது எலுமிச்சம்பழச் சாறு சேர்த்து நன்றாகக் கிளறவும்.
- மேற்குறிப்பிட்ட உணவுக்கு நீர்ப்பகுதியை நன்றாக அகற்றப் -பட்ட கட்டியாக்கப்பட்ட பாலிலுள்ள நீர்ப்பகுதியை முற்றாக (நன்றாக) அகற்றுவதற்கு அதன் மேல் பாரம் ஏற்றவும்.
- இவ்வாறு கட்டியாக்கப்பட்ட பால் நன்றாக துவாரம் இடப்பட்ட பாத்திரத்தில் இட்டு அல்லது பால் கட்டிகளைத் துணிகளின் மேல் பரவி உணவுக்காக தயாரித்து $1\frac{1}{2}$ மணித்தியாலத்திற்கு பாரம் இடப்படல் வேண்டும். (பாரம் இடுவதற்கு நீரினால் நிரப்பப்பட்ட பெரிய சோஸ்பானைப் பாவிக்க முடியும்).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1½ மணித்தியாலத்திற்கு பின்பு நீர் அகற்றப்பட்ட பனீர்க் கட்டிகளை சென்ரிகிறேட் 6–10 பாகை குளிர்ந்த நீரில் 2 மணி நேரம் அமிழ்த்தி வைக்கவும். மீண்டும் அகற்றுவதற்கென குளிரூட்டியில் ஒரு மணித்தியாலயம் வரை வைத்திருக்கவும். பின்பு 100 கிராம், 200 கிராம், 500 கிராம் அளவில் துண்டுகளாக வெட்டி பொதி செய்து சந்தைக்கு அனுப்ப முடியும்.
- இந்த தயாரிப்பு சென்ரிகிறேட் 0 பாகை வெப்பத்தில் ஒரு மாத காலத்திற்கு வைத்திருக்க முடியும்.



**உணவுக்காகப் பயன்படுத்தும் முறை :**

- உணவுக்காகத் தயாரிக்கப்படும் முறைகள் எத்தனையோ உள்ளன. சோறு, பாண், ரொட்டி ஆகியவற்றுடன் உணவாக உட்கொள்ள முடியும்.



**ஆழமான எண்ணெயில் பொரித்தல்**

- இதன் பொருட்டு உப்புத்தூள், மிளகுத் தூள், மிளகாய்த் தூள் இவைகளுடன் சேர்த்து தயாரிக்கப்பட்ட சேர்வையில் வெட்டப்பட்ட பனீர் துண்டுகளைப் பிரட்டி, முட்டைக் கலவையில் தோய்த்து மீண்டும் பிஸ்கட் தூளில் பிரட்டி ஆழமான எண்ணெயில் பொன்னிறத்தில் பொரித்துக் கொள்ளவும்.



**கறி தயாரிப்பில்**

- பால் சொதி தயாரித்து உணவுக்கென வெட்டிய பனீர் துண்டுகளைச் சேர்த்துக் கொள்ளவும்.



**திரு.ந.ஜெகநாதன்**
பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
மிருக விஞ்ஞானவியல் பகுதி,
கிழக்குப் பல்கலைக்கழகம் – வந்தாறுமூலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சத்திய மறைகாத்த சத்திய வீரர்
# புனித ஜோசப்வாஸ்

**"தனக்காகவும் பிறருக்காகவும் வாழ்பவன் மனிதன்
பிறருக்காகவும் இறைவனுக்காகவும் வாழ்பவன் புனிதன்"**

இறைவனுக்கும் மனிதனுக்குமான நிறைவான அர்ப்பணம் பற்றி சிந்திக்க அழைக்கப்பட்டிருக்கும் நாம் அர்ப்பண வாழ்வில் சிறந்த உதாரண புருஷராகத் திகழும் இலங்கையின் திருத்தூதர் எனும் அருள்வரத்தைப் பெற்ற அருளாளர் ஜோசப்வாஸ் முனிவர் அதற்கு உன்னதமான சாட்சியாக உள்ளார். கலாபனை நிறைந்த காலங்களில் துணிவோடும் அர்ப்பணத்தோடும் அவர் ஆற்றிய திருப்பணி எம்மிடம் பணியார்வத்தைத் தூண்டியெழுப்ப வேண்டும். நாம் ஆரம்பித்திருக் -கும் இப்புதிய "ஜோசப் வாஸ்" ஆண்டிலே இலங்கையின் திருத்தூதராம் அருளாளர் பற்றி வழங்கும் செய்தி இலங்கைவாழ் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகும். இவரின் எடுத்துக்காட்டான வாழ்வு அவர் கடைப்பிடித்த உயர் மதிப்பீடுகள் அவரது மறைபரப்பும் ஆர்வம், வீரதீர புனிதத்துவம், ஆன்மாக்களுக்கான தணியாத தாகம் போன்றவற்றின் நிமித்தம் எம் நாட்டுக்கு வந்து எமது முன்னோர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தியதற்காக மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளோம். இலங்கைத் திருநாடு கத்தோலிக்க விசுவாசத்திற்கு அச்சுறுத்தலாக இருந்த காலமே ஒல்லாந்தர் காலம். இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை சரித்திரத்தில் ஆயன் இல்லாத மந்தைகளாக இருள்சூழ்ந்த காலமாக இருந்த போது, இறைவனின் திட்டம் வேறுவிதமாக இருந்தது. அவரின் பேரிரக்கம் திருச்சபை சுத்திகரிக்கப்பட்டு புதிதாய் மலர்ந்த மலர்போல் புத்துயிர்ப்புடன் என்றும் பிரகாசமாய்த் திகழ வேண்டும் என இறைவன் திருவுளம்கொண்டார். **"உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தாருக்கு ஒளியாக ஏற்படுத்துவேன்"(தி.ப. 13:47)** என்று இறைவன் ஜோசப் வாஸ் அடிகளாரை அன்போடு அழைத்தார். தூய ஆவியாரின் ஒத்துழைப்பு இவரின் பயண வாழ்வில் துணைநிற்பதை நாம் காணலாம்.

### ஜோசப் வாஸ் அடிகளாரின் அவதாரம்

கோவா மாநிலத்தின் சல்செத்தே என்னுமிடத்தில் அமைந்துள்ள சுவாரி நதியின் தெற்குக் கரையோரம் சன்சோல் என்னும் கிராமம் அமைந்துள்ளது கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் ஏழ்மையான பண்புகளைக் கொண்ட கொங்கணி மொழி பேசும் குடும்பம். பக்தியிலும் நேர்மையிலும் பிறர் அன்பின் சேவையிலும் சிறந்து விளங்கியது. இது ஒரு பிராமணக் குடும்பமாக இருந்தாலும் "வாஸ்"என்ற போர்த்துக்கேய கிறிஸ்தவ பெயரைத் தனது குடும்ப பெயராகக் கொண்டிருந்தது. உறுதியான விசுவாசத்தைக் கொண்டிருந்த நடுத்தர வயதுடைய கிறிஸ்தோபர் வாஸ் என்பவரே இக்குடும்பத்தின் தலைவர். தாய் மரிய தெ மிராண்டோ ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்காலத்தில் போர்த்துக்கேய மொழி கோவா மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும் மக்களின் பேச்சு மொழியாகவும் இருந்ததோடு கிறிஸ்தவ விசுவாசத்தையும் கிறிஸ்தவ கலாசாரத்தையும் பரப்பும் ஊடகமாகவும் விளங்கியது. கிறிஸ்தோபர் வாஸின் மனைவி மரிய தொ மிராண்டோ அவர் பெனோலிட் எனும் அயல் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் பண்பிலும் கத்தோலிக்க மறை உணர்விலும் சிறந்து விளங்கினார். அவர்களுக்கு பேத்றோ என்ற ஆண் பிள்ளையும் அஞ்சலா என்ற பெண் பிள்ளையும் இருந்தார்கள். இந் நிலையில் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கின்ற குழந்தையாகவும் இந்திய இலங்கை கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் தனது பெயரைப் பதிப்பவராகவும், கீழைத்தேச விசுவாசத்தின் சிறந்த கொடையாகவும் கிறிஸ்தோபர் வாஸ் குடும்பத்தின் மூன்றாவது பிள்ளையாக ஜோசப் பிறந்தார். 1651ம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி ஜோசப்வாஸ் பிறந்தார். சிறு வயது முதல் இடைவிடாத செபம் நாளாந்தத் திருப்பலி நோயாளிகளுக்கு தேவநற்கருணை எடுத்துச் செல்லும் போது அவருடன் கூடச் செல்லுதல், மரணச் சடங்குகளில் பங்குபற்றுதல் அவரின் பிரதான முயற்சிகளில் ஒன்றாக இருந்தது. கண்ணால் காணாத கடவுளைக் கண்டு அவருடன் அதிக நேரத்தினை உரையாடிக் களிப்பதனை ஜோசப்வாஸ் நோக்காகக் கொண்டிருந்தார். இவரின் தாய்மொழி கொங்கணியாயிருந்த -தாலும் சங்கோலேயிலுள்ள ஆரம்ப பாடசாலையில் சேர்ந்து போர்த்துக்கேய மொழியைக் கற்றார். ஐந்து வயதில் இப் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருடைய புத்திக் கூர்மையும் விவேகமும் சாதுர்யமும் சீராக வளரவும் வெளிப்படவும் வழியாயிற்று. இவர் சிறு வயதிலே குருத்துவ அழைத்தலுக்கான குணவியல்பைக் கொண்டிருந்தார். அதைப் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டனர். தங்களது குடும்பத்தில் முதலாவது குருத்துவ அழைத்தலை ஊக்குவித்து வளர்த்தெடுக்க வேண்டிய அனைத்தையும் செய்தார்கள். இயேசு சபையினரால் நடத்தப்பட்ட புனித பவுல் கல்லூரியில் தனது இலக்கணக் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்தார். தொடர்ந்து டொமினிக்கன் சபையினரால் நடத்தப்பட்ட பிரசித்திபெற்ற புனித தோமஸ் அக்வைன்ஸ் உயர் கல்விக்கூடத்திற்கு மெய்யியல் இறையியல் கற்கை நெறிகளைத் தொடர்ந்தார் இவ்வாறு கோவாவில் தங்கியிருந்து ஆறு வருடங்கள் பயனுள்ள விடயங்களைக் கற்றார். 1671ம் ஆண்டு தன்னுடைய இருபதாவது வயதில் இவர் குருத்துவ வாழ்வுக்கும் இறைபணிக்கும் தன்னை அர்ப்பணித்து குருத்துவத்திற்கு முன் வழங்கப்படும் பட்டங்களைப் பெற்றார். இருபத்து மூன்றாவது வயதில் உபதொண்டர் பதவியையும் அடுத்த ஆண்டு தொண்டர் பதவியையும் பெற்றார். 1676இல் ஜோசப்வாஸ் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் சிறந்த நன்னடத்தை சாட்சியங்களைப் பெற்றிருந்தமையினால் நற்செய்தி போதிப்பதற்கும் பாவமன்னிப்பு அருளடையாளங்களை வழங்குவதற்கும் அனுமதி பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணிக்கான அழைப்பு**

இலங்கை ஒல்லாந்தரின் காலத்தில் நீண்டகால மத கலாபனைகளின் விளைவாக எத்தனையோ ஆண்டுகள் குருக்களின்றி வாழ நேரிட்டது. கத்தோலிக்க வழிபாடு களுக்கு முடிவு கட்டப்பட்டது. சுதேசிகளின் சந்ததியினர் மீண்டும் பிற மத வழிபாடுகளில் ஈடுபட்டனர். கட்டாயத்தின் பேரில் புரட்டஸ்தாந்தினராக மாறினர். இவ்வாறாக இலங்கையில் இடம்பெற்ற துன்பியல் நிகழ்வு கோவை ஆசனக் கோவிற் குருக்களில் ஒருவர் மூலம் கோவாவிற்கு செய்தி பரவியது. இச்செய்தி குருவாக பணிசெய்த ஜோசப் வாஸ் அவர்களின் காதில் விழுந்தது இதை மனதிற் பதித்து இறைவனின் விசேட அழைப்பாக உருவெடுத்தது. திருச்சபையின் தேவைக்கு எவ்வாறு உதவ முடியும் என்று யோசித்தார். இலங்கைத் தீவின் பக்கம் இந்த குருவின் இதயத்தைத் திருப்பினார். மற்ற குருக்கள் எவரும் முன்வராத நிலையில் அவருக்கு எந்தவித உதவியும் இருக்கவில்லை. தனியாகவே செல்வோம் எனும் நிலைக்கு உள்ளானார். கோவையிலிருந்து இலங்கைக்கு குருக்கள் புகுவது கடினம். அது இயலாத காரியம் எனக் கண்டார். இருந்தபோதிலும் இரு வழிகளைக் கையாண்டார். தூத்துக்குடி




மட்டும் தரைமார்க்கமாக இரகசியமாகப் போய் அங்கிருந்து கொழும்புக்குச் சென்று கம்போயா சுவாமியுடன் கலந்தா - லோசித்தார். அவரோ உடன்படவில்லை. ஜோசப் வாஸ் அடிகள் இலங்கைக்கான தமது பயணம் பற்றி திட்டமிட்டுக் கொண்டிருந்த வேளை சுதேச மக்களுக்கு மறையுண்மைகளை மொழிபெயர்க்கும் பணியை மேற்கொள்ள இவரின் உதவியை "வரந்தோயா"துறவிகள் நாடினர் இப்பணி கடினமாக இருந்தது. இரு போதகர்களின் பணிக்கு நிகரான பணியை ஆற்றவேண்டியிருந்தது. நீண்ட பல மணித்தியாலங்களாக பாவ மன்னிப்பு அருட்சாதனங்களை அளித்ததோடு சிலுவைப்பாதை தியானத்துடன் ஏனைய பக்தி முயற்சிகளையும் நடத்தினார். இப்போதனைகளை கொங்கணி மொழியில் எழுதினார். தான் எதிர்கொள்ளப்போகும் அளவிடமுடியாத இன்னல்களைப் பற்றி எவ்வித எண்ணங்களுக்கும் இடங்கொடாமல் இறைவனின் கரத்தில் தன்னை ஒப்படைத்து இலங்கை செல்வதற்கு உறுதிபூண்டார். இவ் இரகசிய திட்டத்தைப் பேணுவதற்காக இரத்த உறவுகளிடமிருந்தும் மறைந்திருந்தார். தனக்கு பிராமாணிக்கமுள்ள யோண் என்பவரை அழைத்துக்கொண்டு புறப்படத்தயாரானார். ஒல்லாந்தரிடமிருந்து இரகசியமாக வெளியேறுவதற்கு இயேசு சபை குருக்களின் ஆலோசனை இவருக்கு உதவியது. 1687ல் இவர்களது யாழ்பாணம் நோக்கிய பயணம் ஆரம்பித்தது. தங்களுடன் பூசைக்கல்லையும் புனித பாத்திரங்களையும் எடுத்து வந்தமையால் பயத்துடனும் சஞ்சலத்துடனும் கப்பல் ஏறினார்கள். இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை வைத்து பயணித்தனர். பயணித்த தோணி ஆழ்கடல் சென்ற போது கடற் கொந்தளிப்பும், கடும் காற்றும் அன்றைய தினம் பயணத்தை கடினமாக்கியது. நான்கு நாட்களே கொண்ட பயணம் இருபது நாட்களாக மாறியது உணவின்றி தண்ணீரின்றி கடும் சிரமத்திற்குட்பட்டனர். பசி, களைப்பு, சோர்வு, தாகம் போன்றவற்றால் வலுவிழந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1687 ஏப்ரல் மாதம் தமது இலக்கான யாழ்பாணத்தில் கால் பதித்தனர். விசுவாசத்தில் ஊறிய சில்லாலை மக்கள் உணவு பாதுகாப்பு போன்றவை வழங்கி காவல் காத்தனர். அதுவரை இவர்கள் வசதிகளற்ற ஏழைகள் என்றே மக்கள் அறிந்திருந்தார்கள்.

### விசுவாசப் பணி

யாழ்ப்பாணத்தில் உள்ள பல இடங்களுக்குச் சென்று கத்தோலிக்கர்களுக்கு திருப்பணி புரிந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து வந்தார். அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி திருவருட்சாதனங்களை வழங்கி கத்தோலிக்க மதத்தை எதிர்த்தோரையும் மனந்திரும்பச் செய்தார். அவரின் முன்மாதிரியான வாழ்க்கை அவரில் மிளிர்ந்த பிரகாசித்த கிறிஸ்தவ நற்பண்புகளும், புண்ணியங்களும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. இதை அறிந்த ஒல்லாந்தர்கள் அவரைக் கைது செய்வதற்கு திட்டம் தீட்டினர். சன்மானம் வழங்கவும் தயாராக இருந்தனர். பல தடவைகளில் ஜோசப் வாஸ் அடிகள் இவர்களிடமிருந்து தப்பினார். இவ்வாறு பல இன்னல்களுக்கு மத்தியில் இருபத்திநான்கு வருடங்கள் பாதுகாப்புடன் இருந்திருக்கின்றார். ஆன்மீக வரட்சியில் புத்தளம் மக்கள் பெரிதும் வாடியிருந்த போது வாஞ்சையுடன் கூடிய பணியை இங்கு அடிகளார் மேற்கொண்டார். ஏனெனில் பயம், அச்சுறுத்தல் இங்கு இருக்கவில்லை. பிரசங்கித்து, பேயோட்டி கிராமம் கிராமமாகச் சென்று மறைக்கல்வி போதித்து கிறிஸ்தவ கோட்பாடுகளைக் கற்பித்து அருட்சாதனங்களை நிறைவேற்றி பணி செய்தார். திருச்சபை தாகம் இன்னும் தழைத் -தோங்கியதால் கண்டி பிரதேசத்துக்கு 1692 ஆகஸ்டு மாதம் புறப்பட்டுச் சென்றார். மறைபோதக பணியை ஆற்றுவதற்கு மத்திய நிலையமாக இதனைத் தெரிவு செய்தார். கண்டி இராசதானிய இரண்டாம் விமலதர்மசூரிய அருளாளருக்கு பெரிதும் உதவி புரிந்தார். இருப்பினும் "கல்வினிஸ்ட்" மதத்தினரின் குற்றச்சாட்டையடுத்து ஜோசப்வாஸ் அடிகளாரையும், யோணையும் சிறையிலடைத்தான். பின்னர் இவர்களுக்கு சாதகமாக செயற்பட்டு விடுவித்தான். அடிகள் சிறு வைக்கோல் குடிசை அமைத்து அதனுள் சிலுவையுடனான பீடம் ஒன்றை அமைத்து தினமும் செபமாலை ஒப்புகொடுப்பதிலும் செபிப்பதிலும் ஈடுபட்டார். 1692 நத்தார் நாளிலிருந்து திருப்பலி ஒப்புக்கொடுக்க ஆரம்பித்தார். அக்காலகட்டத்தில் வாழ்ந்த அன்ரோனி டி ஹோர்டோ என்ற கத்தோலிக்க பெண்மணி அழகான ஓர் அங்கியை அரசனுக்கு பரிசளித்தாள். அப்பரிசினால் மனங்கவரப்பட்ட அரசன் அதற்கு பிரதியுபகாரமாக வேண்டியதை பெற்றுக் கொள்ளலாம் என்று கூறினான். உடனே அப்பெண்மணி தான் ஜோசப் வாஸ் அடிகளைச் சந்தித்து பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என வேண்டினாள். அன்று முதல் கத்தோலிக்கர்கள் குருவானவரை கண்டு திருப்பலியில் பங்கு பெறவும் தொடங்கினர்.

### அற்புதங்கள்

1696 கண்டியை அண்மித்த பகுதிகள் கடுமையான வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்தன. பௌத்த குருமாரிடமும் இந்து குருமாரிடமும் மழை பொழிய வேண்டி பிரார்த்திக்குமாறு கண்டி மன்னன் கேட்டுக்கொண்டான். ஆனால் மழை பொழியவில்லை. இறுதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோசப் வாஸ் அடிகளாரிடம் வேண்டுகோள் விடுத்தான். அருளாளர் நகரின் சதுக்கத்தில் பீடம் அமைத்து அதன் மேல் ஒரு சிலுவையை வைத்து முழந்தாள் படியிட்டு ஜெபிக்கத் தொடங்கினார். அக்காட்சியை பலரும் பார்த்துக் கொண்டிருக்க பேரிரைச்சலுடன் மழை பொழிய ஆரம்பித்தது. ஆனால் அடிகள் முழந்தால் படியிட்டு ஜெபித்த இடம் ஒருதுளி மழையேனும் விழவில்லை. மயிலை ஆறு (தெதுறு ஓயா) கடக்க முடியாத நிலையில் பெருகிப் பாய்ந்து வெள்ளம் ஓடியது. கரையில் முழந்தாள்படியிட்டு ஜெபிக்கத் தொடங்கினார். கையில் ஒரு கோலை எடுத்துக் கொண்டு ஆற்றில் இறங்கினார். இஸ்லாமியர் திகைத்தனர். ஆற்றை அனைவரும் கடந்தனர். சின்னம்மை தொற்றில் இருந்து காப்பாற்றினார். குழப்பமடைந்த யானையை தன் ஜெபத்தால் கட்டுப்படுத்தினார்.

**இறுதிப் பயணம்**

ஜோசப்வாஸ் அடிகளாரின் உடல் நலம் குன்றிக் கொண்டே சென்றது. அவரது வாழ்க்கையில் புனிதமும் அனுபவமும் சபையின் ஆணிவேராக அமைந்திருந்தது. அவரின் தேக நிலை பற்றியறிந்த அதிகாரிகள் ஓய்வு எடுக்க கோவைக்கு வருமாறு அழைத்தனர். அதனை மறுத்து 1710 இல் ஜோசப்வாஸ் அடிகளாரின் மறைபணி நிறைவு பெற்றது. ஆயனில்லாமல் சிதறிக்கிடந்த ஆடுகளைச் சேர்த்தும் தவறியவர்க -ளையும் அந்நியர்களையும் ஞான மந்தையில் புகுத்தியாயிற்று. கடும் காய்ச்சலுடன் மாரடைப்பும் ஏற்பட்டு மேலும் சுகவீனமுற்றார். நான்கு மாதங்கள் மிகவும் சிரமப்பட்டார். திருப்பலி ஒப்புக்கொடுக்க முடியாத நிலையில் அதிக சிரமப்பட்டு ஆலயத்திற்கு சென்று நற்கருணை பெற்றார். மார்கழியில் தனது கடைசி ஞானஒடுக்கத்தினை செய்யத் தொடங்கினார். 1711 தை மாதம் 07ம் திகதி தனது குருமுதல்வர் பதவியையும் இங்குள்ள ஒற்றேரியன் சபை குருக்களின் முதல்வர் பதவியையும் ஜோசப் தே மெனெசஸ் அடிகளாரிடம் ஒப்படைத்தார். தை 16 அதிகாலை தனது இறுதி நாளென்றும் மரணத்திற்கு ஆயத்தமாக பாவ சங்கீர்த்தனம் செய்வதென்றும் சொல்லி பாவமன்னிப்பு பெற்றார். தான் மரிக்க நேரமாகுமென்று குருக்களை விழித்திருக்க கேட்டுக் கொண்டார். தனியே சிறிது ஜெபித்த பின் வெளியே நின்றவர்களை அழைத்து தான் பாவிபோல மரிக்க வேண்டும், அதற்காக தன்னை நிலத்திலே கிடத்தச் சொன்னார். அதற்கு கொன்சல்வேஸ் அடிகள் உடன்படவில்லை. பின்னர் பாடுபட்ட சிலுவையை எடுத்து மெழுகுதிரிகளை வாங்கி பக்கத்திலே வைத்துவிட்டு பாடுபட்ட சிலுவையைப் பார்த்தபடியே தன் வாழ்நாளெல்லாம் முழு மனதோடு நேசித்த இறைவனின் கையிலே தனது இனிய ஆன்மாவை கையளித்தார். அவர் இறைவனடி சேர்ந்தது 1711ம் ஆண்டு தை 16ம் திகதி வெள்ளிக்கிழமை. நள்ளிரவு வேளையிலே அவருக்கு வயது 60 ஆகும். 35 வருடங்கள் குருவாகவும் 24 வருடங்கள் இலங்கையின் அப்போஸ்தல -ராகவும் விளங்கினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்திக்க**

தூய ஜோசப் வாஸ் ஆண்டில் பொய்மையை இல்லாமல் ஆக்கும் குடும்பங்களாக நாம் மாறிடவும், அனுபவங்களும், சவால்களும் இயேசுவை நோக்கியே இருந்திடவும் குடும்பத்தின் அழைப்பு, திருமணத்தில் நற்பயன் தரும் அழைப்பு, பிள்ளைகளின் கல்வி மேம்பாடு, வலுவின்மையைத் தேர்ந்து தெளிந்து ஒருங்கிணைத்தல், திருமணம், குடும்பம் என்பவற்றின் அருள்வாழ்வு பாவசங்கீர்த்தனத்திற்கு ஆயத்தப்படுத்துதல் போன்றவற்றில் நாம் முழு மனதுடன் பயணம் செய்வோம். உறுதியான குடும்பங்களே நலமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புபவை என்றும் அன்பு மதிப்பு மற்றும் பிறரோடு உறவில் வளர்வதற்கு பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்தல். குடும்ப வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களுக்கு காரணம் காட்டுவதையும் திரு அவையின் போதனைகளுக்கு ஏற்ப வாழாதவர்களைக் குறைபடுவதையும் தவிர்த்து அவர்கள் மீது அக்கறை காட்டும் கத்தோலிக்கர்களாக நாம் மாறிடுவோம் புனிதராகிடுவோம்!



**அருட்சகோதரி.மரிய விஜித்தா** (அ.கா)

# பிரதான தொழிற்சாலைகளும், ஆராய்ச்சி நிலையங்களும்



- கட்டிப்பால் தொழிற்சாலை - **பொலனறுவை**
- பால் பதனிடும் தொழிற்சாலை - **அம்பேவல**
- புகையிரதத் தொழிற்சாலை - **இரத்மலான**
- புடைவை ஆலை - **வெயாங்கொட, பூகொட**
- உலோக ஆலை - **யக்கல**
- கடதாசி ஆலை - **வாழைச்சேனை எம்பிலிப்பிட்டிய**
- பிறிமா ஆலை - **திருகோணமலை**
- தேயிலை ஆராய்ச்சி நிலையம் - **தலவாக்கல**
- இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - **அகலவத்த**
- அவரை ஆராய்ச்சி நிலையம் - **பல்லேகல**
- நெல் ஆராய்ச்சி நிலையம் - **பத்தலகொட**
- உருளைக்கிழங்கு நிலையம் - **நுவரெலியா**
- தெங்கு ஆராய்ச்சி நிலையம் - **லுனுவில**



**யு.பிறேமினா** – தரம் 6S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# මුද්දරයේ ඉතිහාසය

"විනෝදාංශයේ රජු" ලෙස සැලකෙන මුද්දර එකතු කිරීම බාල මහලු භේදයක් නොමැතිව දුප්පත් පොහොසත් බොහෝ දෙනා ප්‍රිය කරන විනෝදාංශයකි.

මුද්දරය හා තැපැල් සේවාව අතර සමීප සබඳතාවයක් පවතී. 15වන සියවසේ යුරෝපයේ රටවල් කීපයක තැපැල් සේවාව ආරම්භ වූ බවට සාක්ෂි තිබේ. එහෙත් එම පණිවිඩ හුවමාරුකර ගැනීම රජ පවුල්වල පමණක් සීමා විය. 1642 (කි:ව:) එංගලන්තයේ එඩවඩ රජුගේ කාලයේදී රජතුමාට කිසියම් ගාස්තුවක් ගෙවා පණිවුඩ යැවීමට රටවැසියන්ට හැකිවිය. මෙසේ පොදුජනයාට පණිවුඩ හුවමාරු කර ගැනීමට හැකිවීම ලෝකවාසී සැමටම සන්දිස්තානයක් විය.

මුල් කාලයේදී ලිපිය ලබන තැනැත්තා ගාස්තුව ගෙවිය යුතුවිය. ලිපිය ලබන තැනැත්තා ගාස්තුව ගෙවීමට ප්‍රතික්ෂේප කලහොත් වැය වූ මුදල අයකර ගැනීම ප්‍රශ්නයක් විය. ලිපිය යවන අවස්ථාවේදීම මුද්දරයක් ඇලවීමෙන් ගාස්තුව අයකල හැකි බව බ්‍රිතාන්‍ය ජාතික "**රෝලන්ඩ හිල්**" මහතා පෙන්වා දුන්නේය.

1840 මැයි පළමු වැනි මුද්දරය එංගලන්තයේදී නිකුත් කරනු ලැබීය. එය "**පෙනී බ්ලැක්**" නම් විය. වික්ටෝරියා රැජිනගේ උඩුකය රූපය සහිත එම මුද්දරයේ වටිනාකම පැන්ස 1කි. පෙනී බ්ලැක් මුද්දරයේ නිකුත් කල රට සඳහන් නොවෙ. එසේ නම රට සඳහන් නොකර මුද්දර නිකුත් කරන එකම රට එංගලන්තයයි.

බ්‍රිතාන්‍යයේ යටත් විජිතයක්වූ ශ්‍රී ලංකාවෙ ප්‍රථම තැපැල් මුද්දරය නිකුත් වූයේ 1857 අප්‍රේල් 1වැනිදාය. වික්ටෝරියා රැජිනගේ උඩුකය රූපය දැක්වෙන මෙහි වටිනාකම පැන්ස 6කි.

මුද්දර ප්‍රධාන වශයෙන් කොටස් දෙකකි.

1. තැපැල් මුද්දර
2. ආදායම් මුද්දර

අප රටෙහි ශත 10 සිට රුපියල් 200 දක්වාවූ සියලු මුද්දර ආදායම් මුද්දර වන අතර රු.500 සහ 1000 ආදායම් මුද්දර වෙයි. ඉහත මුද්දර යලි කොටස් දෙකට බෙදයි.


1. නිත්‍ය කාණ්ඩයේ මුද්දර
2. සමරු මුද්දර

කිසියම් විශේෂ සිදුවීමක් රටෙහි වැදගත් දැ, දේශයට හෝ භාෂාවට සාහිත්‍යයට උදාර සේවයක් ඉටුකල පුද්ගලයින් සැමරීමට සමරු මුද්දර නිකුත් කරයි. ලංකාවේ ප්‍රථම සමරු මුද්දරය නිකුත් වූයේ 1935දීය. ඉන්පසු 1948 පෙබරවාරි 04 නිදහස ලැබීම නිමිති කොට නිකුත් වූ මුද්දරයේ ප්‍රථම අග්‍රාමාත්‍ය ඩී.එස්.සේනානායක මහතාගේ රූපයත් සිලෝන් වෙනුවට ශ්‍රී ලංකා යන වචනයද භාවිතා විය.

1999.11.11 සිංහල සාහිත්‍යයට කල උදාරා මෙහෙවර වෙනුවෙන් විශිෂ්ට පෞර්ෂ නම් ශීර්ෂය යටතේ එදිරිවීර සරත්චන්ද්‍ර මහතාගේ උඩුකය දැක්වෙන රූපයක් සහිත මුද්දරයක් නිකුත් විය.

මුද්දරයක් යනු රටක් නියෝජනය කරන තානාපතිවරයෙක් වැනිය. කිසියම් රටක ජාතික වීරයන්, ආවේනික වෘක්ෂලතා, කුරුල්ලන්, මල්වර්ග ආදී කරුණු රාශියක් මුද්දරවලින් හෙලිවෙ.

එසේම මුද්දර එකතු කිරීම ක්‍රමවත්ව වැඩ කිරීමෙ පුරුද්ද ඇති කරන රට තොට පිළිබඳ දැනුම ලබාදෙන ලොකු කුඩා කාටත් ප්‍රයෝජනවත් විනෝදාංශයකි. මුද්දර එකතු කරන්නා තම ජීවිතයද ක්‍රමානුකූලව හැඩගස්සවා ගැනීමට පෙළඹෙයි. වරක් "මා අසනීපව සිටියදී මාගේ මුද්දර පොත පෙරළා බැලීමෙන් බෙහෙත්වලින් නොලද ආත්ම සුවයක් ලදිමි." යැයි ඇමරිකානු ජනාධිපතිවරයෙක්ව සිටි ෆැන්ක්ලින් රූස්වෙල් මහතා වරක් පැවසීය. එසේම ලෝකයේ මුද්දර පිළිබඳ තොරතුරු සපයන බ්‍රිතාන්‍යයේ ස්ටැන්ලි ගිබන්ස් සමාගම වාර්ෂිකව මුද්දරවල වටිනාකම තක්සේරු කරමින් සගරාවක් පළකරයි. එහිදී අප සතු මුද්දර අලවිකර මුදල්ද ඉපයිය හැක. 1859 නිකුත්කල වික්ටෝරියා රැජිනගේ මුද්දරය වර්තමාන වටිනාකම ස්ටර්ලින් පවුම් 50000කින් ඉහත අදහස සනාථ වෙ.



W.A.Mallika Malkanthi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு தின நிகழ்வுகள்




சிறுவர் தினம்



அன்னையர் தினம்



கலாசார தினம்



உளவள தினம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Hungry Mouse



*A mouse was having a very bad time. She could find no food at all. She looked here and there, but there was no food, and she grew very thin.*

*At last the mouse found a basket, full of corn. There was small hole in the basket, and she crept in. She could just get through the hole.*

*Then she began to eat the corn. Being very hungry, she ate a great deal and went on eating and eating. She had become very fat to pass through the hole.*

*"How shall I climb out?" Said the mouse. oh how shall I climb out? Just the a rat came along, and the heard the mouse.*

*Mouse said the rat "if you want to climb out the basket, you must wait till you have become as thin as you were when you went inn".*

*Even after having food the mouse was sad.*



**M.M.Zeenath Marzook**
Grade - 6S

# தேன்துளிகள்

- ஒரு போது விழுந்து விடுவோம் என்று நினைப்பவனை விட, விழுந்தாலும் எழுந்து ஓடுவோம் என்று நினைப்பவன் தான் ஜெயிக்கின்றான்.
- எழுந்து நடந்தால் இமயமலையும் வழி கொடுக்கும் உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் சிறை பிடிக்கும்.
- எறும்பு நினைத்தால் யார் காதை வேண்டுமானாலும் கடிக்கலாம் யார் நினைத்தாலும் எறும்பின் காதைக் கடிக்க முடியுமா?
- ஜெயித்துக் கொண்டே இரு. நீ வளரும் வரை அல்ல. உன்னை வெறுத்தவர்கள் பார்த்து வியந்து வாழ்த்தும் வரை.
- வெற்றி மீது வெற்றி வந்தால் சரித்திரத்தில் உனது பெயர் வரும் தோல்வி மீது தோல்வி வந்தால் சரித்திரமே உன் பெயராக மாறும்.
- வாழ்க்கையில் நீ யாரையும் சார்ந்து வாழ்ந்து விடாதே!
- உன் நிழல் கூட வெளிச்சம் உள்ள வரைதான் உனக்குத் துணை வரும்.
- நீ மற்றவர்களிடம் நம்பிக்கை வைத்திருந்தால் திறந்த மனதோடு பேசு. அதற்காக கொட்டித் தீர்த்து விடாதே.
- தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை, காலால் நடப்பதற்குப் பதிலாக, தலையால் நடப்பதைப் போன்றது.



**ம.டோறிக்கா சுஹாரி** – தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வை வளமாக்க.....

மனித வாழ்க்கைப் பயணத்தில் பல இடையூறுகள் அனைவருக்கும் ஏற்படுவது வழக்கம். இந்த இடையூறுகளை வெற்றிகொள்வது சிலரே. இவர்களே தங்கள் வாழ்க்கைப் பயணத்தை மகிழ்வுடன் களிக்கின்றனர். மீதியானவர்கள் தங்களுக்கு ஏற்படும் இடையூறுகளை வெற்றிகொள்ள இயலாமல் மன அழுத் - தத்திற்கு உள்ளாகித் தமது வாழ்க்கைப் பயணத்தைச் சின்னாபின்னமாக்கு - கின்றனர் அல்லது பிடிப்பின்றி வாழ்ந்து நிம்மதி இன்றி அலைகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் எமது சமூகத்தை எடுத்துக்கொண்டால் அவர்கள் காலைமுதல் இரவில் படுக்கைக்குச் செல்லும் வரையிலும் ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கின்றனர். உதாரணத்திற்கு பெற்றோர் சமூகத்தை எடுத்துக் கொண்டால் காலையில் பிள்ளைகளை உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் சேர்க்க வேண்டும், வேலைக்குச் செல்ல வேண்டும், இவற்றுடன் வீட்டு நிர்வாகத்தைக் கவனிப்பது, தமது வேலைகளைச் செய்வது என நமக்குரிய செயற்பாடுகளைச் செய்கின்றார்கள். அவ்வாறேதான் மாணவர் சமூகமும் ஆசிரியர் சமூகமும் என ஒவ்வொரு சமூகமும் தமக்குரிய செயற் - பாடுகளை செய்கின்றனர். இவ்வாறு செய்து வருவதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. ஆனால் அவர்களது அன்றாட நடவடிக்கையின் போது ஏதோ ஒரு வகையில் இடையூறு ஏற்படும் போது மனஅழுத்தம் ஏற்படுகின்றது.

இன்றைய நவீன உலகில் மனித சமூகத்திற்கு பலவகையில் இடையூறுகள் ஏற்படுகின்றன. தொலைக்காட்சி, தொலைபேசி இணையம், குடும்பப் பிரச்சினை, தொழில்புரியும் இடம், மனித செயற்பாடு என அவற்றில் பல அடங்கும். தொலைக்காட்சியை எடுத்துக்கொண்டால் இப்பொழுது ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் நாடகத் தொடர்கள் அனைத்தும் எமது கலாசார சமூக விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட வையாகவே காணப்படுகின்றன. உதாரணத்திற்கு கொலை, பழிவாங்குதல், சூழ்ச்சி செய்தல், ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் போதே காதல், போதைப் பொருட் பாவனை, ஒழுக்கமற்ற நங்கையின் தொடர்பு என சொல்லிக் கொண்டே போகலாம். இவற்றை எல்லாம் பார்க்கும் போது எமது சமூகத்தின் மனதில் இவை பதிந்து விடுகின்றன. அதனால் நாமும் இவ்வாறு நடந்தால் பிழை இல்லை என்ற முடிவுக்கு வருகின்றார்கள். உதாரண -மாக நல்ல நண்பர் இருவர் உரையாடிக் கொண்டிருந்தால் இவர்களும் கற்பனை செய்து அவர்களை இகழ்ந்து பேசுவதும் மற்றவருக்கு SMS அனுப்புவதும் நடைபெறுகின்றது. இவ்வாறான இடையூறு களினால் நண்பர்கள் இருவருமின்றி அவர்களது குடும்ப அங்கத்தவர்களுமே அழுத்தங்களுக்கு உள்ளாக்கப் படுகின்றனர்.

அவ்வாறே இன்றைய இயந்திரமயமான உலகிலும் சில சம்பவங்கள் ஏற்படுகின்றன. புரிந்துணர்வின்மை காரணமாக தகாத வார்த்தைகளைப் பேசி விடுதல், ஆசைகள் காரணமாக தவறான நடத்தையில் ஈடுபடுதல், வருமானப்



பற்றாக்குறையால் கணவனோ, மனைவியோ வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லுதல் போன்ற பல காரணங்களால் மன அழுத்தங்களுக்கு உள்ளாக்கப் -படுகின்றனர். ஏன் இன்று இணையத்தளங்களில் வெளியாகின்ற செய்திகள், படங்கள், போட்டோக்கள் மூலமும் பல குடும்பங்கள் மன அழுத்தங்களுக்கு உள்ளாகி தாம் குடியிருந்த வீட்டையோ, நாட்டையோ விட்டுச் செல்கின்றனர். எனவே மனிதனாகப் பிறந்த நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இடையூறுகளால் பாதிக்கப்பட்டு மன அழுத்தங்களுக்கு உள்ளாகி உள்ளோம்.

இவ்வாறான பாதிப்புக்களால் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியோர் தமது உடல், உள செயற்பாடுகளில் பல அறிகுறிகளை வெளிக்காட்டுவர்.

**உடல் நிலையில்**

- தலையிடி, தலைவிறைப்பு
- நெஞ்சு நோ, நெஞ்சுக்குத்து
- கை, கால் குளிர்தல்
- நித்திரை இன்மை
- பெருமூச்சு விடுதல்
- கண்வலி, கண்குத்து
- உடற் பலவீனம், உடல்நோ, உடல்மெலிவு
- சோர்வு, படபடப்பு, நடுங்குதல், களைப்பு, மயக்கம், போன்ற பல உடலியல் செயற்பாடுகளை வெளிக்காட்டுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள நிலையில்**

- கோபம், எல்லை மீறிய கோபம்
- கவலை, ஏக்கம், பயம்
- விரக்தி, வெறுப்பு, எரிச்சல்
- வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், குழப்பம்
- மனச்சோர்வு, பதற்றம், நம்பிக்கை இன்மை

போன்ற பல உள உணர்ச்சிகளை வெளிக்காட்டுவர்

எனவே இவற்றை சரியான முறையில் கையாண்டு வெற்றி அடைய வேண்டும்". நீர் ஒரு இடத்தில் தேங்கி நின்றால் சாக்கடையாகி நாற்றமெடுக்கும். அவற்றை சரியான வாய்க்காலில் ஓடவிட்டால் அதற்குரிய இடத்திற்கு சென்றடையும். இவ்வாறுதான் மனமும் மனதில் ஏற்படும் அழுத்தங்களை இறக்கி மனதைக் களங்கமில்லாமல் வைத்துவிட்டால் நமது வாழ்க்கைப் பயணத்தை சிறப்பாக அமைக்க முடியும்.

**அதற்கான சில வழிகள்....**

- உங்களில் நம்பிக்கை வைத்தல்
- குடும்ப அங்கத்தவர்களில் நம்பிக்கை வைத்தல்
- கிரமமாக உடற்பயிற்சி செய்தல்
- உங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் மனம் விட்டுப் பேசுதல்
- உங்களுக்குப் பிடித்த தெய்வத்தை மானசீகமாக வழிபடுதல்
- சூழலை ரம்மியமாக வைத்திருத்தல்
- மனதுக்கு இதமான பொழுதுபோக்குச் செயற்பாட்டில் ஈடுபடுதல் (மீன் வளர்த்தல், பூச்செடிகள் நடல், மனதுக்கு பிடித்த இசை கேட்டல் வாசித்தல்....)
- விட்டுக் கொடுத்து போதல்
- தியானங்களில் ஈடுபடுதல்
- மூச்சுப் பயிற்சி செய்தல்
- யோகா செய்தல்
- மனதில் ஏற்படும் அழுத்தங்களை நம்பிக்கையானவருடன் பகிர்ந்து கொள்ளுதல்
- வேலைகளைத் திட்டமிட்டுக் கொள்ளுதல்
- குடும்பத்துடன் ஓய்வு நாட்களில் பொழுதைக் கழிக்க சுற்றுலா செல்லல்
- நல்ல நண்பர்களை வைத்திருத்தல்
- உறவினர் வீட்டுக்குச் சென்று வருதல்
- மற்றவர் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தல்

எனவே இவ்வாறான சில வழிமுறைகளைக் கடைப் பிடித்து மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டு வாழ்வை வளமாக்கி மகிழ்ச்சியான சமூக வாழ்க்கை வாழ முன்வருவோம்.



**திருமதி. செல்வினி உதயகுமார்**
*(BA, PGDE,Dip. in. Pros psy sow Inter)*
ஆசிரியர் - வழிகாட்டல் ஆலோசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கமலினி எனும் மாணவி தரம் ஐந்தில் படித்துக்கொண்டிருக்கின்றாள். அவள் இரண்டாம் தவணைப் பரீட்சையில் முதலாம் பிள்ளையாக வந்தாள். ஆனால் அவளுக்கு ஒரே ஒரு சந்தேகம். இதை தன் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரைந்தாள். "ஆண்டவர் ஆபிரகாம், மோசே என்பவர் பலருக்குக் காட்சியளித்தார். இப்போது ஏன் காட்சியளிப்பதில்லை" என்று கேட்டாள். அந்த வழியால் குருவானவர் வந்தார். அவர் ஆசிரியர் யோசிப்பதையும் அருகில் கமலினியையும் கண்டார். ஆசிரியரிடம் காரணத்தைக் கேட்டார். ஆசிரியரும் காரணத்தைக் கூறினார். பின்பு குருவானவர் சிந்தித்து விட்டு கமலினியை அழைத்தார். கமலினி வந்து "என்ன குருவானவரே?" என்று கேட்டாள். குருவானவர் மின்குமிழை ஒளிர வைக்கச் சொன்னார். கமலினி மின்குமிழை ஒளிர வைத்தாள். பின்பு குருவானவர் மெழுகுவர்த்தியை எரித்து கையில் ஏந்திக்கொண்டு எதையோ தேடினார்.

"எதைத் தேடுகிறீர்கள்?" என்று கமலினி கேட்டாள். குருவானவர், "ஒளியைத் தேடுகிறேன்" என்றார். கமலினி "சூரியன், மின்குமிழ், மெழுகுவர்த்தி என்பன ஒளியைத் தரும் போது நீங்கள் ஏன் ஒளியைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டாள். குருவானவர் பின்வருமாறு பதிலளித்தார்.

"அதேபோல் தான் நீ கேட்ட கேள்வியும். அதாவது கடவுள் ஏன் காட்சி தருவதில்லை என்ற வினாவுக்கான விடை, கடவுளின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் செயற்பாடுகள் ஏராளம் இன்னும் உலகில் உண்டு. இதனை அறியத்தான் சிந்தனைத் தெளிவு போதாது" என்றார். தன்னுடைய அறியாமையை அறிந்த கமலினி குருவானவரைப் பார்த்து நன்றி கூறி அங்கிருந்து விடைபெற்றாள்.



**ஜே.றோஜினி** – தரம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோரின் பெருமைகள்

1) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது சான்றோர் வாக்கு.
2) இறைவன் எமக்கு அளித்த இனிய பெற்றோர் முதன்மையானவர்கள்.
3) பெற்றோர் எம்மைக் கண்ணும் கருத்துமாக வளர்க்கின்றார்கள்.
4) எமக்கு நல்லறி வூட்டுவதில் பெற்றோர்கள் முன் முன்நிற்கின்றார்கள்.
5) எமது உடல், உள வளர்ச்சிக்குக் காரணமாக இவர்கள் அமைகின்றனர்.
6) இவ்வுலகில் பெற்றோரின் அன்பிற்கு ஈடு இணை கிடையாது.
7) எமக்குச் சிறு துன்பங்கள் ஏற்பட்டாலும் அதைப் பெரி தாக எண்ணி கவலை கொள்பவர்கள் பெற்றோர்கள்.
8) எமது எதிர்கால வாழ்வின் உயர்வுக்கு பெற்றோர்கள் வழிகாட்டுகின்றனர்.
9) நாம் ஒழுக்கசீலர்களாக வாழ பெற்றோர்கள் வழி காட்டுகின்றனர்.
10) எமது விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பெற்றோர்களை நீடூழி வாழ்க எனப் போற்றி வாழ்வோம்.



சு.மதுராங்கி - தரம் 3C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sri Lanka Association for the Advancement of Science



## அனர்த்த முகாமைத்துவ பரிசளிப்பு விழா



## பெற்றோர்களின் சிரமதானம்



## சாரணர் - Scouts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Social Event




# Leadership Programme




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான பாடசாலைக் கலாசாரமும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் பங்களிப்பும்

ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்துவமான ஒரு பாடசாலைக் கலாசாரம் *(School Culture)* உண்டு. ஒரு பாடசா - லையின் கலாசாரமே அப்பாடசாலையின் பயன்தரு தன்மை, வெளியீடு, நடத்தைக் கோலம் என்பவற்றை வெளிக்காட்டும் கண்ணாடி ஆகும்.

பாடசாலையின் கலாசாரம் என்பது பாடசாலையில் பணியாற்றுவோர், பயன் பெறுவோர் எவ்வாறு செயற்படுகின்றார்கள், செயற்பாடுகளை எவ்வாறு வெற்றிகொள் கிறார்கள் என்பதை வெளிக்காட்டுதல் ஆகும். இவ்வெளிப்பாடுகளை பார்வை யாளர்கள் அவதானித்து அப் பாடசாலை -யின் பயன்தரு தன்மையை உணர்வர், உய்த்தறிவர்.

பாடசாலைக் கலாசாரத்தை வெளிக் காட்டும் பிரதான அம்சம், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் ஆகும். எனவே ஒரு பாடசா -லையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர் -கள் கொண்டுள்ள பற்றுதல்கள் விருப்பங் -கள், அக்கறையின் அளவு, தன்மை என்பன பாடசாலைக்கலாசாரத்தை வெளிப்படுத்தும் காரணியாக செல்வாக்கு செலுத்துகின்றது.

பாடசாலையில் மேற்படி அங்கத்தவர் -களின் நடத்தைக் கோலத்தை அவதா - னிக்கும் ஒருவர் பாடசாலைக் கலாசாரம் பற்றி நன்றாகவோ, குறைவானதாகவோ, மத்திமமாகவோ மதிப்பிட முடியும்.

பாடசாலையின் காலாசாரம் மரபு வழியாகத் தொடர்ந்து பேணப்படுவது வழக்கம். (உ+ம்) மாணவர்கள் புதிதாக வரும் போது அவர்கள் பழைய, தற்போது கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களைப் பின்பற்றுகின்றனர். புதிதாக வரும் ஆசிரியர்கள் ஏற்கனவே கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து அப்பாடசாலைக் கலாசாரத்தைப் பெறுகின்றனர்.

பாடசாலையில் நீண்டகாலமாக கடமையாற்றும் ஆசிரியர்கள் அந்தப் பாடசாலை தொடர்பாக பெற்றுள்ள பிரதிபலிப்புக்கள், வெளிப்படுத்தும் கண்ணோட்டங்கள், முன்வைக்கும் விமர்சனங்கள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் மூலமும் புதிய ஆசிரியர் -கள் கலாசாரத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்கின்றனர்.

**பாடசாலைக் கலாசாரத்தில் நன்கு அவதானிக்கக்கூடிய விடயங்கள் :**

1) ஆசிரியர், அதிபர் புரிந்துணர்வுடன் செயற்படல் அல்லது முரண்பாட்டுடன் செயற்படல்.
2) ஆசிரியர் - மாணவர் உறவு சீராக பேணப்படல் அல்லது முரண்பாடடைதல்.
3) நோக்கத்தை புரிந்து மாணவர் - ஆசிரியர் வெற்றிகரமாக அடைதலுக்கு முழு ஆர்வத்தையும் காட்டல் அல்லது ஏனோ தானோ என்று இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஆசிரியர்கள் மன நிறைவுடன் கற்பித்தல் அல்லது கற்பித்தலில் விருப்பமின்மை.

5) ஆசிரியர்கள், மாணவர்கள் விருப்புடன் பாடசாலை வரல் அல்லது ஓய்வு, இடமாற்றம்

6) பாடசாலைக் கடமைகளில் ஆர்வம் அல்லது நாட்டமின்மை.

மேற்படி விடயங்களை நோக்குவதன் மூலம் பாடசாலையின் கலாசார மேன்மையில் ஆசிரியர்களின் பங்களிப்பே அதிக அடித்தளமாகவுள்ளது என்பதை அவதானிக்கலாம்.

**பாடசாலைக் கலாசாரத்தைக் கட்டி எழுப்பத் தேவையான தோற்றப் பாடுகள்:**

- பாடசாலை தொடர்பான தெளிவான இலட்சியத்தினை பாடசாலைச் சமூகம் கொண்டிருக்கின்றது என்பதனை முகாமைத்துவம் புரிந்துகொள்ளல்.

**பாடசாலைக் கலாசாரம் என்பது நிலத்தின் அடியில் ஓடிக் கொண்டிருக்கும் கண்ணுக்குத் தெரியாத சிறு சிறு பிணைப்புக்கள் கொண்ட நீரோட்டம் போன்றது. சிறு சிறு பிணைப்பு என்பது ஆசிரியர், மாணவர், அதிபரிடையே காணப்படும் சமவலுவுள்ள பரஸ்பர உறவுகளும், பற்றுதல்களும் -**
***(Tel fort 1996)***

- மேற்படி நபர்கள் (அதிபர், ஆசிரியர்) புரிந்துணர்வுடன் செயற்படல்.
- இலட்சியம் நோக்கிய சிந்தனையைத் தொடர்ச்சியாக முகாமைத்துவம் ஊக்குவித்தல் வேண்டும்.
- பாடசாலை அனைத்து செயற்பாடுகளிலும் ஆசிரியர், மாணவர்கள் இணைந்து செயற்படக்கூடியவாறு வேலைத் திட்டங்களைத் தயாரித்தல்.
- ஆசிரியர்கள், மாணவர்கள் இடையேயான இடைத்தாக்கங்கள், தரம் வாய்ந்ததாகவும், விருத்திசார் போக்குடையதாகவும், விழுமியத் தொகுதி உடையதாகவும் உள்ளதா? எனத் தொடராக அவதானித்து ஊக்குவிக்கும் சூழ்நிலை காணப்படல்.

அறிவுபூர்வமான நம்பிக்கைகள், வரலாற்று நோக்குகள், மரபுரிமைகள் என்பவற்றைப் பாதுகாத்தலுடன் தனித்துவம் பேணல் என்பவற்றிற்குச் சந்தர்ப்பம் வழங்கல்.

**சிறப்பான பாடசாலைக் கலாசாரத்தை ஏற்படுத்த சில உத்திகள் :**

பொதுவாக கல்விசார் சமூகம் பின்வரும் விடயங்களில் நம்பிக்கை வைத்து செயற்படுவதன் மூலம் மேற்படி கலாசாரத்தைச் சிறப்பாக அமைக்கலாம்.

**பாடசாலை என்பது ஒரு கூட்டுச் சமூகம் என்பது.**

- இவர்களிடையே பரஸ்பர நம்பிக்கை உணர்வும், பங்காளிகளாகவும் இயங்கும் நிலையும் அனைவரது பங்களிப்பும் உச்சமட்டத்தில் காணப்படல்.
- ஏனையோரின் செயற்பாடுகளிலும் தாமாக முன் வந்து பங்கேற்றல்.
- வெற்றியை சமமாக பங்கிடலும் பின்னடைவிற்கான காரணத்தை சேர்ந்து தேடலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொது இலக்கின் மீது நம்பிக்கை கொள்ளல்.**

- ஆசிரியர் ஆக்கபூர்வான சிந்தனை - களை வெளியிடல். இதனை ஏற்கும் பக்குவம் சக ஆசிரியர்களிடமும், அதிபரிடமும் காணப்படல்.
- தேசிய கலைத்திட்ட மாற்றங்களை ஏற்கும் தன்மைகாணப்படல்
- இவற்றை ஏற்க மறுக்கும் பழமைப் பற்றுள்ள ஆசிரியர்கள், பொது இலக் -கினை திருத்தியமைக்க உந்துசக்தி இன்றி காணப்படல், செழுமையான கலாசாரம் ஏற்படுவதற்கான வாய்ப் - பைக் குறைத்தல்.

**பாடசாலை மட்டத்தில் பிரச்சினைகள் தீர்த்தல்.**

எந்த ஒரு பிரச்சினைக்கும் பாடசாலை மட்டத்தில் தீர்வு காணலாம் என்ற மனப் பாங்கு ஆசிரியர்களிடம் காணப்படல் வேண்டும்.

- இம் மனப்பாங்கு பாடசாலைக் கலாசார விருத்திக்கு முக்கிய பங்களிப்பினைத் தரும்.
- பாடசாலையின் அபிவிருத்தி, பிரச்சினை தீர்த்தல் போன்ற விடயங்களுக்கு கூட் -டாக முடிவெடுத்தல்.
- தனித்தனியாக, குழுவாக செயற்படும் போது பாடசாலை கலாசாரம் சீரழிவது -டன் அபிவிருத்தியும் தடைப்படும்.
- **"பிரச்சினையுள்ளவர் இல்லாத இடத் - தில் பிரச்சினை பற்றி விமர்சிப்பது தவிர்க்கப்படல் வேண்டும். பேசுதல் பயன் தராது"**
- **உயர்வான எதிர்பார்ப்புக்களுடன் இயங் -குதல்.**

  எந்த ஒரு செயற்பாட்டிலும் உயர் வான எதிர்பார்ப்பு காணப்படல் வேண் -டும். எந்த ஒரு செயற்பாட்டினதும் இறுதிப் பெறுபேறு உயர்வானதாக வும், தரமானதாகவும் அமைய ஆசிரி - யர்கள் உயர்மட்ட இலக்குகளில் நம்பிக்கை கொள்ளல் வேண்டும்.

- **குழுக்களிடையே நம்பிக்கைத் தன்மை.**

  பாடசாலைகளில் தினசரி நடவடிக்கைக் -காகவும், எதிர்கால நடவடிக்கைகளைத் தீர்மானிக்கவும் வேறு பல குழுக்கள் காணப்படும். ஆனால் அவற்றின் நோக் கம், முகாமைத்துவப் பரவலாக்கம், பிரச்சினை தீர்த்தலில் ஒன்றி ணைதல், தகவல் பரிமாற்றம், தொடர்பான இடை வினையாற்றுகை என்பன காணப்படு -வதுடன் நம்பிக்கையுடன் தொடர்பாடல் இடம் பெறவேண்டும்.

தற்காலிகக் குழுக்கள், நிரந்தரக் குழுக்களுக்கு வேறுபட்ட நபர்கள் காணப் படல் சிறப்பாக இருக்கும். ஆனால் தற்காலிகக் குழுக்கள் நிரந்தரக் குழுக்க ளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் சிறப்பான கலாசாரமாகும்.

சிறு குழுக்களிடம் நிரந்தரக் குழுக்கள் கருத்துக்கள் பகிர்ந்துகொள்ளா விடின் கலாசாரம் சீர்குலைய வாய்ப்புண்டு.

**பாடசாலைக் கலாசாரம் வாழ்நாள் கற்ற -லைத் தருவது**

பாடசாலைக் கலாசாரம் மாண வர்கள் வாழ்க்கை முழுவதும் கடத்தப்பட வழி வகுக்க வேண்டும் என்ற நம்பிக்கை ஆசிரியரிடம் காணப்படல் வேண்டும்.

வகுப்பறைப்பாடக்கற்றல், வாழ்க்கை முழுவதும் கற்றலை ஊக்குவிக்கப் போது மானதல்ல. இங்கு, ஆசிரியர்களின் முன் மாதிரியான நடத்தைகள் மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்கான விடயங்களாக அமைதல் வேண்டும்.

(உ+ம்) ஒரு ஆசிரியர் மாணவர்களுடன், சக ஆசிரியர்களுடன் உரையாடல், பெற்றோருடன் உரையாடல், மழை நாளில் ஓய்வறையில் குடை வைக்கும் விதம், உடையணிதல், என்பன மாணவர்கள் கற்பதற்கான விடயமாக அமையலாம்.

அதாவது பாடசாலையில் மாணவர்-கள் கற்றுக்கொள்ளும், அவதானிக்கும் எந்த ஒரு விடயமும், தமது வாழ்நாள் பூராகவும் பிரதிபலிக்கும். ஆகவே கல்வி சார், சாரா ஊழியர்கள் சிறப்பான கலாசா-ரத்தைப் பேணல் அவசியம்.

**வளப்பகிர்வில் உண்மைத் தன்மை :**

பாடசாலைக் கலாசார விருத்திக்கு ஆசிரியர்களிடம், அதிபரிடம், காணப்பட வேண்டிய சிறப்புத் தன்மை வளப்பகிர்வில் உண்மைத் தன்மை.

அருமையாகக் கிடைக்கும் வளங்கள் அனைத்தும் ஆசிரியர்களூடாக சகல மாணவர்களுக்கும் கிடைக்கத்தக்கதாக பொருத்தமானதாகப் பயன்படுத்துதல்.

(உ+ம்) வளமான பாடசாலை ஒன்றில் உள்ள விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு பொறுப்பான ஆசிரியர், ஏனைய ஆசிரி-யர்களுடன் புரிந்துணர்வுடன் ஒரு எழுதப்படாத ஒப்பந்தமொன்றைப் பேணல். (அனைவரும் ஆய்வுகூடம் பயன்படுத்த அனுமதித்தல்).

**பெற்றோரின் ஈடுபாடு நன்மையானது என்ற எண்ணம் :**

பாடசாலைச் செயற்பாடுகளில் பெற்றோரின் செயற்பாடுகள் நன்மையானதே என்ற நம்பிக்கை ஆசிரியர்களிடம் கட்டி எழுப்பப்படல் வேண்டும்.

மாணவர்களின் அபிப்பிராயங்கள், விழுமியங்கள் என்பவற்றில் பெற்றோரின் இடைதாக்க திறன்கள், பெற்றோரின் செல்வாக்கு என்பன நிச்சயம் இடம்பெறும். ஆகவே பெற்றோருடன் மாணவர்கள் நேர்த்தன்மையாக உரையாடும் வகையில் மாணவர்கள் வலுப்படுத்தப்படல்.

சில ஆசிரியர்கள் பெற்றோரைப் பாடசாலை செயற்பாடுகளில் இணைப்பதைத் தவிர்த்து, மாணவரிடம் பெற்றோ-ரைக் கீழ்த்தரமாக கதைப்பதுவும் பெற்றோர் இடைஞ்சலாக அமைவார்கள் எனக் கருதுவதும், பெற்றோர்க்குப் பாடசாலைக் கருமங்கள் தெரியாது என ஒதுக்குவதும், இந்நிலைக்கு இட்டுச் செல்வதுடன் பாடசா-லைக் கலாசாரத்தின் விருத்தியில் இவை பாதிப்பையும் ஏற்படுத்தும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை அதிபர், ஆசிரியர்கள் கருத்தில் கொண்டு செயற்-படுவதன் மூலம் பாடசாலைக் கலாசாரம் சிறப்பாக அமைவதுடன் முன்னேற்றத்திற்-கும் பங்களிப்புச் செய்யும். சமூகத்தின் பார்வைக்கும் தெளிவு கிடைக்கும் என்பது திண்ணமாகும். மேற்படி விடயங்களை நெறிப்படுத்தும் திறன் பங்களிப்பு, அர்ப்பணம், நெறியாள்கை என்பவை அதிபர் மற்றும் முகாமைத்துவத்திடம் காணப்படுமாயின் கலாசார மேம்படுத்தலை மிகவும் இலகுவாக அடையலாம் என்பது வெளிப்படை.




**திரு.மயில்வாகனம் மகேந்திரன்**
கல்வி முதுமாணிப்பட்டதாரி
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Six ethics of life



Before you pray – **Believe**

Before you speak – **Listen**

Before you – **Earn**

Before you write – **Think**

Before you quit – **Try**

Before you die – **Live**

## <u>Interesting Research about All Blood Group</u>

A (+) : Good Leadership

A (-) : Hardworking

B (+) : Can give up (Sacrifice) for others

B (-) : Non Flexible, Selfish & Sadistic

O (+) : Born to help

O (-) : Narrow Minded

AB (+) : Very Difficult to understand

AB (-) : Sharp and Intelligent

## Very Nice Definition of Time

- Time is slow when you wait!
- Time is fast when you are late!
- Time is deadly when you are sad!
- Time is short when you are in pain!
- Time is log when you feel bored!

Every time is determined by Your feelings and your psychological Conditions and not by clocks So Have a "Nice Time always"

## TO GO

Your breath comes.... TO GO

